# வீரகத்திப்பிள்ளையார்

## கொல்லங்கலட்டி

1968

University of Jaffna
235.4
KOL
249678(AR; MAIN)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லங்கலட்டி

# வீரகத்திப்பிள்ளையார்



## 1968
## சிறப்பு மலர்

265
KOL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD

ONE-DOLLAR

DOLLAR BRAND

# டொலர்

## அலுமினியம்

உள்நாட்டு உற்பத்தியின் உயர்ந்த சாதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லங்கலட்டி

# வீரகத்திப் பிள்ளையார் கோவில்

1968

# சிறப்பு மலர்

2007 AR
235.4
KOL
ARCHIVES
University of Jaffna
249678
Library
249678
249678

பதிப்பு
நியூ லீலா அச்சகம்
33, சென். செபஸ்தியன் மேடு
கொழும்பு 12

கொல்லங்கலட்டி
வீரகத்திப் பிள்ளையார் கோவில்
திருப்பணிச் சபை வெளியீடு
கொழும்புக் கிளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | செயலாளர் சமர்ப்பணம் | ... | திரு. வ. சி. சங்கரப்பிள்ளை | |
| 2. | கொல்லங்கலட்டி வீரகத்திப்பிள்ளையார் கோவில் திருப்பணி | ... | திரு. வி. நடராசா, பெருளாளர். | |
| 3. | வீரகத்திப்பிள்ளையார் கோவில் திருப்பணிச் சபையின் கொழும்புக் கிளை | ... | திரு. கு. பாலசிங்கம், C. C. S., போஷகர். | |
| | | | திரு. சி. கந்தையா, தலைவர். | |
| 4. | பாலூட்டி - ஏடு தொடக்கம் | ... | சமாதான நீதவான் | |
| 5. | திருப்பணிக்கு உதவுக | ... | ச. த. சின்னத்துரை, உப தலைவர். | |
| 6. | கோவில் திருப்பணி | ... | சமாதான நீதவான் வ. சரவணமுத்து, கொ. வீ. பி. கோ., திருப்பணிச் சபைத் தலைவர். | |
| 7. | வீரகத்திப்பிள்ளையார் கோவில் வரலாறு | | சைவத் திரு. பொ. அம்பலவாணக் குருக்கள் | 7 |
| 8. | கடல்கடந்த கணபதி | ... | தென் புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை | 9 |
| 9. | நந்தாத் தேன் | ... | வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் | 14 |
| 10. | பிரணவப் பொருளாம் பெருந்தகை | ... | திரு தெ. து. ஜயரத்தினம், J. P. | 17 |
| 11. | கிழவியும் காதமும் | ... | திரு. கி. வ. ஜகந்நாதன் | 19 |
| 12. | சமயவாழ்க்கையின் முக்கிய அம்சம் | ... | பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் | 25 |
| 13. | கருணை | ... | அருள் மோகி அரசு | |
| | | | திருமுருகா கிருபானந்த வாரியார் | 31 |
| 14. | கணபதி | ... | ஓர் பக்தன் | 39 |
| 15. | பிள்ளையார் சுழி | ... | திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை | 40 |
| 16. | மனிதப்பிறவி | ... | திரு. த. சரவணபவன் | 43 |
| 17. | வீரகத்தி விநாயகர் திருவூஞ்சல் | ... | நவாலியூர் திரு. க. சோமசுந்தரப் புலவர் பாடியது | 47 |
| 18. | வீரகத்திப்பிள்ளையார் பேரில் | ... | சைவத்திரு பொ. அம்பலவாணக் குருக்கள் - பாடியவை | 50 |
| 19. | எங்கள் பிள்ளையார் | ... | திரு. சு. துரைசிங்கம் | 52 |
| 20. | கந்தபுராணக் காப்பு | ... | பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை | 57 |
| 21. | விநாயகர் திருவுருவின் தத்துவம் | ... | திரு. ஆ. காசிநாதன், ஆசிரியர். | 61 |
| 22. | விக்கினேசுவரப் பெருமான் | ... | பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை | 65 |
| 23. | தேரின் தத்துவார்த்தம் | ... | கணேச பக்தன் | 67 |
| 24. | ஆலயமும் திருப்பணியும் | ... | திரு. செ. இலங்கைநாயகம் | 71 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# செயலாளர் சமர்ப்பணம்

கொல்லங்கலட்டி வீரகத்திப்பிள்ளையார்திருப்பணிச் சபை, மூன்று ஆண்டுகள் நிறைவு பெற்று இப்போது தனது நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கின்றது. இவ்வேளையில் எமது சபை எவ்விதம் தாபிக்கப்பட்டது, அதன் முக்கிய நோக்கங்கள் எவை, அது இதுகாறும் எவ்வாறு செயலாற்றியது என்பனவற்றையெல்லாம் யாவரும் அறிந்திருத்தல் வேண்டும் என்பது கூறுமலே அமையும். சங்கத்தின் கௌரவ செயலாளர் என்ற முறையில் இதனை யான் பணிவுடன் உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

அருளுடை விநாயகப் பெருமான் திருவருளால், கொல்லங்கலட்டிக் கிராமத்தைச் சார்ந்த மாவை வாழ் மக்களாகிய நாமெல்லோருமாகக் கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோவில் திருப்பணி வேலைகள் யாவற்றையும் இனிதுற நிறைவேற்ற வேண்டும் என்ற பெருநோக்குடன் 13-12-64ல் கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகோவில் மண்டபத்தில் இத்திருப்பணிச் சபையின் கொழும்புக்கிளையினை அங்குரார்ப்பணம் செய்து வைத்தோம். முன்னெல்லாம் "எமது சபை எதையும் சாதிக்கவில்லை, வியக்கக்கூடியமுறையில் எதையும் செய்யவில்லை என்று சொன்னலும் முக்கியமான சில முயற்சிகளைச் செய்துள்ளது என்பதையேனும் எவரும் மறுக்க முடியாது. மேற்படி அங்குரார்ப்பணக் கூட்டத்தில் முக்கியமான விடயமாகத் தேர்த் திருப்பணிக்கு நிதி திரட்டுதல் எடுக்கப்பட்டது. இவ் விடயத்தை ஆராய்ந்த சபையினர் ஏதாவதொரு கலை நிகழ்ச்சியை நடாத்தி நிதி திரட்டுவது என்ற முடிவை ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

ஆதரவு நிறைந்த கொட்டாஞ்சேனைக் கலையரங்கம் (இசை நடனக் கல்லூரி) முன் வந்து தயாரித்து அளித்த "மாதவி துறவு" என்னும் நாட்டிய நாடகத்தை வெகுவிரைவில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்துவதாக இருந்தோம்; இதன் மூலம் நிதி திரட்ட எண்ணியிருந்தோம். ஆனல் பல வித இடையூறுகளாலும் இந் நாட்டிய நாடகத்தை அரங்கேற்ற முடியாத நிலை ஏற்பட்டது. இதனல் நம் திட்டங்கள் யாவும் செயலற்றுப் போய்விட்டன. எனவே, யாம் மிகவும் கவலையடைந்தோம். எனினும், உற்சாகத்தை யாம் கைவிடவில்லை. இதன் பயனுக எனது இதயத்தில் எந்நாளும் நினைவிலிருக்கும் கொழும்புக் கலாவிருத்திச் சங்கத்தின் உப தலைவன் என்ற முறையில் கலைச் சங்கத்தார் நடாத்திய இறுதிப் போட்டியிற் கலந்து கொள்வதற்காக மேற்படி கலா விருத்திச் சங்கத்தின் சரித்திர நாடகமாகிய "கலையின் பரிசு" என்னும் நாடகம், யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் அரங்கேற்றுவதற்காகக் கொண்டு செல்லப்பட்டது. நவம்பர் மாதம் 21-ம் திகதி 1965ம் ஆண்டு இந்நாடகம் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடை பெறவிருந்தது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் இந் நாடகத்தையே அடுத்த நாள் 22-11-65ல் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடாத்தி எம்திருப்பணி நிதிக்குப் போதிய நிதி திரட்டும் நோக்கத்துடன், கலா விருத்திச் சங்கத்தாருடன் தொடர்புகொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது சம்மதத்தைப் பெற்று, இந் நாடகத்தை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடாத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யும் வண்ணம் திரு வ. சரவணமுத்து ஜே. பி. அவர்களுடன் கடிதமூலம் தொடர்பு கொண்டேன். அத்துடன் ஆவல் மிகுதியால் யான் நேரடியாக யாழ்ப்பாணம் சென்று திரு. வ சரவணமுத்து அவர்களுடனும், திருப்பணிச்சபையைச் சார்ந்த பிற அன்பர்களுடனும் கலந்து ஆலோசித்த போது அவர்கள் அந்நேரம் இருந்த சூழ்நிலையில் இந் நாடகத்தை நடாத்தி நிதி திரட்ட முடியாது எனக் கூறிவிட்டார்கள். எனவே இவ் வரிய சந்தர்ப்பத்தையும் இழக்க வேண்டி நேரிட்டு விட்டது. இலவசமாகக் கலாவிருத்திச் சங்கத்தினர் எமக்குத் தந்த நாடகத்தை நடாத்த முடியாது போனதையிட்டு அளவற்ற கவலையடைந்தோம். எம் இரண்டாவது முயற்சியும் தோல்வியுற்றது. எனினும் யாம் ஆர்வத்தைக் கைவிடவில்லை.

இவ்வாண்டு எமது சபை மீண்டும் புத்துயிர் பெற்றது சுயநல விருப்போ, பெயர் தற்புகழ்ச்சி ஆகியவற்றிற்கான பேராசையோ, பட்டம் பதவிகளுக்கான மோகமோ இல்லாத ஒரு சில அன்பர்களின் உறுதி கொண்ட உழைப்பின் பயனாக கொழும்பிலே வெள்ளவத்தைச்சபையர் தியேட்டரில் 1968ம் ஆண்டு யூன் மாதம் 17ந் திகதி திங்கட்கிழமை சிலம்பின் கதைகூறும் சிலப்பதிகாரம் விளைத்த "பூம்புகார்" என்னும் திரைப்படத்தைக் காட்டி, அதன் மூலம் எம் திருப்பணி வேலைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய பணத்தைத் திரட்ட உத்தேசித்தோம். எமது இம் முயற்சி இனிதுற நிறைவேறியது கணபதியின் கருணையால்தான் என்றே கூறுதல் வேண்டும். இச் சகாய நிதி உதவிப் படக்காட்சி மூலம் எமக்கு கிடைக்கும் நிதியைத் தேர்த் திருப்பணி வேலைகள் நிறைவெய்த அளிப்போம்.

ஈழத்தின் தலை போல் விளங்கும் யாழ்ப்பாணத்தில், கொல்லங்கலட்டி என்னும் பதியிற் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் விரகத்திப் பிள்ளையார் கோவிலின் வரலாறு, விநாயக வழிபாட்டின் முக்கியத்துவம் திருப்பணி வேலைகளின் முன்னேற்றம் என்பனவற்றைப் பற்றி அறிஞர்கள் பலர் எழுதியுதவிய கட்டுரைகள் அடங்கிய இச் சிறப்பு மலரை மிகவும் மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றோம். இம் மலரைக் குறுகிய கால எல்லையில் மிகவும் அழகாகக் குறைந்த செலவில் அனைவரும் பாராட்டத் தக்க முறையில் அச்சிட்டுத் தந்த நியூ லீலா அச்சக உரிமையாளரும் எங்கள் சபையின் உப தலைவருமாகிய திரு. ச. த சின்னத்துரை ஜே. பி. அவர்களுக்கு யாம் பெரிதும் கடமைப் பாடுடையோம். இப் பெருந்தகைக்கு என்றும் மறவா நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உற்ற துணை புரிந்து விளம்பரம் சேகரித்துத் தந்த பெருமக்களின் உதவியால் இம் மலர் அச்சேறி வெளிவருகின்றது. இம் மலர் விற்பனையால் வரும் நிதியும் உபகாரப் படக் காட்சி நிதியுடன் சேர்க்கப்படும். விளம்பரங்கள் சேகரிப்பதற்குத் துணை புரிந்த பெருமக்களில் சைவப் பெரியார் திரு. சு. துரைசிங்கம் அவர்களும், சைவவள்ளல் T. M. S. சண்முகம் சுந்தரம் பிள்ளை அவர்களும் எம் உள்ளங் கனிந்த நன்றிக்குரியவர்கள். இவர்களது அயராத உழைப்புக் காரணமாக இவ் விளம்பரங்கள் மூலம் எமக்குச் சேர்ந்த பணத்தில் இம் மலர் அச்சுச் செலவு போக மிகுதியான நிதியும், உபகாரப் படக் காட்சி நிதி, மலர் விற்பனை நிதியுடன் சேர்த்துத் தேர்த் திருப்பணிவேலை நிதிக்கு அளிக்கமுடிவு செய்துள்ளோம்.

ஊக்கமும் உழைப்பும் மிகுந்த வர்த்தகப் பெருமக்கள் எம் வேண்டுகோளுக்கு இணங்கி இம்மலரை மிகவும் சிறந்த முறையில் வெளியிடுவதற்கு ஆதரவு நல்கி விளம்பரங்கள் தந்து உதவினார்கள். இப்பெரும் வள்ளல்களுக்கு யாம் என்றும் நன்றியறிதலுடன் சேர்ந்த கடப்பாடுடையோம். எம் மலருக்கு அழகும் மணமும் அறிவூட்டும் ஞானமும் கொண்ட சிறந்த கட்டுரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கள் கவிதைகளை நல்கி எமக்கு ஆதரவு அளித்த அறிஞர் பெருமக்களுக்கும் எம் நன்றியை பணிவுடன் தெரிவிக்கின்றோம். இம் மலரினைச் செவ்வனே அமையுமாறு எங்களுடன் சேர்ந்துழைத்து, அச்சேற்று வதற்கு ஏற்ற வகையிற் கட்டுரைகளை திரல்பட அமைத்தளித்த அன்பர்களுக்கும், அச்சகப் பிரதிகளை ஒப்புநோக்கித் துணையாயிருந்தோருக்கும் அச்சகச் சிப்பந்திகளுக்கும் மலர்ப்பணி துரிதமாக நிறைவேற உதவிய அச்சகத்தாருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எழில் மிகு "பூம்புகார்" என்னும் திரைப்படத்தை எமக்கு இலவசமாகத் தந்து நிதி திரட்டுவதற்கு உதவி புரிந்த சினிமா ஸ்தாபனத்தாருக்கும், சபையர் தியேட்டர் உரிமையாளருக்கும் எம்சபை மனம் நிறைந்த நன்றியறிதலைச் சமர்ப்பிக்கின்றது. இத் திரைப் படத்திற் குரிய சீட்டுக்களை விற்பனை செய்து தந்த சைவ அன்பர்கள் யாவருக்கும் எம் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஏரம்பன் திருவருளால் இந்நிதி உதவிப் படக்காட்சி இனிதுற நிறைவெய்த எம் நிதி திரட்டும் நோக்கம் வெற்றி பெறச் சைவ அன்பர்கள் யாவரும் மனமுவந்து இப் படக்காட்சிக் குரிய சீட்டுகளை வாங்கி எம் நிதிக்கு உதவியமைக்காகப் பெருமக்கள் யாவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

ஐங்கரன் கோவில் திருப்பணிச் சபை நிறுவுவதற்கு முக்கியமானவராக இருந்த எமது சபையின் உபதலைவராகிய காலம் சென்ற திரு. சோ. ஆறுமுகம் அவர்கள் 'தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க வையத்துப் பிறந்து வாழ்வாங்கு வாழ்ந்து சைவம், தமிழ் ஆகிய இரண்டினையும் தன் இரு கண்களாகப்போற்றித் தன் வாழ் நாளையெல்லாம் சைவத் திருப்பணிக்கு அர்ப்பணம் செய்தார். இப்பெருந் தகையையும் யாம் என்றும் மறக்கவே முடியாது.

ஒன்று கூடி அயராது உழைத்து இத்திருப்பணி நிதியைத் திரட்டுவதற்கு உதவி புரிந்த எமது சபையின் போஷகர் தலைவர் உப தலைவர்கள் நிருவாக சபை அங்கத்தவர்கள், சாதாரண அங்கத்தவர்கள் யாவருக்கும் யாம் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். நிதி திரட்டுவதிலும் மலர் அச்சிடுவதிலும் தலைவர்கள் பேருதவி நல்கினர்கள். அவர்கள் யாவருக்கும் விநாயகப் பெருமானின் திருவருள் கிடைத்தல் வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம். நிதி சேர்ப்பதற்கான சிறப்புப்பட்டியலில், தனிப்பட்ட முறையில் நிதியுதவி செய்த பெரியோர்களை யாம் என்றும் மறக்க முடியாது. அவர்களுக்கும் யாம் நன்றி கூறுகின்றோம்.

ஓம் என்னும் பிரணவத்தின் உட்பொருளாகிய விநாயகப் பெருமானின் தேர்த் திருப்பணிக்கு உதவி புரிந்த சைவப் பெருமக்கள் யாவருக்கும் ஒரு தாழ்மையான வேண்டுகோள்: திருப்பணி ஒரு அரிய சமுதாயப் பணி! தெய்வீகப்பணி! பொதுப் பணி! அப்படிப்பட்ட இப் புனிதமான கைங்கரியத்திற்குத் தம்மை அர்ப் பணித்துத் தொண்டாற்றி வரும் இச் சபையினருக்குத் தாங்கள் காட்டிய ஆதரவைத் தொடர்ந்து காட்டிச் சபையினரை ஊக்குவித்துத் திருப்பணி வேலைகள் யாவும் சிறப்புற இனிதுற நிறைவெய்த உதவி புரியும் வண்ணம் மிக்க பணிவுடன் வேண்டுகின்றேன்.

ஔவையை வெள்ளை யானையில் ஏற்றிக் கைலாயத்திற்கு அனுப்பிய விநாயகப் பெருமானின் திருவருள் பெற்றுய்யுமாறு சைவ அன்பர்கள் யாவரையும் மிகவும் தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

வணக்கம்

39/7, எட்மண்டன் வீதி,
கிறிலப்பனை,
கொழும்பு-6.
1-6-68

வ. சி. சங்கரப்பிள்ளை
(கௌரவ செயலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லங்கலட்டி
# வீரகத்திப்பிள்ளையார் கோவில் திருப்பணி

ஓர் வேண்டுகோள் !

கொல்லங்கலட்டியிலே ஒவ்வொரு வளவிலும் வெற்றிலைக் கொடிகள் நிறைந்திருக்கும். வெற்றிலைக் கொழுந்து நாளுக்கு நடும்போது தோட்டத்திலே பிள்ளையார் பூசையுடன் நடுகை ஆரம்பமாகும். ஆண்டு தோறும் வெற்றிலைத் தோட்டத்திலே விநாயகர் பொங்கல் நடைபெறும். உழவர்ப் பெருமக்கள் இலையமுதுக் கொடிக்கால் வளர்த்துச் சைவம் தழைத்தோங்க உழைக்கும் வாழ்க்கையிலே தம் தொழிலுக்கு உதவியாக விநாயகரை வணங்க ஆலயம் அமைத்ததில் வியப்பில்லையே.

உழவிலும் தொழிலிலும் கல்வியிலும் அரசாங்க, வர்த்தக, வைத்திய சேவைகளிலும் சட்டத்துறையிலும் வீரகத்தி விநாயகரின் அருளாலே பலர் உச்சநிலையெய்தியுள்ளமை கண்டு அப்பெருமானின் அருளை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

கோயிற்காலைமணி கேட்டெழுந்து பாடுபட்டு உழைத்துச் சம்பாதித்த பொருள் கொண்டு ஊரவர் கோயிற்றிருப்பணியை ஆரம்பித்துள்ளனர். அது இன்னும் முற்றுப்பெறவில்லை. இந்நிலையிலே பாலங்கடந்து ஊழியம் தேடவந்த எங்களின் பொருளுதவி வேண்டப்படுகிறது.

கொல்லங்கலட்டியிலே பிறந்து, சிங்கப்பூரிலே படித்து கொழும்பிலே உத்தியோகமாகவிருக்கும் யான் வீரகத்தி விநாயகர் கோவில் திருப்பணிச் சபையின் கொழும்புக் கிளைக்குப் பொருளாளராகப் பணிக்கப்பட்டுள்ளேன். இத் திருப்பணிக்குப் பொருளுதவி செய்யத்தக்க அன்பர்கள் கொழும்பு மாநகரிலே பல்வேறு இடங்களில் இருக்கிறார்கள். அறிமுகமானவரை கொழும்புக் கிளையின் உறுப்பினர் நேரிற்சந்தித்துப் பொருளுதவி கேட்க முயலுவர். இத் தொண்டுக்கு இயன்ற பொருளுதவி புரியுமாறு அன்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றேன். இருக்குமிடந் தெரியாமலோ நேரவசதியில்லாமலோ யாரும் நேரிற்சந்திக்கப்படாவிட்டால் அதனை மன்னித்துக் கொண்டு இயன்ற பணத்தை கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

வணக்கம்

வி. நடராசா
கௌரவ பொருளாளர்,
கொல்லங்கலட்டி வீரகத்திப்பிள்ளையார்
கோவில் திருப்பணிச்சபை (கொழும்புக்கிளை)

**விலாசம்:**
18/3 றாபசிங்க மாவத்தை
நுகேகொட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழை கொல்லன்கலட்டி

# வீரகத்திப்பிள்ளையார் கோவில்

## திருப்பணிச் சபையின் கொழும்புக் கிளை

**கு. பாலசிங்கம்** C. C. S.
நிரந்தர செயலாளர்
சௌக்கிய அமைச்சு
போஷகர் - கொழும்புக் கிளை

1964 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடங்கிய இச்சபை வீரகத்திப்பிள்ளையார் கோவில் திருப்பணிகளைச் செவ்வனே நிறைவேற்றப் பெரும் பிரயாசை எடுத்துள்ளது. தேர்த்திருப்பணி சில ஆண்டுகளுக்கு முன் தொடங்கியும் இன்னும் பூர்த்தி ஆகவில்லை. இச்சபை இத்தேர்த் திருப்பணியை முடித்துத் தேர் முட்டியும், ஒன்று கட்டி முடிப்பதே இப்பொழுது தன் கடனாகக் கொண்டுள்ளது. பழமையும் புதுமையும் ஒருங்கு வாய்ந்த நம் விநாயகருக்காக இவர்கள் எடுத்துள்ள தொண்டு அவரது அருளாலே முட்டின்றி நிறைவேறும் என நம்புகின்றேன். இப்பணிக்குச் சைவப் பெருமக்கள் இயன்றளவு பண உதவி செய்து பிள்ளைப்பெருமானின் பேரருள் பெறுவார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
பிள்ளையார் துணை

# 'பாலூட்டி - ஏடு தொடக்கம்'

ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் எழுந்தருளியுள்ள திருத்தலம் எமது கிராமமான கொல்லங்கலட்டியாகும். அப்பெருமானுடைய சந்நிதியில் தான் எனக்குப் "பாலூட்டி"னார்கள். அங்கேயே எனக்கு "ஏடும் தொடங்கப் பெற்றது." ஆகவே உடல் உயிராகிய இரண்டிற்கும் முதலுணவு எனக்கு அளிக்கப் பெற்ற தலம் அது. அக்கோயில் திருப்பணியில் பங்குகொள்ள எனக்குக் கிடைத்த வாய்ப்பைத் தெய்வானுக்கிரகமாகவே கருதுகிறேன்.

திருப்பணிக்கு உதவும் நோக்கத்தோடு 13 - 12 - 64ல் திருப்பணிச் சபையின் கொழும்புக்கிளையொன்று நிறுவப் பெற்றது. "அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா" என்ற அம்மையார் வாக்குக்கமைய, பொருள் சேர்க்க நாம் எடுத்துள்ள முயற்சிகள் ஏதோ காரணங்களால் தடைப்பட்டன. இப்போ எம்முயற்சி சித்தியடையத் திருவருள் பாலித்துள்ளது. ஆகவே இச் சிவகைங்கரியம் நன்கு நிறைவேறச் சைவாபிமானிகள் ஒவ்வொருவரும் உதவ வேண்டுமெனப் பணிவுடன் வேண்டுகிறோம். நாம் எல்லோரும் தினமும் எத்தனை வழியில் எவ்வளவு பொருளைச் செலவு செய்கின்றோம். ஒரு முறை அதில் ஒரு பகுதியை இச் சிவதொண்டிற்கு உதவக் கூடாதா!? சற்றே சிந்தியுங்கள்! சிந்தித்துச் செயலாற்றுங்கள்.

நிதி மிகுந்தவர் பொற்குவை தந்தும், நிதி குறைந்தவர் காசு கொடுத்தும் அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளியும் ஆண்மையாளர் உழைப்பினை நல்கியும் இத்திருப்பணியை இனிதே நிறைவேற்றுமாறு திரும்பவும் வேண்டி நிற்கும்,

**சி. கந்தையா**
தலைவர், திருப்பணிச்சபை,
கொழும்புக் கிளை
(இளைப்பாறிய மண்ணியல் வல்லுநர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

# திருப்பணிக்கு உதவுக

சமாதான நீதவான்

ச. த. சின்னத்துரை அவர்கள்

உப தலைவர், கொழும்புக் கிளை

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதி வரவருளினன் மிகுகொடை
வடிவினர் பயில் வலி வலமுறை இறையே

வீரகத்திப் பிள்ளையார் கோவில் தேர் வெள்ளோட்ட ஞாபகார்த்த மாக இம்மலரை வெளியிடுவது வரவேற்கத்தக்கது.

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோவில் ஆரம்ப வரலாறு பழைமையானது. பழைமையான தெய்வ ஸ்தாப னங்களுக்கு அருகாமையில் எங்கும் கேணிகள் காணக்கூடியதாய் இருக் கின்றது. இங்கும் பழமைக்கு எடுத்துக்காட்டாக கோவிலுக்கு அருகாமை யில் ஒரு கேணி உபயோகத்திலிருந்து வருகின்றது. பழமைக்கு ஏற்ப இவ்வாலயத்தில் புனிதமாக - சிறப்பாக காலந்தவருது பூசைகள் நடை பெற்றுவருவதுடன் நன்கு நிர்வகிக்கப்படுகின்றது. நிர்வாகஸ்தர்களும் பூசகர்களும் தமது கடமைகளை உணர்ந்து நடத்தி வருவது மிக மகிழ்ச் சிக்குரியதாகும். அயலவர்களும் உள்ளூரவர்களும் வெளியூரவர்களும் வீரகத்திப் பிள்ளையாரை வழிபட்டு இஷ்டசித்திகளைப் பெறுகின்றனர்.

சிறிது காலத்திற்கு முன் கோயில் அபிமானிகளில் சிலர் அக்கோவி லுக்கெனத் திருப்பணிச் சபை ஒன்றை நிறுவினர். அச் சபை மூலம் திருப் பணிகளைச் செவ்வனே நடத்தி வருகின்றனர். எனினும் தேர் அமைப்பு முற்றுப் பெருத நிலையில், கடந்த ஆண்டு அதே தேரில் சுவாமியை எழுந்தருளச் செய்து வெளிவீதி சுற்றுலாச் செய்து தேர்த்திருவிழா நடாத்தினர். தேர் முட்டி அமைப்புக்குப் பணம் பற்ருக்குறை இருந்து வருகின்றது. அத் திருப்பணியை நடாத்தி முடிக்கும் அபிலாசைஷயுடன் திருப்பணிச்சபையினர் நிதி திரட்ட ஊக்கமெடுத்திருக்கின்றனர். அதன் பலாபலனே உங்கள் கையிலிருக்கும் இந்த மலர்.

திருப்பணிச் சபையினர் முயற்சி போற்றத் தக்கது. திருப்பணிச் சபையின் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து, முற்றுப் பெரு திருக்கும் தேர் முட்டித் திருப்பணிக்கு, சமய எழுச்சி மிகுந்த இக்காலத் தில் தாராளமாக உதவுவார்களென எதிர்பார்க்கலாம்.

"தருமமும் அபிமானமும் நமது இல்லத்திலிருந்தே தொடங்கட்டும்."

**"வீரகத்திப் பிள்ளையாரின் கண்நோக்கு பக்தர்களுக்கு உரித்தாகுக"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவில் திருப்பணி

சமாதான நீதவான்

**வ. சரவணமுத்து அவர்கள்**

(கொ. வீ. பிள்ளையார்கோவில்
திருப்பணிச் சபைத்தலைவர்)

கொல்லங்கலட்டியிற் கோவில்கொண்டிருந்தருளும் வீரகத்திப்பிள்ளையார் ஆலயம் மிகவும் புராதனமானது. அதற்குத் தேர் ஒன்று இல்லாமலிருந்தது. அந்தக் குறையை நீக்கும் வண்ணம் செல்வக் கணபதி பணித்த பேடிதர்த் திருப்பணிச் சபை 1960ம் ஆண்டு நிறுவப்பட்டது.

இத் திருப்பணிச்சபையினரின் அயராத உழைப்பினுல் 1965 - ஆம் ஆண்டு சித்திரவேலைப்பாடமைந்த தேர் ஒன்று செய்து வழங்கப்பட்டது.

அத்தேரில், பிள்ளையார் எழுந்தருளிப் பக்தகோடிகளுக்குக் காட்சி கொடுத்து வருகின்ருர். எனினும் தேர்முட்டி வேலை இன்னும் பூர்த்தியாகாமலிருக்கின்றது. அத்துடன் தேருக்குப் போதிய பாதுகாப்பு அளிப்பதற்கு நிரந்தரமான தேர்முட்டி மண்டபம் ஒன்றும் தேவையாயுள்ளது.

இந்தத் திருப்பணி முயற்சியை எடுத்துள்ள கொல்லங்கலட்டி வீரகத்திப்திப்பிள்ளையார் கோவில் திருப்பணிச்சபை கொழும்புக்கிளையினரை நாம் மனமாரப் பாராட்டுகின்ருேம்.

விக்கினேசுவரப் பெருமானின் திருவருளால் இந்தச் சீரிய தொண்டு இனிது நிறைவேறுவதாக.

'மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SONY

## A WORLD LEADER

**Now Manufactured in Ceylon under Licence From**

**THE SONY CORPORATION OF JAPAN**

TR — 835 — 8 TRANSISTOR

**RADIO**

❋

# SIEDLES CINERADIO

FRONT STREET, COLOMBO 11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

# R.K. TRADING Co.

84, OLD MOOR STREET,

COLOMBO 12.

*Office:*
*T. P. No.* 7015

*Residence:*
*T. P. No.* 83632

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி

# வீரகத்திப் பிள்ளையார் கோயில் வரலாறு

சைவத்திரு பொ. அம்பலவாணக் குருக்கள்

எட்டாம் நூற்ருண்டளவில் சோழ குலத்தவனுகிய திசை உக்கிரக சோழனது மகளாகிய மாருதப்புரவீக வல்லி யென்பாள் தனது குன்மநோயும் குதிரை முகமும் மாறப்பெருது மனம் வருந்தி சாந்தலிங்க முனிவரிடஞ் சென்று தனது குறையினை முறையிட, அவர் தீர்த்தயாத்திரை செய்வதினுல்தான் இவ்வித கன்மநோயானது நீங்குமென்று சொல்ல அவ்வண்ணமே தீர்த்த யாத்திரை செய்தாள்.

மாருதப்புரவீகவல்லி ஈழநாட்டின் வடபாலுள்ள கீரிமலையென்னும் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தும் கோயிற்கடவை என்னும் இடத்திலே சுப்பிரமணியப் பெருமானுக்கு ஆலயம் அமைத்து, சோழநாட்டிலிருந்து சுப்பிரமணிய விக்கிரகமும் பூசை செய்வதற்கு அருச்சகரையும் வருவித்து உரிய முறைப்படி பிரதிட்டை செய்து வழிபடக் குன்ம நோயானது நீங்கப் பெற்றும், குதிரை முகம் மற்றவர்களுடைய பார்வைக்கு மாறியும், மாருதப்புரவீகவல்லியின் பார்வைக்கு மாருதிருந்தமையாலும் மனம் வருந்தி அதற்குரிய காரணத்தை ஆராயும்போது, விநாயகப் பெருமானை முதல் வழிபாடு செய்யாததினுலேயே இக்குறையானது நிகழ்ந்தது என அறிந்து, தான் செய்த தவறிற்காக ஏழு விநாயக விக்கிரகங்களைப் பிரதிட்டை செய்வேன் என நினைந்து முதலாவதாகக் கொல்லங்கலட்டி என்னும் இடத்திலே ஒரு விநாயக விக்கிரகத்தினையும், பின் வரத்தலம் (பன்னுலை) அளகொல்லை, கும்பளாவளை, பெருமாக்கடவை (அளவெட்டி) என்னும் இடங்களிலும் ஒவ்வோர் விநாயக விக்கிரத்தினையும், பிரதிட்டை செய்யக் குதிரை முகமானது தனது பார்வைக்கும் இல்லாது மறைந்து அதிக அழகுடன் முகமானது பொலிவதைக் கண்டு அத்தலத்திற்குப் பெருமாக் கடவையென்னும் காரணப் பெயரையும் (பெரிய குதிரை முகம் நீங்கிய இடம்) இட்டு, தான்செய்த சபதத்தின்படியே ஆலங்குழாய், கல்வளை என்னும் இடங்களிலும் இரு உருவங்களைத் தாபித்தார் என்பர்.

முதலாவதாக மாருதப்புரவீகவல்லி தாபித்த விநாயகப் பெருமான் இப்பொழுது கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்து மேற்கு வீதியிலிருக்கும் கேணியின் வாசலில் நின்ற ஒரு ஆலமர நிழலிலே நீண்ட காலமாக வீற்றிருந்தனர். பின்னர் இருநூறு வருடங்களுக்குமுன் குமாரவேலு என்பவர் தனது வீட்டின் ஒரு பகுதியில் அப்பெருமானை வைத்து (அந்த வீடு தற்பொழுதுள்ள ஆலயத்து உள் வீதியின் தென்மேற்குப் பகுதியிலிருந்தது) பூசித்து வந்தார். சிறிது காலஞ் செல்ல வீட்டில் வைத்து வணங்குவது ஆசௌசம் முதலிய ஆசாரக் குறைவான காலங்களில் கஷ்டமாக இருந்ததால், தற்பொழுது பூங்கொல்லையாக இருக்கும் காணியில் மேற்குப்பக்கத்தில் ஒரு சிறு ஆலயம் மண்ணினுல் அமைத்து, அதனுள் வைத்துக் குமாரவேலுவினுடைய மகன் பொன்னையா என்பவர் வழிபாடு செய்து வந்தனர்.

அதன் பின்னர் பொன்னையாவினுடைய இளைய மகனும் நிர்வாண தீட்சை ஆசாரியாபிடேகம் பெற்றவரும் சமய சாத்திர ஆகம அறிவு நிரம்பப்பெற்றவருமாகிய அம்பலவாணக்குருக்கள் என்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் விநாயகப் பெருமானுக்கு ஆகம முறைப்படி ஆலயம் அமைத்து நித்திய நைமித்தியங்கள் செய்ய வேண்டுமென்ற விருப்பத்தினாலே தனது தந்தையாராகிய பொன்னையாவினுடைய சொந்தமாக இருந்த காணியையும் தம்ப உடையார் என்பவருடைய பக்கத்துக்காணியையும் தானே பராபரிப்புக் காரனாக இருந்து சகல காரியங்களையும் செய்யக்கூடிய அதிகாரத்தோடு விநாயகப் பெருமான் மீது தரும சாதனமாக எழுதுவித்து அக்காணியுள் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்த மண்டபம், தம்பமண்டபம், மடைப்பள்ளி, களஞ்சியம் முதலிய மண்டபங்களையும், உள்வீதி, புறவீதி ஆகிய இரு வீதிகளையும் திருமஞ்சனக் கிணற்றையும் அமைத்து ஆயிரத்து எண்ணூற்று எழுபத்திரண்டாம் ஆண்டு ஆங்கிரச வருடம் வைகாசி மாத அத்த நட்சந்திரத்திலே கும்பாபிசேகம் செய்து அத்தினத்தினை முதலாகக்கொண்டு ஒவ்வொரு வருடமும் அலங்காரத்திருவிழாவினையும், புரட்டாதி மாதத்திலே நவராத்திரி விழாவினையும் மிகச் சிறந்த முறையிலும் ஏனைய விசேட காலங்களிலே செய்ய வேண்டிய விழாக்களையும் செய்து வந்தார்.

ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றாம் ஆண்டளவில் அம்பலவாணக் குருக்கள் இறைவனடி சேர, கோயில் தம்ப மண்டபமும் வாயு பகவானுடைய கோபத்திற்கு இரையாகி இடிந்துவிழ, குருக்களுடைய புத்திரர்கள் குழந்தைப் பருவத்தினராதலால் திருவிழா முதலிய நைமித்தியங்கள் நடைபெறாது சிறிது காலம் சென்றது. பின்னர் கொல்லங்கலட்டியிலும் சுற்றுப்புறத்திலுமுள்ள பெரியோரது ஆதரவினாலும், உற்சாகத்தினாலும் மேற்படி குருக்களது புத்திரர்களாகிய பொன்னையா, வயித்திலிங்கம் என்போர் பழையபடி தம்பமண்டபம், யாக, வசந்த மண்டபம் கோபுரம் முதலியன அமைத்து ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தாறாம் ஆண்டு, அட்சய வருடம் ஆனி மாதத்து அனுட நட்சத்திரத்திலே கும்பாபிசேகம் செய்து அத்தினத்தை முதலாகக் கொண்டு வருடம் தோறும் அலங்காரத் திருவிழாவினைச் செய்து, ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தொன்பதாம் ஆண்டு, சுக்கில வருடம் தம்பம் அமைத்துக் கொடியேற்று விழாவினைச் செய்து ஆனி மாதத்து அமாவாசைக்கு முதல் நாள் தேரினையும், அமாவாசையிலன்று தீர்த்தோற்சவத்தையும் செய்து வந்தனர். பின்னர் அதை மாற்றி ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தாறாம் ஆண்டு தாது வருடம் முதல் வைகாசி மாதத்துப் பூரணையில் தீர்த்தோற்சவமாக அமையும் வண்ணம் பத்து நாள் திருவிழா நடைபெற்று வருகின்றது.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தொன்பதாம் ஆண்டு தாது வருடம் சுப்பிரமணியர், மகாலட்சுமி, சந்தான கோபாலர் முதலிய பரிவாரங்களுக்கு ஆலயங்கள் தனித்தனி அமைத்து அ மூர்த்திகளைப் பிரதிட்டை செய்தும், நாற்பத்தோராம் ஆண்டு விகிரம வருடத்திலே கெர்ப்பக் கிருகம், அருத்த மண்டபம் இரண்டினையும் வைரக் கல்லினாற் செய்து பங்குனி மாதத்து அத்த நட்சத்திரத்திலே கும்பாபிடேகம் செய்யப்பெற்றது. தேர்த் திருப்பணிச் சபையோரால் புதிதாக அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய தேர் ஒன்று அறுபத்தைந்தாம் ஆண்டு குரோதி வருடம் பங்குனி மாதத்திலே செய்து முடிக்கப் பெற்று, வெள்ளோட்டமும் ஓடி, அடுத்த வைகாசி மாதம் முதல் ஒவ்வொரு வருடமும் அத்தேரிலேயே விநாயகப் பெருமான் வீதிவலம் வருகின்றார்.

* பிரசித்த நொத்தாரிஸ் திரு. த. சபாபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய அளவெட்டி கும்பழாவளை விநாயகர் தல வரலாற்றிலிருந்தும் விநாயகர் தோத்திரப் பிரபந்தத்திலிருந்தும் விடயங்கள் எடுக்கப்பட்டன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் கடந்த கணபதி

தென்புலோலியூர், மு. கணபதிப்பிள்ளை

உலகத்தில் முன்தோன்றி மூத்த குடியினர் தமிழ் மக்கள்! இது வெறும் பழம் பெருமைப் பேச்சன்று. உலகத்துத் திறன் வாய்ந்த ஆராய்ச்சியாளரெல்லாம் இப்போது ஏற்றுப் போற்றும் உண்மையாகும். இந்த உண்மையை வைத்து நோக்கின், உலகத்துத் தோன்றிய மொழிகளுளெல்லாம் முந்தித் தோன்றிய மொழி தமிழேயாகும் என்பதும் தெளிவாகி விடும். மொழியே பண்பாட்டுக்கு அடியிடுவதாதலால், தமிழர் நாட்டிலேயே பண்பாடும் நாகரிகமும் முதன் முதலாக ஏற்பட்டிருத்தல் வேண்டும் என்பது தெளிவு. பண்பாடும் நாகரிகமும் வளர்ந்ததோடு கடவுட் கொள்கை முதன் முதலாகத் தோன்றி வளர்ந்து செம்மை பெற்றதும் தமிழ் நாட்டிலேயாகும் எனக் கொள்வது தவருகாது. உண்மையில், கடவுளைக் கணடவர் தமிழர்களேயாவர். கடவுள் என அவர்கள் இட்டு வழங்கிய பெயரே அதனைத் தெளிவுறுத்திக் காட்டுகின்றது. ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாதானுக்குப் பொருந்தும் வகையில், பெயரும் உருவுங் கொடுத்துப் போற்றியவர்கள் தமிழர்களேயாவர். ''விறகிற் றீயினன் பாலிற்படு நெய் போல் மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்'' எனப் போற்றியவரும், ''ஊரிலான் குணங் குறியிலான் செயலிலான் உரைக்கும் பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான்'' எனவும், ''மறையினுல் அயனுல் மாலால் மனத்தினுல் வாக்கால் மற்றும் குறைவிலா அளவினுலும் கூறெருணுதாகி நின்ற இறைவனர்'' எனவும், காட்டிக் கடவுள் இலக்கணத்தை விளக்கியவரும் தமிழரேயாவர். இங்ஙனம் விழுமிய கடவுட் கொள்கையுடைய தமிழ் மக்களிடையே பிற்றைக் காலத்தில் ஆரியக் கொள்கைகள் பல புகுந்து செம்மையை மாசுறுத்திவிட்டன.

## மூ நாட்டில் கணபதி

'' கடல் கொண்ட மூ நாடு '' என்னும் ஆராய்ச்சி நூலினை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ள அமெரிக்க ஆராய்ச்சியறிஞரான கேணல் சேமிசு சேச்சுவாட்டு என்பார், தமிழ் நாட்டின் உண்மை வரலாற்றினையும், பண்பாட்டு நாகரிக விழுப்பத்தினையும், கடவுட் கொள்கையின் மாண்பினையும் பற்றிய உண்மை வரலாறுகளை உருவாக்குவதற்குப் பயன்படக் கூடிய சான்றுகள் பலவற்றைத் தமது நூலகத்தே எடுத்துக் காட்டுகின்ருர்கள்,

தமிழினத்தின் தாயகமாகியதென்னுடு மிகப் பழைய காலத்திலே மூ நாடு என வழங்கிற்று என யான் முதன் முதலாக எடுத்துக் காட்டியபோது, அப்படிக் கொத்த சான்றுகள் எவையாவது எனக்குக் கிடைக்குமென்று யான் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை. இன்று அறிஞர் சேச்சுவாட்டு என்பார் காட்டும் சான்றுகளை ஒவ்வொன்ருக எடுத்து ஆராயும்போது, என்மனம் இன்பக் கடலில் மூழ்குகின்றது. யான், ''மூ நாட்டு மக்கள் — மூவர் — சிறந்த கடலோடிகளாக விளங்கினர்'' எனக் கூறிச் சிங்கள மக்கள் அவர்களை ''மரக்கல மினிசு'' என வழங்குவதையும் சான்ருகக் காட்டி, ''மூவர்'' என்னும் சொல் கடலோட்டத்தைக் குறிப்பதாக ஆங்கில அகரவரிசைகளிலும் ஏறிவிட்டதென நிறுவினேன். அறிஞர் சேச்சுவாட்டு அவர்களோ, பிறநாட்டுப் பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்கள் பலவற்றையும் கல்வெட்டுகளையும் துணையாகக் கொண்டு வேறு பல உண்மை களையும் செய்திகளையும் எடுத்தோதுகின் றார்கள் பழைய பொருள்கள் பலவற்றை மூ நாட்டிலிருந்தவையென எடுத்துக்காட் டுகின்றார்கள் அவர்கள் காட்டுகின்ற உண்மைகளும் சான்றுகளும் இதுவரை ஆராய்ச்சியாளர் பலர் கொண்டிருந்த முடிபுகளைத் தகர்த்து வீழ்த்திவிடுகின் றன.

அறிஞர் சேச்சுவாட்டு அவர்கள் காட் டுகின்ற தனிச் சான்றுகளுள் மிகச் சிறப்பு வாய்ந்தது அவர்கள் பிள்ளையார் பற்றிக்கூறு கின்ற உண்மையாகும். பிள்ளையாரைக் கணபதி கணேசர், விநாயகர், விக்கினேசு வரர் என யாம் இக்காலத்தில் வழங்கி வருகின்றோம். சேச்சுவாட்டு அவர்கள் "கணேச" எனவே குறிப்பிடுகின்றார். மூ நாட்டில் அக்கடவுளுக்கு இட்டு வழங் கப்பெற்ற பெயர் யாதெனத் திட்டவட்ட மாகக் கூறாமல், "ரா மா" நிலபுலக் கட வுள் எனவோ 'ராமன்' விளை-நிலப் பயிர்த் தலைவன் எனவோ இருந்ததாகலாம் என எடுத்தோதுகின்றார். மூ நாட்டு மக்கள் அக் கடவுளின் இயல்புகளுக்கு ஏற்றதான உருவம் ஒன்றினை அமைத்துக் கொண்டார் கள் எனக்கூறி, அவ்வுருவத்தையும் வரை ந்து தந்துள்ளார். (அவ் வுருவம் அவர்கள் எழுதிய நூலின் 182ம் பக்கத்தில் உள் ளது) யுகதான் நாட்டுப் பூக்குல மன்னர் கள் அக் கடவுளது உருவத்தையே தமது சின்னமாகக் கொண்டிருந்தார்கள் எனவும் அம் மன்னர்கள் தாம் அமைத்த கட்டிடங் களிலெல்லாம் அச் சின்னத்தினை-யானைத் தலையினை-அமைத்துக் கொண்டார்கள் எனவும் காட்டுகின்றார். இந்துக்கள் மட் டும் இக் கடவுள் யாரென்பதை உணர்ந்து அக் கடவுளின் உருவத்தை அமைத்து வழி பட்டு வந்தார்கள் என மனநிறைவு கொள்ளுகின்றார் இன்று, எவ் வினைக்கும் முன்னோன் எனக் கொண்டு எவ் வினை யினைத் தொடங்கும்போதும் கணபதி எனப்படும் பிள்ளையாரை வேண்டிக் காப் புச் செய்துகொள்வது தமிழ் சைவ மக்க ளின் வழக்கமாக இருந்து வருவதை யாம் காண்கின்றோம். அந்த வழக்கம் மூ நாட் டிலிருந்து தொடங்கியதென அமெரிக்க ஆராய்ச்சியறிஞரான சேச்சுவாட்டு நிறு வுகின்றார். வாதாபிப் போர் முடிந்ததன் பின்பே பிள்ளையார் வணக்கம் தமிழ் நாட் டிற் புகுந்ததெனக் கொள்ளுகின்ற ஆரா ய்ச்சியாளர்கள் என்னென்ன கூறுவார் களோ ?

இந்தப் பிள்ளையார் வழிபாடு தமிழர் நாட்டில் மட்டுமின்றி உலகத்து நாடுகள் பலவற்றிலும் பரவி வழங்குகின்றது. பண் டைக் கடலோடி இனத்தவராக விளங் கிய பழந்தமிழர் தாம் வணிகத்துக்காகச் சென்ற இடங்களிலெல்லாம் இந்த வணக் கத்தினைப் பரப்பியுள்ளனர். இன்று உல கத் தமிழாராய்ச்சி நடாத்த முயலும் பிற சமயத்தவர், இவ்வழிபாடு பரந்தி ருக்கும் உண்மையைக் கண்டும் காணாத வர்போல, கிறிஸ்து சமய வரவின் பின்பு தான் தமிழ் மக்களுக்குப் பண்பாடும் நாக ரிகமும் பிறந்ததெனக் காட்டிவிடப் படாத பாடு படுகின்றனர். அது காரண மாக உண்மையான உலகத் தமிழா ராய்ச்சி கோணி வருகின்றது.

அலசு கெட்டி என்னும் பிராஞ்சிய ஆராய்ச்சியாளர், பிள்ளையார் பற்றி விரி வான ஆராய்ச்சி நிகழ்த்தி, யானைமுகக் கடவுள் கணேசர் என்னும் தலைப்பில் ஒரு நூலினை எழுதி வெளியிட்டுள்ளார். அந் நூலகத்தே, பிள்ளையார் வழிபாடு உலகத்தின் பல பாகங்களிலும் பரவி நில வுவதைத் தெளிவாக அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

### கிரேக்க நாட்டில்

தமிழகத்திலே பிள்ளையாரை அறிவுக் கும் தொழிலுக்கும் முதற் கடவுளாகக் கொள்வர். வணிகம் தொடங்குதல், வீடு கட்டுதல், நூல் யாத்தல், யாத்திரை தொடங்குதல் திருமணம் செய்தல் முத லான நிகழ்ச்சிகள் யாவற்றையும் தொடங் கும்போது முதலிலே பிள்ளையாரை யாம் வழிபடுவது போலவே கிரேக்கர்களும் வழி பட்டுக்கொண்டு தொடங்குவர். இந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவில் இருந்ததைப் போலவே ஒவ்வொரு மைல் அடையாளக் கல்லும் பிள்ளையார் உருவமாகவே அமைந்திருக்கும். எல்லைக் கற்களைப்போலத் திகழும் அக் கற்களையே தெருவோரங்களிலெல்லாம் நட்டு வைத்துத் தெருவுக்குத் தெருவாகப் பிள்ளையாரை வழிபட்டு வந்தமையாலேதான் பழமொழிகளிலே தெருவிற் பிள்ளையார் என்ற வழக்கு ஏற்படுவதாயிற்று. கிரேக்க நாட்டினர் பிள்ளையாரை யானை முகத்துடனேயே வழிபட்டு ''தேர்மினசு''எனக் குறிப்பிட்டார்கள், குறிப்பிடுகிருர்கள். அமைதி நிலவுங் காலத்திலும் போர்கள் நடைபெறுங் காலத்திலும் - என்றும் - அப் பிள்ளையார் கோயில்கள் திறந்தேயியிருக்கும்.

## உரோமாபுரியில்

உரோமா புரியிலே கணேசர் என்னும் பெயர் ''யேனசு'' என வழங்கப்பெற்று வருகின்றது. எமது நாட்டிலே பிள்ளையார் திருக்கையிற் காணப்படும் அங்குசத்துக்குப் பதிலாக அந் நாட்டிலே திறப்பு ஒன்று உள்ளது. உரோமர்கள் யேனசுக் கடவுளையே தொடக்க விழாக்களின் தலைவர் எனவும், பிற கடவுளரின் பூசைகளுக்கெல்லாம் முன்னதாக அவருக்கே பூசை செய்யப்படுதல் வேண்டும் எனவும், அவரை முதலாவதாக வேண்டியே எக் காரியத்தையும் தொடங்குதல் வேண்டும் எனவும் கூறி வழிபட்டு வருகின்றுர்கள்.

## திபேத்தில்

இமையமலையின் அடிச்சாரல்களில் திபேத்திலும் நேபாளத்திலும் பௌத்தப் பிள்ளையார்-பௌத்தக் கணபதி - வழிபாடு நடைபெற்று வருகின்றது. அவற்றை அந் நாட்டுமக்கள் ''கணபதி இருதயம்'' எனக் குறிப்பர். புத்தர் பெருமான் தமது சீடரான ஆனந்தருக்குக் கணபதி மந்திரம் சொல்லிக் கொடுத்தார் என அவர்கள் கொள்கிருர்கள். இப்போதும் திபெத்தில் பௌத்தர்கள் கணபதி இருதய மந்திரத்தைத் தொடங்குகையில், ''நமோ பகவதே ஆரிய கணபதி இருதயாய'' எனக் கூறுகின்றனர். இலங்கையிலும் பௌத்தர்கள் பிள்ளையாரைக் ''கண தெய்யோ'' எனக் குறித்து வழிபட்டுவருவதனை யாம் காண்கின்றோம்.

திபேத்திலே காணப்படும் பிள்ளையார் உருவங்களில் நடன நிலையிலுள்ள உருவங்கள் ஏறக்குறைய ஆறு ஏழு வகையின உள்ளன எனத் தெரிகின்றது. திபெத்து மக்கள் கணேச சக்தியினைக் ''கணேசாயினி'' என அம்மை உருவத்தில் வழிபடுவதுமுண்டு. மாகாலன் எனப்படும் தீபேத்திய மாதேவருக்குப் பூசை செய்வதன் முன் பிள்ளையார் பூசையே அங்கும் நடைபெறுமாம். இந்தியாவிலுள்ள நடன கணபதி மஞ்சள் நிறமுள்ளவராகக் கொள்ளப்படுபவராயினும், திபெத்திலுள்ள நடன கணபதி சிவப்பு நிறம் பெற்றவராய்க் காணப்படுகின்றுர். அவர் திருக்கையிலே சிந்தாமணி இருக்கின்றது. அவருக்குப் பச்சை நிறமான பெருச்சாளி உண்டு. திபெத்தில், சூரிய விநாயகர் எனப்படும் 'சபாநாயக கணபதி'' கோயிலும் இருக்கின்றது. அக் கோயிலிலே, பஞ்சவிநாயகர் நடுவில் வீற்றிருப்பவரே ''சூரிய விநாயகர்'' எனப்படுவர். பௌத்த மதத்தின் தருமபாலர்போல மண்டையோடு, என்புமாலை, ஆகியவற்றுடன் மார்பில் சிந்தாமணி மாலையும் முழங்கால்வரை நீண்டதாகப் பெற்றிருப்பவர் அந்தச் சூரிய விநாயகர் ஆவர். அவர் திருக்கைகளில் செபமாலையும், உடைந்த தந்தமும், கோடரியும், கமண்டலமும், மோதகமும் உள்ளன. திபேத்திலும் மங்கோலிய நாட்டிலும் கீர்த்தி மகுடமும், திருக்கையில் திரிசூலமும் பெற்றவராகக் கணபதி காட்சி தருகின்றுர்.

## எகித்து நாட்டில்

எகித்து நாட்டிலே கணேசர், ''கேனேசு'' எனவும், ''குனீசு'' எனவும் குறிக்கப்படுகிருர். உரோமாபுரியில் உள்ளதுபோல் அவர் திருக்கையில் திறப்பு ஒன்று உள்ளது. இத்தாலிய மொழியிலுள்ள ''யே'' என்னும் ஒலி ''க'' எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிக்கப்படுவதால், தமிழகத்து வழக்கே உரோமா புரியிலும் எகித்திலும் திரிந்து வழங்குகின்றது எனக் கொள்ளலாம். எகித்தில் நடைபெறும் விழாக்கள் யாவற்றிலும் முதலிடம் அளிக்கப்படுவது கணேசருக்கேயாம்.

### அமெரிக்காவில்

அமெரிக்க நகரங்களாகிய மெச்சிக் கோவிலும் பேருவிலும் கணபதி உருவங்களையும் பிள்ளையார் கோவில்களையும் இன்றும் காணலாம். அமெரிக்கர்களுள் பழங் குடியினர் கணபதியையே அறுவடைக் காலத் தெய்வமாக வணங்கி வழிபாடியற்றி வருகின்றார்கள். அங்கே காணப்படும் கணபதி இரு திசைகளுக்குரிய இரு திருக்கைகளுடன் ஆயுதபாணியாக "வீர கணபதி" என வீற்றிருக்கிறார். அங்கே காணப்படும் கணபதிக்கு தலையில் மகுடம் இல்லை. அதற்குப் பதிலாக, யானைத் தலையின்மேல் பாம்பு காட்சி தருகின்றது.

### சீனாவில்

சீனாவில் வழிபாட்டுக்குப் பயன்படுத்தப்படும் இரு வகையான உருவங்கள் உலகத்தின் பிற பகுதிகள் எவற்றிலும் காணக் கிடையாதவை. சீன மொழியில் பிள்ளையார் பெயரானது "குவன் சீபியின்" என வழங்குகின்றது. "வச்சிர தாது" என மந்திரசக்தியுள்ள விநாயக யந்திரங்களை வைத்தே சீனர்கள் கணபதியை வணங்குகின்றார்கள். கி. பி. 531-ம்ஆண்டளவில் உருவாக்கப்பட்ட "சிந்தாமணி விநாயகர்" மக்களிடையே மிகுந்த ஈடுபாட்டினை ஏற்படுத்தியது எனக்கருதப்படுகின்றது.

### யப்பானில்

கி. பி. 9-ம் நூற்றாண்டுவரை கணபதியைப்பற்றி யப்பானியருக்கு ஒன்றுமே தெரியாது. சீனத்துப் பழைய சுவடி ஒன்றினைப் படித்த பௌத்த பிக்குவான கோபோ என்பார்தாம் இவ் வணக்கத்தைப் புகுத்தியவர் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். தக்கைசி என்னும் இடத்திலமைந்திருந்த காமதேரா எனும் கோயிலிலிருந்து மா வைரோக்கன சூத்திரங்களைப் படித்தே இப் பிக்கு கணபதியைப் பற்றி யப்பானியருக்கு உபதேசித்தார் எனத் தெரிய வருகின்றது. விக்கினத்தைப் போக்குபவரே கணபதி என்பது யப்பானியர் நம்பிக்கையாகும். பௌத்த மதத்தைக் காத்தவர் கணபதி எனக் கூறுகின்ற கதைகள் பல யப்பானிய மக்களிடையே வழக்கிலுள்ளன. யப்பான் மொழியில், "சோடன், விநாயக்கா குவான்சன்சோ" ஆகிய பெயர்கள் மட்டுமின்றி "வச்சிரசின்ன, வச்சிரபாக்கன, வச்சிரமுகா, காக்குசென்சோ" முதலிய பெயர்களும் கணபதியைக் குறிக்க வழங்கி வருகின்றன.

இங்ஙனமாக, கிழக்கிந்திய தீவுகளிலும், யாவா, சுமத்திரா, போனியோ, மலாயாத் தீவுகளிலும் கணபதி வணக்கம் பரந்து வழங்கி வருகின்றது. அங்ஙனம் உலகம் எங்கணும் பரந்து பரவித் திகழும் கணபதி வழிபாடு தமிழகம் தந்த வழிபாடு என்பதை நோக்கி யாம் பெருமை கொள்வதிலும், அவ்வழிபாட்டினைப் பரப்புவதிலும், பயன்பாடு உள்ளது என்பதை எடுத்துச் சொல்லவும் வேண்டுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOR YOUR BUILDING MATERIALS

& ESTATE SUPPLIES

*Please Contact :-*

# American Engineering Corporation

311, Old Moor Street, Colombo 12.

*Telephone:-* 4430 *Telegrams:-* "TILJOY"

MAHESOMAT

WALL

PAINTS

POWER TRANS-MISSION CON-VEYOR BELTING

Manufactured
by
Messrs. George Angus
& Co. Ltd., London

Hair, Rubber and Leather Belting.

"PARKO" INDIAN TOOLS

Dependable quality
Manufactured
by

Messrs. India Works
India.

Hand Tools and Engineering Tools.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நந்தாத் தேன்"

(வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்)

''தொல்லை யிரும் பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே — எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னுந் தேன்''

பிறவா நெறியருளும் பெற்றியனும் சிவபெருமானை நமது சமய குரவர்கள் நால்வரும் வெவ்வேறு முறையில் அணுகினர். அதில் பூழியர் கோனின் வெப்பொழித்த புகலியர் கோனாகிய திருஞான சம்பந்தர் கண்ணுதற் கடவுளைத் தந்தையாகவும். தன்னைத் தனையனாகவும் கொண்டார். "மற்று நீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம் பெற்றனை'' அன்று பெருமானால் பெயர் சூட்டப் பெற்ற சுந்தரர் உடுக்கை இழந்தவன் கை போல, இடுக்கண்களையும் நட்புரிமை பூண்டு ஆண்டவனை நண்பனாக்கிக்கொண்டு, '' தம்பிரான் தோழனாக உலகிற்குத் தோற்றினார்.

ஐந்தெழுத்தின் வல்லமையால் கல்லையும் கப்பலாக்கி மிதந்த ஆளுடை அரசனும் அப்பரடிகளோ ஆண்டருளும் ஆண்டவனை ஆண்டானாகவும், தன்னை அடிமையாகவும் ஆக்கிக் கொண்டார். ஆனால் எல்லோரினும் ஒருபடி உயரே சென்று விட்டார். நமது மணிவாசகப் பெருந்தகையார் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாது 'முன்னைப் பழம் பொருட்கும், முன்னைப்பழம் பொருளாய் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அம்பெற்றியனாய்த் திகழ்ந்து, காலம் இறந்து நிற்கும் கருணைப் பெருங்கடலை நாயகியாகவும், தன்னை நாயகனாகவும் கொண்டு மதுரபாவத்தின் பொருளுக்கு ஓர் பொருளாய்த் திகழ்ந்தார்.

இந்த நாயகி நாயக பாவத்திலே எழுந்ததே, மணியிடை நூல் போன்று சிற்றின்பப் பொருளும், பேரின்பப்பொருளும் பின்னிப் பிணைந்திருக்கும் திருக்கோவையார் என்ற ஒப்பற்ற பெருநூலாகும்.

உருவாருந் தமிழ்ச்சங்க தடம் பொய்கைத் தோன்றி
உயர்ந்தோங்கு மெய்ஞ்ஞான வொளியை யுடைத்தாகி
மருவாரும் கிளவியிதழ் நானூறு ஆகி
மதுப்பொருள்வாய் மதிப்புலவர் வண்டாக உண்ணத்
தருவாரும் புலியூரின் உலகுய்யக் குனிப்போன்
தடங்கருணை யெனுமிரவித் தன் கதிரால் அலரும்
திருவாத வூராளி திருச் சிற்றம்பலவன்
திருவடித்தா மரைசாத்துந் திருவளர் தாமரை''

இத் திருக்கோவையாரே யன்றி, தேனெனப், பாலென, சில்லமிர் தாற்றென. பக்தர்கள் நாத்தழும் பேறப் பாடித் துதிக்கும் '' திருவாசகமும் '' ஆளுடை அடிகள் சைவப்பேருலகிற்கீந்த அருட்கொடையே. இத் திருவாசகம் ஓதுவோர், கேட்போர், உணர்வோர், அனைவருக்கும் பக்தியையும், முக்தியையும் ஒருங்கே அளிக்க வல்லது. கல்மனத்தையும் கரைவித்து, அரனடிக்கு அன்பராக்கும் பெற்றமை உடையது. இத்திருவாசகத்தின் பெருமை செப்புதற்கரியது. "வேதத்தினும் உயர்ந்தது திருவாசகமே'' என்கிறார் சிவப்பிரகாச சுவாமிகள். திருவாசகத்தைப் பொற்கலத்திற்கும், வேதத்தை மட்கலத்திற்கும் ஒப்பிடுகின்றார் சுவாமிகள். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை 'இறைவன் உலகை அழித்து விட்டுத் தன் தனிமையைப் போக்குவதற்காகவே திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகத்தின் ஒருபிரதியை எழுதிக்கொண்டார் என்கிறார்.

திருவாசகத்திற்கு உவமை தேடிப் போந்த ஒருவர், திருவாசகத்தை முழுதும் துய்த்து, அதன் சுவையூற்றுக்கள் தோறும் முக்குளித்து எழுந்து எழுந்து, அதன் பாநலத்தைச் சுவைத்துச் சுவைத்துத் தேனையே உவமையாகக் கண்டார். திருவாசகத்திற்குத் தேனை உவமை கூறுவதில் ஓர் தனிச்சிறப்பு உண்டு. தேன் உடலுக்கு வலியூட்டும். திருவாசகம் உணர்வுக்கு வலியூட்டும். தேன் குரலின் இனிமையை மிகுவிக்கும் திருவாசகம் சேயின் குரல் போல் இனிதாக்கி, சிவமாகிய தாய்க்குக் கருணையை மிகுவிக்கும். தேனை மிகுதியாக உண்டால் பித்தம் தணிவிக்கும். திருவாசகமோ, ஆணவகன்ம மாயா மலங்களாகிய பித்தத்தை அறவே வேரறுக்கும். தேன் நோயைத் தீர்க்கும். திருவாசகமோ பிறவியாகிய நோயைத் தீர்க்கும். ஆதலால் திருவாசகத் தேன் அல்லலறுத்து ஆனந்தமாக்கும் தன்மையது.

இத்தேனிலே தோயும் பொழுது தேனின் தெளிவாகக் காட்சி வழங்குகின்றான் இறைவன். ஆளுடை அடிகள் குருந்த மரத்தடியில் தன்னைக் குருவடிவாக ஆண்டு கொண்டு அருளாரமுதத்தை வழங்கிய வித்தகனை, ''நந்தாத் தேனை'' தேனின் தெளிவாக உவமிக்கும் நயம் உணர்ந்து அனுபவித்தற்குரியது.

தமது நமச்சிவாயப் பதிகத்தில்,

''தேசனே, தேனார் அமுதே சிவபுரனே''
என்றும் ஆத்ம சுத்தியில்,

''தேனை ஆனெயைக் கரும்பின் தேறலை''
என்றும்,

திருச்சதகத்தில்

''தேனே, அமுதே, கரும்பின் தெளிவே''
என்றும்

''தேனைப், பாலைக் கன்னலின் தெளியை''
என்றும்

''தேனே, அமுதே, சிந்தைக்கரியாய்''
என்றும்

திருவம்மானையில்,

''தேனையும், பாலையும், கன்னலையும் ஒத்தினிய'' என்றும் பற்பல இடங்களில் இறைவனைத் தேனிற்கு உவமிக்கின்றார் எல்லாவற்றிற்கும் சிகரமாக திருப் பொற்சுண்ணத்தில்

ஞானக் கரும்பின் தெளியைப் பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச் சுவை யாயினானை
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்து
நாமே''

என்று சுட்டுகின்றார். கரும்பின் தெளிவு வாயுள் இனிக்கும் ஆனால் ஞானக் கரும்பின் தெளிவு சித்தத்துள் இனிக்கும் காலத்தினால் கெடாத ''நந்தாத் தேனை'' வந்தித்து வணங்குவோம்.

''நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேனதுள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Always Visit*

*For All Your Requirements*

*in*

# Jewellery & Textiles

*We Serve you*

*in the field of*

**TEXTILES** *and* **JEWELLERIES**

**Saraswathy Stores**
(Saree Specialists)

75/77. Sea Streeet,

Colombo-11.

**Aruna Jewellery**
(Manufacturers of Latest and Modern Designs)

191, Sea Street,

Colombo - 11.

T. P. No. 22927


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரணவப் பொருளாம் பெருந்தகை

தெ. து. ஜயரத்தினம் J. P.
அதிபர், மகாஜனக் கல்லூரி

உலக மாதாவாகிய உமையம்மையாரிடம் ஞானப்பாலுண்டு சைவ நன் மக்களின் ஞானாசிரியராகத் திகழ்ந்த செம்மனப் புனிதர் திருஞானசம்பந்தர் "தனதடி வழிபடுமவரிடர் கடிகணபதி" என விதந்து போற்றியமையும், "எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுற...." எனக் கச்சியப்ப சிவாசாரியர் வேண்டி நிற்றலும் விநாயகப் பெருமானின் கருணைப் பிரபாவத்தை உணரக் காட்டுகின்றன.

விநாயகர் பிரணவ சொரூபி எனக் கூறுவர் பெரியோர். பிரணவத்தின் வரிவடிவமே அப்பெருமானின் ஒப்பற்ற தோற்றமாகும். அதன் ஒலிவடிவமே அகார உகார மகாரங்களாகிய 'ஓம்' எனப்படும் சப்தமாம். சைவ மக்கள் தாம் எதை எழுதப் புகுந்தாலும் ஓங்காரத்தின் வரிவடிவை முதலிற் பொறிக்கும் வழக்கமுடையர். அது பிள்ளையார் சுழி என வழங்கப்படுவதை நாமறிவோம். இந்தச் செயல் பிள்ளையாராகிய விநாயகப் பெருமானின் முதன்மையையும், செய்யப் புகும் கருமங்களுக்கு நேரும் இடையூறுகள் அப்பெருமானை வணங்குவதனால் நீங்கும் என்ற சைவமக்களின் அசையாத நம்பிக்கையையும் யாவரும் அறியத்தருகின்றது வேதம் ஓதும் போதும் மந்திரங்களை ஜெபிக்கும் போதும் ஓம் எனத் தொடங்குவதும், அங்ஙனம் ஜெபிப்பதனாலே தான் மந்திரம் சித்தி பெறுகிறது எனப் பாரம் பரியமாகச் சைவமக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும், பிரணவப் பொருளாகிய பெருந்தகையாரின் முதன்மையை நன்கு குறிப்பிடுகின்றன.

விநாயகப் பெருமான் தோற்றம் ஓங்கார வடிவமாய் ஐந்து கரங்கள் பொலிந்து விளங்குவதாய் உள்ளது. ஒரு திருக்கரமாகிய துதிக்கரம் கொண்டிருக்கும் இரத்தின கலசத்தில் நீர் மொண்டு அம்மையப்பரை அவர் பூசிப்பர். முன்கைகளுள் ஒன்று கயமுகாசுரனைக் கொன்று தேவரைக்காக்க முரித்த ஒரு திருக்கொம்பைத் தாங்குகிறது. மற்றைக் கரம் தமக்கென மோதகத்தைத் தாங்கி ஒளிர்கிறது. பின்னிரு கைகளும் பாசாங்குசங்களைத் தாங்கி ஆன்மாக்களாகிய எம்மை வழிநடத்தி எமது மல பந்தங்களைப்போக்குவனவாக அமைந்துள்ளன. இவ்வாறு ஐந்து கரங்களுள் மூன்றைத் தனித்தனி வெவ்வேறு கருமங்களுக்காக்கி, இரு கரங்களை எமக்காகத் தாங்கியிருப்பவர் விநாயகர். ஆதலினாலே தான் வேண்டும் வரமெலாம் நல்கும் பெருமானாகின்றார். இத்தன்மையைக் கச்சியப்பமுனிவர்,

**"பண்ணியம் ஏந்தும் கரந்தனக் காக்கிப்**
**பானிலா மருப்பமர் திருக்கை**
**விண்ணவர்க் காக்கி யரதனக் கலச**
**வியன்கரம் தந்தையர்க் காக்கிக்**
**கண்ணி லாணவவெங் கரிபிணித் தடக்கிக்**
**கரிசினேற் கிருகையு மாக்கும்**
**அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபத்**
**சகாயனை அகந்தழீஇக் களிப்பாம்"**

என்று தணிகைப் புராணத்துக் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய அருள்வள்ளலாகிய பெருமானே கொல்லங்கலட்டிப் பதியிற் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையாராவர். சோழ இளவரசியாகிய மாருதப் புரவீக வல்லியார் மாவையம் பதியிலே கந்தவேளுக் கெனக் கோயில் எடுக்க முன், ஏழு விநாயகதலங்களை நிறுவினாரெனவும் அவற்றில் ஒன்றே இந்த விநாயகராலய மெனவும் ஓர் ஐதீகமுண்டு. இதற்குப் போதிய சான்றுகள் இல்லாவிட்டாலும் நம்புவதற்கு இடமுண்டென்பது சைவமக்கள் பலரின் கருத்தாகும்.

இவ்வாறு தொன்மை வாய்ந்த இத் தலத்திற்கெனப் புதியதேர் ஒன்றை உருவாக்க வேண்டுமெனவும், அவ்விரதத்தில் விநாயகப் பெருமான் ஆரோகணித்து ஆண்டு தோறும் வீதிவலம் வந்து அன்பர்களுக்கு அருள் சுரக்க வேண்டுமெனவும் பல வருடங்களாக இவ்வூர் வாசிகள் கண்ட கனவு நனவாகும் காலம் அண்மியது கேட்டு மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். திருப்பணிச் சபையினர் ஒரு மகத்தான சிவதொண்டில் ஈடுபட்டு வெற்றியும் கண்டிருக்கிறார்கள். விநாயகப் பெருமானது பிரபாவத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாக இத் திருப்பணி நிறைவு, பொலிவு பெற்றுக் கொண்டிருக்கிறது சபையினரின் தொண்டுக்குத்துணை புரியும் நோக்கமாக ஒரு விஷேச மலரையும் பிரசுரித்து வெளியிட எண்ணியுள்ளார்கள் என யான் அறிகிறேன். அதற்கு என்னையும் ஒரு வாழ்த்துரை தரும்படி வேண்டினார்கள். யான் நன்றியுடன் அப் பணியை ஏற்றுக் கொண்டேன்

திருப்பணிச் சபையார் முயற்சி வெற்றியுறுவதாக என வாழ்த்துகிறேன்.

---

பவளமால் வரையில் நிலவெறிப் பதுபோல்
பரந்தநீற் றழகுபச் சுடம்பில்
திவளமா துடன்நின் றுடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்தில்
தரித்துயர் கிரிப்புறத் தொழுதும்
கவளமா களிற்றின் திருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழவியும் காதலும்

கி. வா. ஜகந்நாதன்

எந்தக் காரியம் செய்தாலும் செய்யா விட்டாலும் விநாயகனைப் பூசித்துவழிபடு வதை மறக்கமாட்டாள் பாட்டி; தமிழ்ப் பாட்டியாகிய ஔவையைத்தான் சொல் கிறேன். தமிழ் தளரா நாவும் அன்பு தளரா உள்ளமும் உடைய அந்தப் பெரு மாட்டி.

“ பாலும் தெளிதேனும்
பாகும் பருப்பும்இவை
நாலும் கலந்துனக்கு
நான்தருவேன் — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத்
தூமணியே, நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும்
தா ”

என்று விநாயகப் பெருமானை வேண்டித் தமிழ்ப் புலமை பெற்றவள் அல்லவா?

இன்று சுந்தரமூர்த்தி நாயனர், இறை வன் ஆனையும் ஆணையும் அனுப்பத் திருக் கைலை போகிறார். அவரைத் தொடர்ந்து பரியின் மேல் பரிவுடன் சேரமான் பெரு மாள் நாயனரும் போகிறார். சேரனுடன் தமிழ்ச் சுவையை அளவளாவிப் பருகும் ஔவைக்கு இச் செய்தி தெரிந்தது. ‘ எத் தனை காலம் இந்த மண்ணுலகில் வாழ் வது! நாமும் கைலை செல்வேம் ’’ என்ற எண்ணம் வந்தது.

மனத்தினை அடக்கமாட்டாமல் அதன் போக்கிலே செல்பவர்களுக்கு மரணம் வரும் காலம் இன்னதென்று தெரியாது. இறைவனிடம் பேரன்பு கொண்டு அவன் அருளால் மனத்தை வசப்படுத்தியவர் களுக்கு மரணம் வருங்காலம் முன்பே தெரியும். தவத்திலும் யோகத்திலும் முதிர்ந்தவர்களுக்கோ, தாம் வேண்டும் போது பூவுலக வாழ்வை நீக்கிவிடமுடியும்.

பழுத்த பழமாகிய ஔவை, நெடு வழிக்கு நல்ல துணை அமைந்திருக்கிறது என்று எண்ணிச் சேர மன்னருடன் கைலை செல்ல எண்ணினாள். விநாயக பூசை செய் யும் நேரம் அது. தான் நினைத்த காரியம் முட்டின்றி முடியவேண்டுமென்று பூசை யைப் புரியத் தொடங்கினாள். கைலை போகும் வேகம் உந்தியது, பூசையும் வேக மாக நடந்தது. அப்போது ஒரு குரல் கேட் டது; ‘‘ஏன் இத்தனை விரைவு? அமைதி யாகப் பூசை செய். உன் விருப்பம் நிறை வேறும்’’ என்று ஔவையின் காதில் விழுந்தது சுற்றுமுற்றும் பார்த்தாள்; யாரும் இல்லை. விநாயகப் பெருமானே இவ்வாறு அருளினான் என்று உணர்ந்து, அமைதியாகவே பூசையைத் தொடர்ந்து செய்தாள்.

பூசை முறைப்படி நிறைவேறியது; பாட்டிக்குத் திருப்தி பிறக்கவில்லை. ‘‘நம் விருப்பத்தை நிறைவேற்றும் பெருந்துணை யாகக் கரிமுகக் கடவுள் இருப்பதை மறந்து அவசரப்பட்டோமே’’ என்று உருகினாள். அப் பெருமானுடைய திருவரு ளால் தனக்கு வாழ்வில் கிடைத்த நலங் களையெல்லாம் எண்ணிப் பார்த்தாள். அருந்தமிழ்ப் புலமையும் பெரும்புகழ் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையும் அவன் வழங்கினான். குருவடிவாகி வந்து உவட்டா உபதேசம் புகட்டினான். தெவிட்டாத ஞானத் தெளிவைக் காட்டினான். ஐப்புலன் தன்னை அடக்கும் உபாயத்தை அருளினான். கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து, இருவினை தம்மை அறுத்து இருள் கடிந்தான். தவம் பலிக்கச் செய்தான். யோகம் நிறைவுற அருளினான். ''என்னை அறிவித்து எனக் கருள் செய்து முன்னை வினையின் முதலைக் களைந்தான்.''

அவை மட்டுமா? வாக்கும் மனமும் இல்லா மனோலயம் தேக்கியே அவளுடைய சிந்தை தெளிவித்தான். அருள் தரும் ஆனந்தத்தில் அழுந்தினான். அஞ்சு அக்கரத்தின் அரும்பொருள் தன்னை நெஞ்சில் நிறுத்தினான். இவ்வாறெல்லாம் தத்துவ நிலையைத் தந்து ஆட்கொண்ட விநாயகப் பிரானை மறக்கலாமா? புலமை பெறுவது எளிது; அருள் இன்பம் பெறுவது அரிது. அதனை அருளிய பெருமானுடைய கருணையை எண்ணி எண்ணிக் கண்ணீர் ஆறாகப் பெருகப் புளகம் போர்ப்ப அமர்ந்திருந்தாள்.

இப்போது அவளுக்குக் கைலையின் நினைவு மறைந்தது. சேரமானைப் பற்றிய சிந்தனை ஒழிந்தது. தன்னையே மறந்து விநாயகப் பெருமானுடைய திருவருள் இன்ப உணர்ச்சியிலே மிதந்தாள். அவள் உள்ளத்தில் அந்த இன்ப அலைகள் மோதின. அப்போது ஒரு பாட்டு எழுந்தது. கவித்திறமைபடைத்தவர்கள் உள்ளம் உணர்ச்சி வசப்படும் போதெல்லாம் கவி பிறக்கும். நாம் துயரத்தில் ஆழும்போது புலம்பலும், மகிழ்ச்சியில் திளைக்கும்மோது ஆ ஊ. என்ற ஆரவாரமும் எழுகிறதுபோல, கருவிலே திருவுடைய கவிஞர்களிடம் கவி எழும்.

அப்போது உதயமான கவிதையே **விநாயகர் அகவல்** என்ற அழகிய திருப்பாட்டு. எழுபத்திரண்டு அடிகளை உடைய அப்பாட்டில் ஒளவைப் பாட்டி முதல் முதலில் விநாயகப் பெருமானுடைய திருவடியை எண்ணி, அதன்கண் பலவிசை பாடும் சிலம்பைத் தியானித்து, அவனுடைய திருவுருவம் முழுவதையும் சொல்லால் கோலம் செய்கிறாள்..

**'சீதக்களபச் செந்தாமரைப்பூம்**
**பாதச்சிலம்பு பலவிசைபாடப்**
**பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும்**
**வன்னமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்**
**பேழைவயிறும் பெரும்பாரக்கோடும்**
**வேழமுகமும் விளங்குசிந்துரமும்**
**அஞ்சுகரமும் அங்குசபாசமும்**
**நெஞ்சிற்குடிகொண்ட நீலமேனியும்**
**நான்றவாயும் நாலிருபுயமும்**
**மூன்றுகண்ணும் மும்மதச்சுவடும்**
**இரண்டுசெவியும் இலங்குபொன்முடியுந்**
**திரண்டமுப்புரிநூல் திகழொளிமார்பும்**
**சொற்பதங்கடந்த துரியமெய்ஞ்ஞான**
**அற்புதம்நின்ற கற்பகக்களிறே.''**

இவ்வாறு தொடங்கி, தான் விநாயகன் அருளால் பெற்ற பேற்றையெல்லாம் சொல்லி கடைசியில் அப்பெருமானைச் சரண் புகுகின்றாள் தமிழ்ப்பாட்டி.

**தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட**
**வித்தக விநாய, விரைகழல் சரணே!**

உலக வாழ்வை நீக்கும்போது இறைவனுடைய திருவடியே சரணமென்று புகுவது அறிஞர் இயல்பு. அந்த முறைப்படியே ஒளவை பாடி நிறைவேற்றினாள். பாட்டு முடிந்தும் அவள் உள்ளக்கிளர்ச்சி நிற்கவில்லை. பாட்டின் கார்வை போல இன்பம் உள்ளத்தே தேங்கி நின்றது.

அப்போது விநாயகப் பெருமான் தன் துதிக்கையினால் அப்பெருமாட்டியைத் தூக்கிக் கைலையிலே கொண்டு சேர்த்தான். ஒளவை பாட்டால் துதிக்கை செய்து நிறைவேற்றின அளவிலே விநாயகன் துதிக்கை அவள் விருப்பத்தை நிறைவேற்றியது.

கண்ணை விழித்துப் பார்த்தாள் ஒளவை புதிய இடம்; புதிய தோற்றம்; எல்லாம் மாசு மறுவற்ற வெள்ளி மயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் திருக்கைலாயம் என்று அங்குள்ள சிவகணத்தினரில் ஒருவர் சொன்னார். பாட்டி வியப்பினால் மலர்ந்த கண்களுடன் பார்த்தாள். நாலு திசைகளையும் பார்த்தாள், என்ன சாந்தமான சூழ்நிலை! ஏதோ புதிய ஆனந்தம் தன்னைக் கரைத்துக் கொண்டது போன்ற உணர்ச்சி அல்லவா எழுகிறது?

சிறிது நின்று நிதானித்தாள். கணபதியின் கருணையால் சிறிதும் முயற்சி இல்லாமலே கைலை வந்ததை எண்ணி உருகி வழுத்தினாள். அப்போதுதான் சேரமான் பொருமாளின் நினைவு வந்தது. 'அவர்கள் முன்னே போயிருப்பார்களோ?' இந்த ஐயத்தை அருகில் நின்றவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டாள்; அவர்கள் இன்னும் வந்து சேரவில்லை.

பாட்டி நின்றாள். சுந்தரர் வந்தார். அவர் சிவபெருமான் நினைவையன்றி வேறு ஒன்றும் இன்றி வந்தவர்; பாட்டியைக் கவனிக்கவில்லை. பின்னாலே சேரமான் பெருமாள் வந்தார் பாட்டி நிற்பதைக் கண்டு வியந்து "எப்படி வந்தீர்கள்; காலால் நடந்தா?" என்று கேட்டார்; அருகில் வாகனம் ஒன்றும் இல்லையல்லவா?

"இல்லை, கையால்" என்றாள் பாட்டி.

"கையாலா? விளங்கவில்லையே!"

"விநாயகப் பெருமான் தம் துதிக்கையாலே என்னை இங்கே கொண்டு வந்து விட்டார். வாகனத்தில் வரும் உங்களுக்கு முன்னே நான் வந்துவிட்டேன். எல்லாம் உமை மைந்தர் திருவருள் வலிமை" என்று சொல்லி பாடலையும் கூறினாள்.

**மதுர மொழிநல் உமையாள்**
**புதல்வன் மலர்ப்பதத்தை**
**முதிர நினையவல் லார்க்கு அரி**
**தோ? முகில் போல்முழங்கி**
**அதிர நடந்திடும் யானையும்**
**காதம்; அதன்பின்வரும்**
**குதிரையும் காதம்; கிழவியும்**
**காதம் குலமன்னனே!**

தமிழ்ப் பாட்டியைத் திருக்கைலையில் ஏற்றக் காரணமாக இருந்த **விநாயகர் அகவல்** தமிழ் மக்களுக்கு கிடைத்த பெருவரமாக இன்னும் நின்று நிலவுகிறது. அதைப்பாராயணம் செய்து தம் விருப்பம் நிறைவேற்றப் பெறும் அன்பர்கள் பலர்.

---

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவம்தம் கை.

—கபிலதேவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments of :*

# FREE LANKA TRADING COMPANY

EXPORTERS, IMPORTERS, MERCHANTS, AGENTS

P. O. BOX 125

**160, Reclamation Road,**

**COLOMBO - 11**

*Telephones:*
Office 27027
Residence 27024

*Cable :*
"PROMT"

AND

# ECHO LIMITED

ELECTRICAL ENGINEERS & MERCHANTS
CONTRACTORS & GENERAL MERCHANTS

*Office & Showrooms :*

**160, Reclamation Road, Colombo 11**

*Factory :*

**23, Market Street, Pettah Colombo 11**

*Stores :*

**PARAKRAMA STORES**
**Kotahena, Colombo 13**

*Telephone :* 27027

*Cable :* "FLORECHO"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

235
KOL
AR

*First in the Field - Always in the Lead!*

# CEYLON THEATRES LTD.

REIGN SUPREME IN THE ISLAND'S CINEMA ENTERTAINMENT FIELD

★ ★ ★

***Don't Miss These Block - Busters:***

M. G. Ramachandran—P. S. Veerappa—Asokan—Saroja Devi—Jayalalitha—Chandrakantha — Madhavi — Nambiar — Manohar—Nagesh— Chakrapani—K. R. Ramaswamy—Friend Ramaswamy—in

**A R A S A   K A T T A L A I**

Sivaji Ganeshan—Padmini—K. R. Vijaya—Nagesh—Asokan—V. Nagiah—Manorama—Madhavi—Baby Rajamani in

**I R U   M A L A R G A L**

M. G. Ramachandram—M. N. Nambiar—V. K. Ramaswamy—Nagesh—Jayalalitha—Rajshree—L. Vijayalakshimi—Pandari Bai in

**K U D Y I R U N T H A   K O I L**—in Eastman Colour

Sivaji Ganeshan—Padmini—K. R. Vijaya—Raja Sulochana—Sowcar Janaki—G. Sakuntala—Manorama—Nagesh—M. N. Nambiar

**T H I R U M A L   P E R U M A I**

in Eastman Colour

M. G. Ramachandran—Nambiar—Asokan—Jayalalitha—Nirmala—Padmini—Nagesh—Santhanam—Pusphamala in

**R A H A S I Y A   P O L I C E**—in Eastman Colour

ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
249673

*With the Compliments of*

# The Colombo Ice & Aerated Water Co., Ltd.

10, UNION PLACE

COLOMBO 2

*Dial* 2619

*Space Donated By*

# RAJAH STORES

TEXTILE MERCHANTS

**139, Second Cross Street**

**COLOMBO - 11**

*Telephone :* 83683

*With Best Wishes*

*from*

# MUNARO HARDWARE STORES

**311, Sri Sangaraja Mawatha**

(Skinners Road South)

**COLOMBO - 10**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய வாழ்க்கையின் முக்கிய அம்சம்

(பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம்)

சமயம், மூன்று பகுதிகளையுடையது. அவை: தத்துவங்கள், கிரியைகள், அனுபவம் என்பன. உள்ளத்திற் படிமுறையான அன்பு முதிர்ச்சியேற்பட்டு இறையனுபவமாக விளைவதே சமய வாழ்வின் முடிந்த குறிக்கோளாகும். இறையனுபவமாகிய கடவுட் காட்சியை யெய்துதற்கு மனத்தூய்மை இன்றியமையாதது. கண்ணடியில் ஒரு பொருளைப் பார்ப்பதற்குக் கண்ணடி மிகப்பரிசுத்தமாயிருக்க வேண்டியது போல, உள்ளத்திற் பரம் பொருளைக் காண்பதற்கு உள்ளம் மிகப் பரிசுத்தமாயிருத்தல் வேண்டும்.

## தத்துவங்கள்

உள்ளத்தூய்மையாலும், கடவுட்காட்சியாலும் அனுபூதிமான்களாற் கண்டறியப்பட்ட உண்மைகளே சமய தத்துவங்கள். சமயதத்துவங்களைப்பற்றிய உணர்வு வலியுறவும், நடைமுறை வாழ்க்கையானது அவ்வுணர்வின் வழிபட்டுச் செம்மையுடன் மிளிரவும், உள்ளத்தின் அழுக்கைப் போக்கவும் உபகாரமாயிருப்பன கருமங்கள். கருமங்கள் கிரியைகள் எனவும்படும். சமய அறிவும் சமயக்கிரியைகளும் இலட்சியங்களல்ல, கருவிகளே. இவற்றின் மூலம் உள்ளத் தூய்மை பெற்றுக், கடவுட் காட்சியை எய்துதலே இலட்சியமாகும்.

உலகிலுள்ள எல்லா மதங்களும், தத்துவங்களையும், கிரியைகளையும் அனுபவங்களையும் பெற்றிருக்கின்றன எனினும், சைவ சமயத்தில் நாம் இவற்றைத் தெளிவாகவும், சிறப்பாகவும் பெற்றிருக்கின்றோமென்பதற்கையமில்லை.

## கிரியைகள்

அனுபூதிமான்களால் அலசியாராய்ந்து வடித்துத் தரப்பட்ட சிறந்த தத்துவஞானம் நமக்குக் கிடைத்திருக்கிறது. நவீன விஞ்ஞானிகளுங் கேட்டு வியப்படையத்தக்க உண்மைக் கொள்கைகள் சைவ சித்தாந்தமாக மலர்ந்துள்ளன. தமிழகத்தின் பேரரசர்களும் பெருமக்களும் ஏராளமான திருக்கோயில்களையமைத்துத் தந்திருக்கின்றார்கள். திருக்கோயில்களிலும் ஏனைய இடங்களிலும் சமயத்தின் பெயரால் நடைபெறும் கிரியைகள் எண்ணிறந்தன. பிறந்த நாள் முதல் இறக்கு நாள் வரை நாம் பலவித கிரியைகளுக்கு உட்படுத்தப் படுகின்றோம். இவையனைத்துக்கும் மேலாக, அரும்பெரும் முது சொத்துக்களான திருமுறைகள் நமக்குக்கிடைத்தன. அருளாளர்கள் தாம் பெற்ற இறையனுபவ முதிர்ச்சியை அவற்றின் மூலம் வெளிப்படுத்தினார்கள். நெஞ்சுருக்கி என்புருக்கும் இனிமை வாய்ந்த திருமுறைகளைப் படித்து அன்பினை வளர்க்கும் வாய்ப்பு நமக்குண்டு.

தத்துவங்களையும் கிரியைகளையும், மந்திரங்களையும் அருள் வாக்குகளையும் கோயில்களையும் தீர்த்தங்களையும் அன்றாடம் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்ற நாம், அவற்றை முறைப்படி பயன்படுத்துகின்றோமா? அவற்றைப் பயன்படுத்தியதன் மூலம் நமது உள்ளத்திற் சிறிதேனும் அசைவுண்டாயிற்றா? கல்நெஞ்சம் சிறிதாதாவது கனிந்துள்ளதா? அக்கனிவு நடத்தையிலும் பேச்சிலும் வெளிப்படுகின்றதா? என்ற வினாக்கள் பிரதானமானவை; நம்மை நாமே கேட்கவேண்டியவை. இவற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுக்குத்திருப்திகரமான பதில் கிடைக்கும் பொழுதுதான் நமது சமய வாழ்வு வளர்ச்சியுறுகின்றதென்பது கருத்து.

## இலகுவான வழி

திருமுருகாற்றுப்படையில் ஓரழகிய பகுதியுண்டு. முருகப்பெருமானையடைய வேண்டுமென்ற அவாவுடன் சென்ற ஓரடியாரை, அப்பெருமானிடம் ஆற்றுப்படுத்தினர் ஆசிரியர்.

**'சேவடி படருஞ் செம்மலுள்ள மொடு**
**நலம்புரி கொள்கைப் புலம் புரிந்துறையுஞ்**
**செலவு நீ நயத்தினையாயிற் பலவுடன்**
**நன்னர் நெஞ்சத்து இன்னசைவாய்ப்ப**
**இன்னே பெறுதி நீ முன்னிய வினையே'**

என்னும் பகுதியில்

முருகப் பெருமானையடைவதற்குரிய சுலபமான வழியை அவர் விளக்குகின்றார் ''முருகனையடைய வேண்டுமாயின், அவனுடைய சேவடிகளிற் பொருந்தியிருந்து அவனையே தியானிக்குந் தலைமைப்பாடுடைய உள்ளம் வேண்டும்; பலபிறவிகளில் நன்மையே செய்துவந்த காரணத்தால், ஞானத்தைவிரும்பிப், புலன்களை வென்று அவன் திருவடிக்கீழ்ச் சென்று வாழும் வாழ்வே பெருவாழ்வென எண்ணி அதனை நயத்தல் வேண்டும்; அங்ஙனம் நயக்கும் நீ அப்பேற்றையடைதல் கடினமென்றஞ்சாதே; பல உடன் நன்னர் நெஞ்சத்து' அஃதாவது பலவாய அழுக்குகளை வெறுத்தொதுக்கிய நல்ல சுத்தமான மனத்தின் கண்ணே இனியவிருப்பத்தை மேற்கொண்டால் அவ்விருப்பம் நன்கு நிறைவேறும்; நல்ல நெஞ்சம் வாய்த்து, அதில் இனிய விருப்பமுஞ் சேர்ந்துவிட்டால், நீகருதிய முருகனுடைய திருவடியை இக்கணமேயடைந்துவிடுவாய்'' என்பது நக்கீரர் பெருமானின் கூற்று. முருகப்பெருமானையடைவதற்குரிய தகுதி, 'நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்த்தல்' என்ற கருத்து சமய வாழ்க்கையின் முக்கிய அம்சம், உள்ளத்தைக் தூய்மை செய்தலே என்பதை வலியுறுத்துகின்றது.



மேலும், மணிவாசகப் பெருமான் திருவெம்பாவையில், ''சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை'' என்றதும் சிந்திக்கத்தக்கது. சித்தத்தில் அழகுடையவர், மனத்தின்கண் அன்புத் தூய்மையுமுடையோர், நமது சிவனைப் பாடாமலிருப்பார்களா என்பது, அழகிய சித்தத்தில் சிவ வெளிப்பாடு தானேயுண்டாகுமென்பதை விளக்குகின்றது. மனத்துக் கண்மாசினையகற்றாது, தத்துவஞான நூல்களைப் படிப்பதாலோ கிரியைகளைச் செய்வதாலோ பெரும் பயனுண்டாகாது. இதனாலேயே வள்ளுவப்பெருந்தகை, அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தில்

''மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற'' என்று கூறினர்.

ஒருவன் தன் மனத்தின் கண் மாசில்லாதவனாயிருக்கக் கடவன். அதுவே அறமாவது. மனமாசு நீக்காது செய்யும் பிறசெயல்களெல்லாம் வெறும் ஆரவார நீர்மையை உடையனவே என்பது வள்ளுவர் கருத்து. ஒருவர் செய்யும் கருமங்களின் பெருமை, அக் கருமங்களின் நீள, அகல ஆழங்களிலிருந்து கணிக்கப்படமாட்டாது. அக்கருமத்தை அவர் எப்படிப்பட்ட நோக்குடன் செய்கின்றார் என்பதிலிருந்தே கணிக்கப்படும். தக்கன், இராவணன், சூரன் ஆகியோர் பெரிய கல்விமான்களாயும், பலசாலிகளாயும், சிறந்த கருமவீரர்களாயும் இருந்த போதிலும், மனத்தூய்மையின்றி அகந்தையுடன் அவர்கள் செயலாற்றியதால் அவர்களின் செயல்கள் இறைவனுக்குகந்ததாயிருக்கவில்லை.

## செம்மனச்செல்வி

பாண்டி நாட்டிலே வாழ்ந்த வந்தியென்னுந்தவ மூதாட்டி, இறைவனைத் தனக்குக் கூலியாளரா யெழுந்தருளி வரச் செய்தவர். இறைவனுக்குப்பிட்டினையிட்ட பாக்கியம் பெற்றவர். ''பிட்டிடும் நற்றவமுடையாள்'' எனத் திருவாதவூரராற் புகழப் பெற்றவர். இத்தனை பெருமைக்கும் அவரிடமிருந்த தகுதி 'செம்மனச் செல்வி' யாக இருந்தமையே. கூலியாளராக வந்

தவர் சிவபெருமானே என்பதை அவர் சிறிதும் அறியார். எனினும், அணையை யடைப்பதற்காக,எளிமையான தோற்றத்துடன் வந்த அக் கூலியாளரைக் கண்டதும், தம்மகனைக் கண்டவர் போல் மனங் குழைந்து, வேலைக்குச் செல்லுமுன்னே வயிரார உண்ணும்படி உதிர்ந்த பிட்டு முழுவதையும் கொடுத்துப் பக்தி சிரத்தையுடன் அனுப்பினார். இறைவன் திருவருளாற் பிட்டு முழுவதும் உதிர்ந்து போகவும், தமது வாணிகத்துக்கு நட்டம் வந்ததே என்று சிறிதுஞ் சஞ்சலப்படாது, கூலியாளரை மகிழ்வுடன் உண்பித்தார். 'தாயுமிலி, தந்தையிலி, தான் தமியன்' ஆகிய இறைவன், தாயன்பைப் பருகுவதற்கு வந்த குழந்தைபோல் நடித்து, அணைகட்டாது விளையாடிய பொழுதும் அவர் சிறிதேனும் வெறுப்புக் கொள்ளவில்லை. இங்ஙனஞ் செம்மை வாய்ந்த தூயமனத்தையுடையமையால் அவ்வம்மையார் இறைவன் திருவருக்காளுளாயினர்.

## பூசலார் நாயனர்

பூசலார் நாயனர் ஏழமை காரணமாக இறைவனுக்குக் கற் கோயிலெடுக்க முடியாமல் வருந்தினர். பின்னர், மெய்யன்போடு ஆகமவிதிப்படி ஒரு கோயிலை மனத்திற் கட்டினர். அக்கோயிலில் எம்பெருமானை எழுந்தருளச் செய்வதற்கு முகூர்த்தமும் வைத்தார். சோழப்பேரரசரொருவர், கற்கோயிலொன்றைப் பெருஞ் செலவிற் கட்டி, அங்கு இறைவனைப் பிரதிட்டை செய்வதற்கு, பூசலார் குறித்த அதே நாளையே குறித்தார். அன்றிரவு, இறைவன் அரசருடைய கனவிற் ரேன்றி, முகூர்த்தநாளைத் தள்ளிவைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

நின்றவூர்ப் பூசலன்பன் நெடிது நாள்
நினைந்து செய்த
நன்று நீடாலயத்து நாளை நாம் புகு
வோம் நீயிங்கு
ஒன்றிய செயலை நாளை யொழிந்து பின்
கொள்வாயென்று
கொன்றைவார் சடையார் தொண்டர்
கோயில் கொண்டருளப் போந்தார்.

என்பது சேக்கிழார் திருவாக்கு. மன்னன் அன்புடன் கட்டிய பெருங்கோயிலுக்கு மேலாக, பூசலார் நாயனரின் மனக் கோயிலுக்கு இறைவன் முதன்மையளித்தமை, அவர் மனத்தின் பெருந்தூய்மையும் அன்புங் கருதியாகும், ஒருவன் தன் பொருளில் எவ்வளவு தொகையைச் செலவிடுகின்றன் என்பதைவிட தன்மனத்தின் எவ்வளவு பகுதியை இறைவனுக்கு ஒதுக்கிக் கொடுக்கிறன், அவன் எழுந்தருளியிருக்கக் தகுதியாக்குகிறன் என்பதே பெரியதாகும்.

## வீட்டின் விழுப்பம்

நம் சமய நூல்களையாராய்ந்து பார்த்தால், துன்பமென்பதும் வீடென்பதும், மன நிலையைப் பொறுத்தே பெரும்பாலும் அமைந்திருப்பதைக் காணலாம்.

"ஆணவத்தோடத்து விதமானபடி
மெய்ஞ்ஞானத்
தாணுவினேடத்துவிதஞ் சாருநாளெந்
நாளோ"

என்னுந்திருப்பாடலில், உள்ளத்தைத் தூய்மை செய்வதிலேற்படும் புரட்சிகரமான ஒரு மாறுதலே முக்திக்குக் காரணமாகின்றதெனத் தாயுமானவர் வற்புறுத்தினர். உயிரானது ஆணவ அழுக்குடன் இரண்டறக் கலந்து நிற்கும் மனநிலையை மாற்றி, மெய்ஞ்ஞான ஒளிப்பிளம்பாகிய இறைவனுடன் இரண்டறக் கலந்து விடுமானல் அதுவே வீடாகும். தீரர்கள் மிக விரைவில் மனத்தூய்மையைச் சாதித்து வீடுபெற்றுவிட, கோழைகள் கோடானுகோடி பிறவி யெடுத்து உழல்வார்கள்.

அன்பும் நீதியுங்கூடிய சாந்தநிலை, பகைமையையும் வெறுப்புணர்ச்சியையும் வென்ற வீரம், கோபத்தையும் உலோபத்தையும் கடந்த பெருமை என்பன மனத்தூய்மையின் சின்னங்களாம். சமயவாழ்வில் முன்னேறி இறைவனை நோக்கி நடைபோடுகின்ற அன்பர்களுக்கு இவைகளே அடையாளங்கள். இப்பண்புகளை வளர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ARCHIVES

துவரும் மகான்கள் இறைவனின் தொடர்பை நேரிற் பெறுவர்.

அவர்களுக்கே இறைவன் மென்மேலும், சந்தர்ப்பங்களைக் கொடுத்துப் பரிசோதனை செய்கின்ருன். கணிதத்திலே தீரனை மாணவனொருவனுக்குக் கடினமான கணக்குகளை மேன்மேலும் கொடுத்துப் பரீட்சிக்கும் கணித ஆசிரியனைப்போல, இறைவனும் தன்னடியவரின் மனத் தூய்மையைப் பரீட்சிப்பான். இச் சோதனைகளாற் சாதனையாளன் தனியனுக்கப்படலாம்; ஏழையாக்கப்படலாம்; உறுப்பிலியாக்கப்படலாம். உலகோர் பார்வைக்கு அவன் தோல்வியடைந்தவன் போற்ருேன்றலாம். ஆனுல் அவனுடைய ஆன்மா வெற்றியீட்டி வளர்ச்சியடைந்து கொண்டே செல்கின்றது. இவ்வெற்றியே சமயத்தின் வெற்றி. ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் சமயம் வெற்றிபெற, நீதி வெற்றிபெற, திருவருள் வெற்றிபெற வழிகாணுதல் வேண்டும்.

## உளத்தூய்மை

சைவப் பெருவாழ்வு வாழ்ந்த அருளாளர்களின் சரிதைகளைக் கூறவந்த சேக்கிழார் பெருமான், அவர்கள் வரலாறு கூறுமுன், சைவ வாழ்வின் அடித்தளமாவது, மனத்தூய்மையோடுகூடிய நீதி வாழ்வென்று காட்டுதற்குப்போலும், திருநாட்டுச் சிறப்புக்கூறிப் பின்னர் திருநகரமாகிய திருவாரூர்ச் சிறப்புக்கூறும் பொழுது திருவாரூரையாண்ட நீதிமன்னராகிய மனுநீதிகண்ட சோழரின் திருவுள்ளத்தூய்மையைத் தித்திக்கும் திருப்பாடல்களிற் தெளித்துத்தந்தனர். மன்னரது திருவுள்ளச் சிறப்பும், அத்திருவுள்ளத்தைத் தம் சிந்தையிலே சிந்தித்த சேக்கிழார் பெருமானின் சிறப்புஞ் சிந்திக்கற்பாலன.

அரச நீதியை மனிதகுல ஒருமைப் பாட்டில் மாத்திரமன்றி, ஆன்மவர்க்க முழுவதிலும் வைத்துச் சாதித்தவர் மனுநீதிகண்ட சோழர். தம்முயிர் போல் மன்னுயிரெல்லாவற்றையும் மதித்துப் போற்றிக் காத்துவந்த அவருள்ளத்தில் தாம் - பிறர், தம்முடையர் — பிறருடையவர் என்ற வேறுபாடோ, பேதவுணர்ச்சியோ நடுக்கமோ கிடையாது. செம்பொன்னை நிறுக்கும் தராசின் நாக்கைப்போல அவர் உள்ளமும் நேர்மையாகவே சிந்தித்தது. அம்மன்னரின் மகன், தேரிலேறித் திருவாரூர் மணிவீதியில் வந்தான். அரசகுமாரனே, அவனைச் சூழ்ந்து வந்த மக்களோ தன்னைக் காணுதவகையில் ஒரு ஆண் கன்று - புனிற்றிளங்கன்று - துள்ளிக் கொண்டே அவ்வீதியில் வந்தது.

அக்காட்சியை அகக்கண்ணுற் பார்த்தார் சேக்கிழார் பெருமான். அங்கு வந்தது சாதாரண பசுக்கன்ருகவே அவருக்குத் தோற்றவில்லை. ஒப்பற்ற பெரிய தருமதேவதையானது, சிறிதேனுமிரக்கமின்றி, மனுநீதி கண்ட சோழரின் நடுக்கமற்ற, செம்மையான உள்ளப்பாங்கினைச் சோதனை செய்வதற்கு, உருவந் தாங்கி வெளிவந்தது போன்று அக்கன்று காட்சியளித்தது.

தனிப்பெருந் தருமந்தானேர் தயாவின்
றித் தானை மன்னன்
பனிப்பில் சிந்தையினிலுண்மைப் பான்
மை சோதித்தாலென்ன
மனித்தர் தன்வரவு காணு வண்ண
மோர் வண்ண நல்லான்
புனிற்றிளங்கன்று துள்ளிப் போந்ததம்
மறுகினூடே.

கன்று தேர்ச்சில்லிலகப்பட்டிறந்தது; தாய்ப்பசு மன்னருக்கு முறையிட்டது. என்ன அற்புதம்! மனுநீதிகண்ட சோழர் தம் மகனுக்குப் பரிந்து பேசவில்லை. கன்றையிழந்த பசுவுக்காக வாதாடினுர். வாய் பேசாப் பிராணியான அப்பசுவாலமர்த்தப்பட்ட வழக்கறிஞர் போலல்லவா பேசினுர்.

என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள்
செயவிசைந்தே
அன்னிய னேருயிர் கொன்ற லவனைக்
கொல்வேனுற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றென்மனு நூல் தொடை மனுவாற்
றுடைப் புண்டதெனும் வார்த்தை
மன்னுலகிற் பெற மொழிந்தீர்
மந்திரிகள் வழக்கென்றான்.

இங்ஙனம் வழக்குரைத்த மன்னர், தம் மொரு மகனையிழந்து முறை செய்யத் தீர் மானித்தார். மனுநீதிகண்ட சோழர், உள் ளத் தூய்மையிலும் நீதியிலும், அன்பிலும் தருமதேவதை செய்து பார்த்த பரீட்சை யிலே தேறி மேம்பட்டு விட்டார். புலமை யுலகமாகிய தேவருலகம், பூமழை பொழி ந்து அவ்வீரரை வாழ்த்தியது. இந்தகைய மன்னர்கள் தங்கள் செங்கோன்மையாற் புனிதப்படுத்திய புண்ணிய பூமி,

'மாசிலாத மணிதிகழ் மேனி மேற்
பூசும்நீறுபோல் உள்ளும் புனிதர்கள்'

ஆகிய அறுபத்து மூன்று தனியடியார் களையும் வேறு தொகையடியார்களையும் தந்தது.

## சமய வாழ்வின் உயர் நிலை

எந்த நாட்டிலே, ஆட்சியாளர் தத் தம் சொந்த நலன்களைப் பேணுவதற்காக மக்களின் நலனைப் பணயம் வைக்கின் றனரோ, எந்தநாட்டின் கல்விமான்களும், தொண்டு புரிவோரும் தத்தம் குறுகிய அபிமானங்களிலிருந்து மீளமுடியாது தத் தளிக்கின்றனரோ, எங்கு அரசவை தொடக்கம் அங்காடி வீதிவரை பொய்மை யும் நீதியீனமும், வன்கண்மையும் மலிந்து கிடக்கின்றனவோ அங்கு மகான்கள் எப் படிப் பிறக்க முடியும்! சமய வாழ்வு மலர் வதாக எப்படிக் கூறமுடியும்!!

பேதமற்ற அன்பே இறைவனின் திரு வுருவம். அன்புருவான அவனையடைவது நமது குறிக்கோளாயின், நமதுள்ளத்திற் பேதமற்ற அன்பையும் நீதியையும் வளர் த்து அதைத்தூய்மை செய்ய வேண்டும். மனத்தூய்மையைச் சாதிப்பதே சமயவாழ் வின் முக்கிய அம்சமாகும்.

---

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப் பிரானூர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

— நாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Compliments*

*of*

❋

# RAJAH BEEDI COMPANY

COLOMBO 14

*Telephone :* 21739

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகா

# கருணை


அருள்மொழி அரசு

திரு முருகா கிருபானந்தவாரியார்


கருணையென்பது ஒப்பற்ற ஒரு பொருள். அதனை எல்லோரும் உடையவர்களாக இருக்க வேண்டும். இறைவர் கருணையே வடிவானவர். அவருடைய கருணையை நாம் பெறவேண்டும். எல்லோருக்கும் இறைவருடைய கருணையைப் பெறுவதில் விருப்பந்தான். ஆனால் விரும்பியபடி எல்லோரும் பெறுகின்றார்களா? இல்லை. ஒரு சிலர் தான் பெறுகின்றனர். பலர் கடவுளுடைய கருணையைப் பெறாமல் கவல்கின்றனர். ஏன்?

கடவுள் சிலருக்குக் கருணை செய்தும், பலருக்குக் கருணை செய்யாமலும் இருப்பாராயின் அவர் பாரபட்சம் உடையவர் ஆகின்றனர் அன்றோ? கடவுளுக்கு எல்லோரும் குழந்தைகள் தானே. அன்புள்ள தாய் எல்லாக் குழந்தைகளையும் ஒன்று போல் அன்பு பாராட்டி ஆதரிப்பாள். சில குழந்தைகளுக்குப் பாலுஞ் சோறும் ஊட்டி, சில குழந்தைகளைப் பட்டினி போடுவாளா?

சர்வஜீவதயாபரரான ஆண்டவர் பலருக்குக் கருணைபுரியாமல் இருப்பாராயின் அதற்குத் தகுந்த காரணம் யாது? அவரோ கருணைக்கடல். பலர் வந்து தண்ணீரை முகந்து கொண்டு போவதனால் கடல் வற்றிவிடாதே.

அடியவரும், தவசீலரும், சிவஞானிகளும் ஈசனுடைய கருணையை நாடி நாடி, ஓடி ஓடிப் பெறுகின்றனர்.

**"எந்தநாள் கருணைக்குரித்தாகு நாள் எனவும்**
**என்னிதயம் எனைவாட்டுதே"**

என்று இனிமையாகக் கூறுகின்றனர் தவராஜசீலராகிய தாயுமானார்.

கடவுளுக்குக் கருணையே திருமுகங்கள்; அவருடைய திருமுகங்களில் குற்றாலம் அருவியினும் மிகுதியாகக் கருணையருவி பொழிகின்றது.

**"முகம் பொழி கருணை போற்றி"**
**"கருணைகூர் முகங்களாறும்"**
**"கருணை பொழி கமலமுகமாறும்"**
**"உனது முக கருணைமலர் ஓராறும்"**

காகங்கள் கோடி கூடி நின்றாலும் ஒரு கல்லிற்கு முன் நிற்காது. அதுபோல், கோடிவினை கூடிநிற்கினும், கடவுளுடைய கருணை வெள்ளத்தில் ஒரு துளி படுமாயின் கோடிவினையும் பறந்து போம்.

**"காகமானதுகோடி கூடிநின்றாலும் ஒரு**
**கல்லின்முன் எதிர் நிற்குமோ**
**கர்மமானதுகோடி முன்னே செய்தாலு நின்**
**கருணைப்ரவாக அருளைத்**
**தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ?"**

இறைவருடைய கருணை கடலினும் பெரிது. சமானமில்லாதது. அது "தனிப் பெருங் கருணை" "கேழில்பரங்கருணை"

இத்தகைய இறைவனுடைய கருணையை எல்லோரும் எய்த வேண்டாவோ?

கடவுள் கருணை செய்வதில் தயங்குவதில்லை; ஒருவருக்கு ஒரு வண்ணமும் மற்றொருவருக்கு மறு வண்ணமும் அவர்பால் இல்லை அவர் பாரபட்சம் அற்றவர். எல்லா உயிர்களும் அவருக்கு ஒன்று தான்.

தண்ணீரில் பஞ்சை வைத்தவுடன் பஞ்சு தண்ணீரை இழுத்துக்கொள்ளுகின்றது. கல்லைத் தண்ணீரில் வைத்தால் கல் தண்ணீரை இழுப்பதில்லை. ஏன்? அது தண்ணீரின் குற்றமா? கல்லின் குற்றமா? கடினமாக இருப்பதனால் கல் தண்ணீரைத் தனக்குள் பெறவில்லை. மென்மையான பஞ்சு சாம்பல் இவைகள் தண்ணீரைப் பெறுகின்றன.

அதுபோல் கடினசித்தம் உடையவர்கள் கடவுள் கருணையைப் பெறுகின்றார்களில்லை. இரக்கமுள்ள சாதுககள் கடவுளுடைய கருணையைப் பெறுகின்றனர். கரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணையினால் தான் கருணையைப் பெறவேண்டும். வைரத்தினால் வைரத்தை அறுப்பது போல் என்று அறிக.

நம்மினும் தாழ்ந்த உயிர்கள் படுகின்ற துன்பத்தைக் கண்டு, நாம் உள்ளம் இரங்கிக் கருணை புரிவோமானால், நம்மினும் மேலான இறைவர் நம்மீது கருணை புரிகின்றார். நாம் யார்மாட்டுங் கருணை காட்டாது கல்லைப் போல இருப்போமாயின் கடவுள் கருணை நம்மீது எப்படி எய்தும்? கடவுள் கருணை மீது குற்றமில்லை. அதனைப் பெறுவதற்கு நாம் ஆயத்தமாக இல்லை. அதற்குரிய பண்பு பெறவில்லை.

அதனால் நாம் கருணையுடையவர்களாகத் திகழ வேண்டும். மன்னுயிர்களை இன்னுயிரைப் போல் எண்ணி இரங்க வேண்டும்.

**எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணி யிரங்கவுநின்**
**தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே.**

**எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணுந் தபோதனர்கள்**
**செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப**
**தெந்நாளோ**

—தாயுமானார்.

கருணை என்பது அணுத்துணையுமில்லாதவர், வெறும் பூஜையினாலும், ஜபதபத்தினாலும் இறைவனுடைய கருணையைப் பெறமாட்டார்.

''கருணையினால் கடவுளுடைய கருணையைப் பெறலாம்'' என்பதற்கு எடுத்துக்காட்டாக அடியில் வரும் சரிதை விளங்குமாறு காண்க.

**நாகபுரி** என்பது ஒரு சிறிய ஊர். அந்த ஊரில் அநேகமாக ஏழைகள் தான் வாழ்ந்தனர். இரண்டொருவரே தனவந்தர். எல்லோரும் நன்கு உழைத்து வயிறு வளர்த்து வந்தனர். **கமலம்** என்பவளுக்கு ஒரு பெண் குழந்தை. குழந்தை பிறந்த ஓராண்டில் அவள் கணவன் மாண்டுவிட்டனன். கூலி வேலை செய்து தன் குழந்தை கண்ணம்மாளைக் காப்பாற்றி வந்தனள். கணவனையிழந்து வறுமையினால் வாடி வருந்துங் கமலத்தை உறவினர் ஒருவரும் நெருங்குவதில்லை. ''உண்டானபோது தானே கோடானுகோடி பேர்'' கமலம் புல்லறுத்தும், நெல் குத்தியும், பாத்திரம் விளக்கியும் அதனால் வரும் காசுகளைக் கேழ்வரகு, சோளம் கம்பு வாங்கி கஞ்சி செய்து. குழந்தையும் தானும் பசியாறுவாள். அரிசியன்னம் முக்கியமான நாளில் தான் சமைக்க முடிந்தது. வெய்யிலில் வேலை செய்வதனால் அவளுடைய பொன் மேனி கரிந்து விட்டது. தலைமயிர் உதிர்ந்து விட்டது. சில சமயங்களில் வேலை கிடைக்காது. குழந்தைக்கு மட்டும் உணவு கொடுத்து விட்டுத் தான் பட்டினி கிடப்பாள். அவளுடைய பரிதாபத்தைக் கண்டு மனம் இரங்குவார் ஒருவருமில்லை.

கமலத்தின் மனம் பால் போன்றது. கனிந்த உள்ளம் படைத்தவள். தன்னை விட எளியவர்களைக் கண்டால் கண்ணீர் விடுவாள். இனிய உரை கூறி ஏதாவது தந்து உபசரிப்பாள். கண்ணம்மாளுக்கு வயது ஏழு ஆடுவதும் பாடுவதுமாக இருந்தாள். வீதியில் விளையாடுகின்றபொழுது மற்றைக் குழந்தைகள் தங்க வளையல், தங்கக் கொடி, தங்கக் காப்பு, பட்டுச் சட்டை முதலியன அணிந்து அழகாக வருவதைப் பார்ப்பாள். தாயினிடம் ஓடி ''அம்மா! அதோபார். அது மாதிரி எனக்கு நகை செஞ்சிப்போடு'' என்று சிணுங்கி அழுவாள். கஞ்சிக்கே வழியில்லாத அவள் நகைக்கு எங்கே போவாள்? குழந்தையை மார்போடு அணைத்து ''அம்மா! அழாதே நீ பெரியவளாக ஆனவுடன் உனக்கு நிறையச் செய்து போடுவேன்; இப்போது போட்டுக் கொள்ளக் கூடாது'' என்பாள். கண்ணம்மாள் ''போம்மா! இப்பவே போடு. அவங்கல்லாம் என்னைப் போல் தானே இருக்கின்றார்கள். அம்மா! எனக்கு ரொம்ப ஆசையாயிருக்கு பட்டுச்சொக்கா ........'' என்று அழ ஆரம்பித்தாள். கமலம் மகளை வெகுபாடுபட்டு சமாதானப் படுத்தினாள்.

கொடிய பஞ்சம் வந்துவிட்டது. எங்கும் மழையில்லை. கிணறு குளங்கள் எல்லாம் வற்றிவிட்டன. குடிதண்ணீரே கிடைப்பது அரிதாகிவிட்டது. ஜனங்கள் அளவற்ற வேதனையடைந்தனர். பட்டினியால் பலர் மடிந்தனர். உணவை நாடி அங்கும் இங்குமாக அலைந்து ஏழைகள் கால் ஒடிந்தனர். ''என் செய்வோம்'' என்று ஏங்கி மனம் இடிந்தனர். 'பசி' பசி' என்ற சொல்லே எங்கும் முழங்கியது. வாயில்லாத உயிர்களாகிய ஆடுமாடுகள் நாய் முதலியவைகளும் தண்ணீரும் உணவுமின்றித் தவித்தன. பறவைகள் பட்டினியால் வாடிவருந்தின.

பட்டினித் துன்பத்தாலும், வெய்யிலின் கொடுமையாலும் கமலத்தின் உடல் நலம் குன்றியது. பாயும் படுக்கையுமாக ஆனாள். நோயினாள் நொந்தனள். வேலை செய்தாலே உணவு கிடைப்பது அரிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையின்றி படுக்கையில் உள்ள அவளுக்கு உணவு எப்படிக் கிடைக்கும்? பாவம்! பட்டினியால் பதைபதைத்தாள். கண்ணம்மாளும் பட்டினி. பன்னிரண்டு வயதுடைய அவள் உடம்பு மெலிந்து விட்டது.

கண்ணம்மாள் தாயார் படுக்கையில் கிடந்து பரதவிப்பதைக் கண்டு மனம் வருந்தினாள். "அம்மா! உங்களுக்கு உடம்பு எப்படியிருக்கின்றது? தாங்கள் வர வர இளைத்துப் போய்விடுகின்றீர். பேசுவதற்குக் கூட உங்களுக்கு வலிமையில்லை. அம்மா! நான் என்ன செய்யவேண்டும்? கடவுள் நம்மைப் பரிசோதிக்கின்றார்." என்று விம்மி விம்மி அழுதாள்.

கமலம், "குழந்தாய்! அழாதே முற்பிறப்பில் புண்ணியம் புரியாதவர் இப்பிறப்பில் துன்புறுவர். நமது வினையை நாம் தானே அனுபவித்தல் வேண்டும். கடவுள் பாரபட்சம் இல்லாதவர் நான் வயது சென்றவள்; பழுத்தவோலை. நீ இளஞ் சிறுமி; குருத்தோலை. உன்னைப் பற்றித்தான் நான் கவலைப்படுகின்றேன். நீ என்னைப்பற்றி வருந்தாதே. நீ என் குலக்கொழுந்து" என்று மகளின் முதுகைத் தடவிக் கொடுத்து முகத்தைத் தொட்டு முத்தங் கொடுத்தாள். அவள் கண்களில் கண்ணீர் முத்துக்கள் உதிர்ந்தன.

கண்ணம்மாள் தன் தாயின் பசியைத் தீர்த்து அவள் உடம்பைப் பாதுகாக்க வேண்டும் என்று எண்ணி, உணவு எங்கே கிடைக்கும் என்று ஏங்கிய மனத்துடன் வெளியே சென்றாள். இரண்டு மூன்று வீட்டில் சென்று, "அம்மா பசி, காதடைக்கின்றது. ஒரு பிடி சோறு கொடுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டாள். "சீ நாயே! போ. மூஞ்சியைப் பாரு. ஓடு ஓடு நிற்காதே" என்று விரட்டியடித்தார்கள். எங்கும் அவளுக்கு ஒரு பிடி சோறுகூடக் கிடைக்கவில்லை. அவள் கால்கள் தடுமாறின. கண்கள் பஞ்சடைந்தன. தாய்க்கு உணவு எப்படியாயினும் தரவேண்டும் என்ற உறுதியினால் சிறிது தைரியத்துடன் நடந்தாள்.

ஒரு வீட்டிலே கோதுமை ரொட்டி செய்து தட்டு நிரம்ப அடுக்கி குழந்தைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்துக்கொண்டிருந்தனர். அதைக் கண்ட கண்ணம்மாள் மெல்ல வாசற்படியருகில் நின்று "அம்மா! மெத்தப் பசியாக இருக்கின்றது. உயிர் துடிக்கின்றது. ஒரு ரொட்டி கொடுங்கள்" என்று கம்மிய குரலில் கேட்டாள். அந்த வீட்டு அம்மை மனம் இரக்கமுற்று உடனே அன்புடன் ஒரு ரொட்டியைத் தந்தாள். கண்ணம்மாளின் முகம் மலர்ச்சியுற்றது. அகங் குளிர்ந்தது. "அம்மா! வீட்டில் என் தாயார் உடல் நலம் இன்றிப் பசியால் வாடி வருந்துகின்றாள். அவருக்கு ஒரு ரொட்டி கொடுங்கள்" என்று கேட்டாள். அந்த அம்மை உடனே பதில் சொல்லாமல் மற்றும் ஒரு ரொட்டியைத் தந்தாள்.

கண்ணம்மாள், அளவற்ற ஆனந்தமடைந்து, தாய்க்கு ஒரு ரொட்டியைக் கொடுத்துவிட்டு, தான் ஒரு ரொட்டியைத் தின்னவேண்டும் என்று எண்ணி விரைந்து நடந்து வந்தனள். வழியில் ஒரு நாய் மிகுந்த பசி தாகமுற்று களைத்து, உலர்த்த நாவை நீட்டிக்கொண்டு குழித்த கண்களுடன் இருந்தது. அந்த நாய் கண்ணம்மாளைக் கண்டு தன் வாலையாட்டி "பசிக்கின்றது" ஏதாவது கொடு" என்ற குறிப்பில் தலையசைத்து அவளைப்பார்த்தது. கண்ணம்மாளின் மனம் உருகியது. "ஆகா! இதற்கு எவ்வளவு பசியோ? வாயில்லாத பிராணி. நமக்காவது கடவுள் வாயைக் கொடுத்தார். கேட்டு வாங்கிச் சாப்பிடலாம். பாவம். இதற்கு வாயில்லை. மிக மிகப் பசியால் வாடியுள்ளது. நமது பங்கு ரொட்டியைக் கொடுத்து இதன் பசியை ஆற்றவேண்டும்" என்று எண்ணினாள். ஒரு ரொட்டியை யெடுத்து துண்டு துண்டாகச் செய்து நாய்க்குத் தந்தாள். நாய் மிக்க வேக வேகமாகச் சாப்பிட்டது சிறிது தண்ணீருங் கொணர்ந்து குடிப்பித்தாள். நாயின் களை தீர்ந்தது நன்றியுடன் வாலை மிகவும் ஆட்டியது. அதன் மகிழ்ச்சியைக் கண்டு கண்ணம்மாள் மகிழ்ந்து தாயை நாடி நடந்தாள். நாயும் அவள் பின்னே சென்றது. கண்ணம்மாள் வீட்டிற்குள் நுழைந்து பசியுடன் இருந்த தாயை எழுப்பி, 'அம்மா! இந்தா இந்த ரோட்டியைத் தின்று தண்ணீர் குடியுங்கள்" என்று நீட்டினாள். கமலம், "மகளே! ரொட்டி ஏது? எந்த புண்ணிய மூர்த்தி தந்தனர்? நீ பாதி சாப்பிடு. பாதி கொடு எனக்கு" என்றாள். "அம்மா! ஒரு புண்ணியவதி தந்தாள். உனக்கு ஒன்று, எனக்கு ஒன்று; இரண்டு தந்தாள். ஒன்று நான் தின்று விட்டேன். இது உங்களுக்குத்தானம்மா. நீங்கள் சாப்பிடுங்கள். மிகவும் களைப்பாகவும் பசியாகவும் இருக்கின்றீர்" என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருள். அந்த சமயம், "அம்மா? மெத்தப் பசி. சாப்பிட்டு நாலைந்து நாட்கள் கடந்தன. உயிர் போகின்றுப்போலிருக்கின்றது. அம்மா! புண்ணியவதி! சிறிது உணவு கொடுத்துக் காப்பாற்றுங்கள்" என்று ஒரு பிச்சைக்காரன் கூவினுன். ரொட்டியைப்பிட்டு வாயில் வைக்குந் தருணத்தில் கமலம் அந்தக் குரலைக் கேட்டாள். இவள் மனம் உருகியது. உடனே அந்த ரொட்டியை அந்தப் பிச்சைக்காரன் கையில் கொடுத்து, "அப்பா! சாப்பிட்டு இளைப்பாறு" என்ருள். அதைக் கண்டு கண்ணம்மாள் திகைத்தாள்.

அந்த ரொட்டியைப் பிச்சைக்காரன் தின்று, "அம்மா! உங்களுக்குக் கடவுள் எல்லா நலன்களையும் அருள் புரிவார். பசித்துன்பம் உங்களை ஒருபோதும் அணுகாது. நீடூழிகாலம் சுகமாக வாழுங்கள்" என்று கூறிவிட்டுச் சென்ருன். கமலம் மிகுந்த திருப்தியுடன் கண்களை மூடினுள். கண்ணம்மாள் தாய் பசித்திருந்தும் தரும சிந்தையுடன் ஏழைக்கு உதவிய கருணையை எண்ணி ஒருவாறு கண்ணயர்ந்து விட்டாள்.

அருட்ஜோதி வடிவுடன் ஒரு தெய்வம் கமலத்தின் கனவில் தோன்றியது. அவ் வொளிக்கடவுளைக் கண்டு கமலம் திகைத்துக் கும்பிட்டு நின்ருள். "அம்மா! உன் கருணைக்கு நாம் மகிழ்கின்ருேம். உன் கருணையைவிட உனது திருப்புதல்வி கண்ணம்மாளது கருணை உயர்ந்துளது. அவளுங்குக் கிடைத்த இரு ரொட்டியில், ஒன்றை நாய் வடிவுடன் வந்த எனக்குத் தந்தனள். பிறகு பிச்சைக்காரன் வடிவில் வந்த எனக்கு நீ உன் பசியைப் பொருள் படுத்தாமல் ரொட்டியைத் தந்தனை. தாயும் மகளும் கருணையின் சொரூபங்களாக இருக்கின்றீர்கள். நானே நாயாகவும் பிச்சைக்காரனுகவும் வந்து உங்கள் இருவருடைய அன்பையும் அளந்து அறிந்தேன். நீங்கள் இனி எந்நாளும் அழியாத செல்வத்துடன் வாழக் கடவீர்கள்" என்று அருள் புரிந்து மறைந்தது. கமலம் திடுக்கிட்டு எழுந்தாள். கனவிலே கண்ட அந்த அருட்ஜோதி வடிவத்தை அங்கும் இங்குமாகத் தேடினுள். அவள் குடிசை பொன் மாளிகையாக மாறியது. ஒரு புறம் தானியக் குவியல்கள்; ஒரு புறம் தனக்குவியல்கள்; ஒரு புறம் நவரத்தினக் குவியல்கள்; ஒரு புறம் ஆடை ஆபரணங்கள். அஷ்ட ஐஸ்வரியங்களும் நிறைந்து இருந்தன. வறுமையின் சிறுமை பறந்து நீங்கியது. "கடவுளே! உன் கருணையே கருணை. இந்த ஏழைகளுக்கு இத்துணைப் பெரிய கருணை புரிந்தீரே. எம் பெருமானே! உன்னை ஒருபோதும் மறவேன்" என்று வாயார வாழ்த்திஞள். கண்ணம்மாள் எழுந்து நவ நிதிகளையும் பொன் மாளிகையையும் கண்டாள். தன் தாயின் திருவடிமேல் வீழ்ந்து, "அம்மா! இது என்ன அதிசயம்? இவைகள் எவ்வாறு வந்தன? மாயையா? கனவா?" என்று வினுவினுள்.

கமலம், "என் கண்ணே! உன் பங்கு ரொட்டியை நாய்க்குத் தந்துவிட்டு,"நான் சாப்பிட்டுவிட்டேன்" என்று கூறி என்னைச் சாப்பிட வேண்டினுயல்லவா? நாய் வடிவத்திலே வந்தவர் கடவுள். அவரே மீண்டும் பிச்சைக்காரனுக வந்தார். என் கனவிலே தோன்றி அருள்புரிந்தார். பிறருக்குக் கருணை புரிந்த உனக்கும் எனக்கும் கடவுள் கருணை புரிந்தார்" என்ருள். கண்ணம்மாள் கடவுளின் கருணையை எண்ணி எண்ணி இதயங் குளிர்ந்தனள். அன்று தொட்டு அவர்கள் திருமாளிகைக்கு முன் கூடை கூடையாக ரொட்டியும், அன்னமும் வறியவர்க்கும் வழங்கப்பட்டன. பஞ்சம் கொஞ்சமும் இன்றிப் பறந்தது. ஏழைகள் திரள் திரளாக வந்து பசியாறினுர்கள். நிறைந்த ஏரியில் உள்ள தண்ணிர் பல்லாயிரம் வயல்களில் பாய்ந்து பயிரைத் தழைக்கச் செய்வதுபோல், கமலத்திற்குக் கடவுள் தந்த செல்வம் பல்லாயிரம் ஏழைகள் வயிற்றை நிரப்பி உயிரைத் தழைக்கச் செய்தது.

"கருணை மணங் கமழ்க"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes*

*from*

# Senator T. NEETHIRAJAH J.P.M.M.C.

**89, NEW CHETTY STREET,**

**COLOMBO 13.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes*

*from*

# K. S. SIVASANKARAN PILLAI

IMPORTERS AND WHOLESALE MERCHANTS

**193 & 197, Keyzer Street**

**COLOMBO - 11**

*Telegrams*

"SIVABAKTHI"

*Telephone*

6 1 9 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE MAHARAJA ORGANISATION LIMITED.

MAHARAJAH BUILDING

**COLOMBO 11**

★

*Manufacturers and Stockists of*

*S-Lon P. V. C. Pipes & Fittings*

QUINK
PONDS PRODUCTS
FORHANS TOOTH PASTE
WIRE NAILS
EVEREADY PRODUCTS

*Exporters of*

## Tea Produce

ETC., ETC., ETC.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*From*

# Ramsons Hardware Enterprises Ltd.

443, OLD MOOR STREET,

COLOMBO 12.

*This Page is Donated By*

# MR. K. NAGALINGAM J. P.

*in Memory of his Brother*

## LATE MR. KALIMUTHU

79, KOTAHENA STREET,

COLOMBO-13.

T. P. 79769 & 3853

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கணபதி

ஓர் பக்தன்

ஓங்காரரூபியாய் நம் முயற்சிகளில் உண்டாகும் விக்கினங்களை நீக்கி அருள்புரியும் விநாயகரைக் கணபதி என்றும் அழைக்கின்றோம். இதன் காரணத்தைச் சிறிது நோக்குவோம். முன்னொருநாள் சிவபெருமான் தமது கணங்களுக்கு ஒரு தலைவரைத் தேர்வதற்காக ஒரு போட்டி நியமித்தார். தேவர்கள் எல்லாரையும் அழைத்துத் தமது கருத்தை அவர்களுக்குக் கூறினார். இப் பிரபஞ்சம் முழுவதையும் வலம் வந்து தம்மை முதல் அடைபவரே கணங்களுக்குத் தலைவராவர் என விளக்கம் கொடுத்தார். எல்லோரும் தமது வாகனங்களில் ஏறி போட்டியில் புறப்பட்டார்கள். விநாயகரது பெருச்சாளியோ மெல்லென ஊர்ந்து சென்றது. அந்நேரம் நாரதர் விநாயகரைக் குறுக்கிட்டு "எங்கே போகின்றீர்கள்?" என வினவினார். ஒற்றைப் பிராமணன் முன்னே வந்ததும், எங்கே போகின்றீர்கள் எனக் கேட்டதும் இருவிதமான அபசகுனம் என்ற கவலையை விநாயகர் நாரதருக்கு முதலில் தெரிவித்தார். மேலும் தேவர்களிடையே இருந்த போட்டியையும் எடுத்துக் கூறினார். நாரதர் விநாயகருக்கு ஒரு தந்திரம் சொல்லிக் கொடுத்தார். நிலத்தில் ஓங்காரத்தை எழுதிவிட்டு அதை வலம் வந்தால் பிரபஞ்சத்தை வலம் வந்ததாகும் எனக் கூறினார். அப்படிச் செய்து விநாயகரும் கணபதிப் பட்டம் பெற்றார்.

இச் சிறு கதையிலிருந்து நாம் பிரணவத்தின் மகிமையை அறியலாம். அது பிரபஞ்சம் முழுவதையும் தன்னுள் அடக்கி இருப்பதாக இக் கதை காட்டுகின்றது. பகவான் சத்தியசாய் பாபா பிரணவத்தைப் பற்றிப் பின்வரும் விளக்கம் கொடுக்கின்றார். பரப்பிரமத்தை அவரின் லீலையால் தானாகத் தோன்றிய மாயை சூழ்ந்து தடத்த நிலை ஏற்பட்ட பொழுது எழுந்த ஒலியே ஓங்காரம். ஐந்து தொழில்களுள் முதலாவதாகிய ஆக்கலுக்கும் முன்னே தடத்த நிலை ஏற்படுவதால் இப் பிரபஞ்சம் படைக்கப்படுமுன் ஓங்காரம் எழுந்ததென்பது பெறப்படும். ஓங்காரமே படைக்கப்பட்ட யாவிற்கும் ஆதாரமான சக்தியின் அசைவைக் குறிக்கும். இக் கருத்தையே மேலே கூறிய கதையும் வலியுறுத்துகின்றது. பிரணவம் சிருஷ்டி ஆதியில் தோன்றியமையால், நம் பூசைக் கிரியைகள் யாவிலும் ஓங்காரரூபி ஆகிய விநாயகரையே முதல் வழிபடுவது மிகவும் பொருத்தமாகும். இத்துணைப் பெருமைவாய்ந்த விநாயகர் கொல்லங்கலட்டியிலிருந்து மக்கள் யாவருக்கும் அருள் பாலிக்க அவரை வேண்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்

# பிள்ளையார் சுழி

ம. சி. சிதம்பரப்பிள்ளை
கல்வி அமைச்சு, கொழும்பு - 2.

**வணக்கம்**

விக்கினங்களை விலக்கிவைக்கும் விநாயகப்பெருமான், அடியேன் எடுத்த இக் கருமம், ஒருகுறைவும் இல்லாமல், நிறைவாக முற்றுப்பெற முன்னின்று அருள்வாராக!

பிரணவஸ்வரூபியாகிய கணநாதனை முன்னிறுத்தி எக்கருமத்தையும் தொடங்க வேண்டும் என்பது சைவ மக்களின் காலம் கடந்து நிற்கும் விதி. இதற்கு மாறாகச் செயலாற்றத் தொடங்கி, கருமங்களை நிறைவேற்ற முடியாமல் திணறியவர்கள், திண்டாடியவர்கள், தடுமாறியவர்கள், அனந்தம்! அனந்தம்!

## வேத வியாசர்

வேதங்களுக்கு மூல ஆசிரியராக விளங்கிய வியாசபகவான், ஈசுவர கிருபையால். வேத சாத்திரங்களை, பிறரிடம் உபதேசம்பெற்று அறிந்துகொள்ளாது, தானே அவற்றின் பொருள்நுட்பங்களை உணர்ந்துகொண்டு பலவாறாகப் பிரிந்திருந்த வேதங்களை ஒன்றுசேர்த்து, அவற்றை நான்கு பகுதிகளாகப் பிரித்து இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்று மற்றவர்களுக்கு உபதேசித்தும், சனற்குமாரரை அடைந்து அவர்மூலம் பதினெண் புராணங்களையும் உபதேசம் பெற்றும், அதனை எளிதில் யாவரும் புரிந்துகொள்ளும் வகையில் சுலோகரூபமாக அமைக்கும்பணியில் இறங்கியும், அம்முயற்சியில் தடுமாறி, கோவையாக ஒரு அடிகூட அவரால் அமைக்க முடியாமல் இருக்கவும், அதுகாரணமாக அச்சம் மேலிடவும், பிரமதேவனைத் தேடி அவருக்கு யாவையும் கூற, ''சகல வேதங்களையும் கற்றுணர்ந்த உனக்கு, இம் முக்கிய விடயம் தெரியாது போய்விட்டதே! வியாச! பிரணவஸ்ரூபியாக விளங்கும் கணநாதனை மறந்துவிட்டாயே! இடர்களைப்போக்கிக் காரியசித்தியை ஆக்கி அளிக்கும் அக்கருணாமூர்த்தியை நினைக்காது தொடங்கப்பெறும் எந்தக் காரியம் தான் பூர்த்தியாகியுள்ளது? **மகேசுவரரும் வேதத்தைச் சொல்லும் முன்பாகப் பிரணவத்தை முதலில் வைத்த பின்னர் வேதங்களை ஓதினர் என்பதனை மறந்தனையோ?** மும்மூர்த்திகளாகிய நாங்களும் மற்றுமுள்ள இந்திராதி தேவர்களும் விநாயகப் பெருமானை நினைக்காது, பூசிக்காது எந்தக்காரியமும் தொடங்குவதில்லையே!

''விக்கினராசராகிய அவரே எல்லா விக்கினங்களையும் தீர்த்து வைக்கக் கூடியவர்! அவரைத் தியானித்து அவர் அருள் பெற்று உன்காரியத்தைப் பூர்த்தி செய்'' என்று பிரமதேவன் அறிவு புகட்ட, வேத வியாசரும் மனம்வருந்தி, தனதுபிழையை உணர்ந்து, கண்ணீர் மல்க, கணபதியைக் கைகூப்பிக் கும்பிட்டுத்தோத்திரம்செய்து, எடுத்த மாக்கதையை, யாவரும் போற்றும் வண்ணம் பாடி முடித்தார் - என விநாயக புராணம் கூறுநிற்கும்.

## சிவனைப் பூசித்த விநாயகர்:

இமையவர்கட்கும் முனிவர்கட்கும் இடர் பல இழைத்த கயமுகாசுரனை விநாயகப் பெருமான் மாய்த்தருளிய போது, அவனது அங்கத்திலிருந்து அருவியாகப் பாய்ந்த உதிரம் காடுமுழுவதும் பரவியதனால் செங்காடு என்ற பேர் எண்டாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே திருச் செங்காட்டங்குடி என்பதும்.

கணபதி அங்கு ஆத்தி மரத்தின் கீழ், ஒரு சிவலிங்கத்தை எழுந்தருளச் செய்து பூசித்தனர். **அத்திருக் கோயில் கணபதீச்சரம்** எனப்படும். ஆத்திமரம் பழமையானது. இன்றும் இருக்கின்றது.

[திருமுருக கிருபானந்தவாரியார் -சிவனருட் செல்வர்]

**விநாயக விக்கிரகங்கள்.**

விநாயகருக்கு முப்பத்திரண்டு வகையான உருவங்கள் உண்டென்றும், ஐம்பத்தொரு உருவங்கள் உண்டென்றும், **"முத்கல புராணமும்" "சாரதா திலகம்"** என்ற நூலும் முறையே எடுத்துக் கூறுகின்றது.

பால கணபதி, தருண கணபதி,
வாகட கணபதி, வீர கணபதி,
சத்தி கணபதி, துவச கணபதி,
பிங்கள கணபதி, உச்சிட்ட கணபதி,
விக்னராச கணபதி, இலக்குமி கணபதி,
மா விக்கின கணபதி, புவனேச கணபதி,
நிருத்த கணபதி, ஊர்த்த கணபதி,

எனப் பதினான்கு கணபதி உருவங்கள் உண்டென்று கூறுவாருமுளர்.

வீரசத்தி நர்த்தன விநாயகர் என்ற விநாயகர் வேதாரணியத்தில் வீற்றிருக்கின்றார். சுசீந்திரம் எனும் பதியில், பெண் உருவத்தில் விக்கினேசுவரி விநாயகராக வீற்றிருக்கின்றார். மதுரைக் கோயிலில் ஒரு பிள்ளையார் உருவம் பெண் உருவில் புலிப்பாதங்களுடன் காணப்படுகிறது. இதற்கு வியாகரபாத சக்தி விநாயகர் என்று பெயர். இதுபோலவே பவானி கோவிலில் ஒரு விநாயகர் உருவம் இருக்கிறது. ஆனால் ஆண் உருவில் புலிப் பாதங்களுடன் வீணை வாசிக்கும் தோரணையில் அமைந்ருக்கிறது சிற்பம். இதற்கு வியாக்கிரபாத வீணாதர விநாயகர் என்று பெயர்.

உச்சிட்டகணபதி என்றும், வேதவிநாயகர் என்றும், உற்சவ விநாயகர் என்றும் பஞ்சமுக விநாயகர் என்றும், மந்திர மகா கணபதி என்றும், மூசிக வாகனர் என்றும் விநாயகரைக் கூறுவார்கள்.

**விநாயக வணக்கம்**

திருநாவுக்கரசு சுவாமிகள், திருஞான சம்பந்த சுவாமிகள், சிறுத்தொண்ட நாயனார், திருநீலநக்க நாயனார், குங்குலியக்கலய நாயனார், முருக நாயனார், அப்பூதி அடிகள் இவர்கள் யாவரும் ஒருகாலத்தவர் என்பதனை தெய்வச் சேக்கிழார் திருவாய் மலர்ந்த பெரிய புராண வாயிலாக அறியலாம். இவர்களுக்கு முற்பட்டவர் மாணிக்கவாசகப் பெருமான். இவருக்கும் முற்பட்டவர் திருமூல நாயனார்.

திருவாசகத்திலும், தமிழ் மந்திரமாம் திருமந்திரத்திலும் விநாயகப்பெருமானைப் பற்றிய ஒரு குறிப்பும் இல்லையெனக் கூறப்படுகின்றது. திருமூலர் காலம் இற்றைக்கு 9990 வருடங்களாகும் என்றும் சங்க நூல்களின் துணைகொண்டும் மாணிக்கவாசகர் வாக்கைக்கொண்டும், திருமந்திரம் துணைக்கொண்டும் விநாயக வணக்கம் தமிழ்நாட்டில் இல்லையென்றுபேராசிரியர் : வித்துவான் பாலூர்! கண்ணப்ப முதலியார் M.A., B.O.L. தமது: தமிழ் மந்திரம்" என்ற நூலில் விளக்குகின்றார்.

'ஐந்து கரத்தனை யானைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே'

விநாயக வணக்கமாக திருமூலர் திருவாய்மலர்ந்த மந்திரநூலுக்கு-ஐந்துகரத்தனை-எனும் பாட்டேகாணப்படுகின்றது. "இப்பாடல் **திருமூலர் வாக்கன்று** என்பது ஆராய்ச்சியாளர் துணிபு என்பது முதலியாரின் கூற்று. விநாயகர் வழிபாடு ஏறக்குறைய ஆறுவது நூற்றாண்டிலிருந்து தான் தமிழ் நாட்டில் பரவத்தொடங்கியிருக்கலாம் என்பது ஒருவர் கருத்து. சீன, யப்பான், யாவா, சயாம், பர்மா, இலங்கை எங்கும் விநாயகர் வழிபாடு இருந்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தை அறிந்த வியாசபகாவான் காலம் சங்கங்களின் காலத்துக்கும் அப்பாற்பட்ட தென்பதனைக் கூறவேண்டுமா? விநாயக வணக்கம் தமிழர்களாகிய எங்கள் சொத்து. விநாயர் இல்லாத கோயில்கள் உண்டா? விநாயக வணக்கம் இல்லாத நூல்கள் உண்டா? தெரிந்தோ! அறிந்தோ! பேனுவை எடுத்தால், பிள்ளையார் சுழி போடாது கடிதமோ, கடைக் கணக்கோ, எது காரியமோ நாம் எழுதுவது கிடையாதே!

வள்ளிநாயகியை வலிந்து கைப்பற்றுவதற்கு வேழ முகத்தோனைத் தம்பி துணை கேட்டாராயின், கணபதியின் தொன்மையை யாரறிவார்? காலம் கடந்து நிற்கும் கணபதிக்கு, காலனுக்கு வகை சொல்லத் தெரியாதோர், காலவரையறை இறுப்பது கவலையைத் தருவ தொன்ருகும்!

**எமது பிள்ளையார் — பிள்ளையாரப்பா, பெரியப்பா:**

மாவையம் பதியில், சகல வளங்களாலும் சூழப்பட்ட கொல்லங்கலட்டிப்பதியில் எழுந்தருளி, பக்தகோடிகளுக்கு அநுக்கிரகம்புரியும் வீரகத்திப் பிள்ளையார் மிகவும் கருணைவாய்ந்தவர். ஞானவள்ளல். அழுது புலம்பும் அடியார்களின் அல்லல்களை அறுக்கும் அருளாளர்.

பல ஆண்டுகளாக ஆழ்ந்த நித்திரையில் மூழ்கிக் கிடந்த அடியார்கள், அறுகம் புல்லை உகந்துண்ணும் வேழ முகத்தானுடைய அநுக்கிரகத்தினுல் ஒரு சில நற்கருமங்களை முடிக்க எண்ணும் இந்நேரத்தில், அடியேன் "பிள்ளையார் சுழி" என்ற இக்கட்டுரையை எழுதுவித்த கட்டளையை எவ்வாறு மறக்கலாம்!

எடுத்த கருமம் ஏற்றம் பெறுக!
ஆனைமுகன் -
ஆறுமுகன் -
அம்பிகை - பொன்னம்பலவன் -
ஞானகுரு - வாணி பதம் நாடு.

திருச்சிற்றம்பலம்

---

அகரமென வறிவாகி யுலக மெங்கும்
அமர்ந்தகர வுகரமாக ரங்க டம்மாற்
பகருமொரு மூன்ருகி வேறு மாகிப்
பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொரு ளுன்கினையு மிடர்தீர்த் தெய்தப்
போற்றுநருக் கருட்கருணை புரிந்தல் லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் பிறவி

த. சரவணபவன்
இளைப்பாறிய இலங்கை நிருவாக சேவையாளர்

"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரணவற் புதமலர் தலைக்கணி வோமே"

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்", என்ற வாக்கியத்தை ஆறுமுக நாவலரவர்கள் எழுதிய இரண்டாம் பால பாடத்தில் அநேகர் குழந்தைகளாக இருந்த காலங்களில் வாசித்திருக்கிறார்கள். இந்த உடம்பில் விஷேசமாகப் பற்று வைத்து, உண்டிருந்து வாழ்வதற்கே உடம்பைப் பெற்றிருக்கிற நோக்கமாக, வாழ்நாளை வீண் போக்காது, சரீரத்தின் நிலையும் ஆன்மாவின் உண்மையும் எத்தன்மையதென்று உணர்ந்து கொள்ள வேண்டும் வண்ணமாய் நாவலரவர்களது வாக்கியம் அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது.

கடவுள் அடி முடி இன்றி எங்கும் நிறைந்து நின்று, உயிர்க்கு உயிராயிருந்து விளங்குகின்றார். "ஆதிபகவன் முதற்றே உலகு" என்று பேசி உதித்தது இன்றைய உலகமும் போற்றிப் புகழும் தமிழ்ப் புலவரின் திருவாக்குகள். அந்த ஆதிபகவன் இப் பிரபஞ்சத்தையும், இதிலடங்கிய பற்பல பொருள்கள் அனைத்தையும் மக்களாகிய நாம் உய்யும் பொருட்டே அமைத்துள்ளார்.


இத்தகைய அளவிறந்த வல்லமையும் அளவில்லாத இரக்கமும் கொண்டிருக்கும் கடவுளுக்கு நாம் செய்யக் கூடியது ஏதேனும் உண்டோ? கடவுளுக்குத் தேவையானது ஒன்றுமில்லை. ஆகவே, நாம் அவருக்கு ஆற்றும் உதவியேதும் இல்லை. ஆயினும், எல்லாப் பிறவிகளுள் மிகவும் மேலான மனிதப் பிறவி நமக்குக் கிடைத்திருக்கிறதற்கு அவரை எக்காலத்தும் வணங்கி வழிபட்டும், அவர் விதித்தவற்றைச் செய்தும், விலக்கியவற்றைச் செய்யாதலுமே நமது முதற்கடமையாயிருக்கின்றது.

அழிவற்ற ஆன்மாக்களாகிய நாங்கள் அழியும் இந்த மனித உடம்புடன் பிறவி எடுத்திருப்பதற்குக் காரணமில்லாமல் இல்லை. ஆணவ மலம் இன்னும் பீடித்துத் தொலையாதிருக்கும் காரணம் தான். அழிவற்ற ஆன்மாக்கள் அழிவற்ற நிலையை அடைவதே நீதியாகும் ஆன்மாக்கள் இந்தச் சுத்த நிலையை அடைகிறதற்கு வேண்டிய வழிகளெல்லாம் இந்த மனிதப் பிறவியிலே இருக்கின்றன. ஆகவே, ஆன்மாவைப் பற்றி நிற்கும் ஆணவமலத்தைப் போக்குவதற்கும் அவ்வண்ணமாக நாம் சுத்த நிலையை அடைவதற்கும் உதவியாயிருக்கும் பொருட்டே கடவுளுடைய மிகுந்த கருணைப்பெருக்கினால் இந்த மனித சரீரம் நமக்குக் கொடுக்கப்பட்டது.

கடவுள் எங்கள் மேல் வைத்திருக்கும் இரக்கத்தினால் உபகரித்த சரீரத்தை உபகரித்தவரின் கருத்தறிந்து உபயோகிக்க வேண்டுமல்லவா? அவர் கருத்தை முயன்றறிந்து, அறிந்துகொண்டு அந்த வழிகளில் நடந்துகொள்ளுவோமானால், நற்கதி பெற்று அவருடைய பொன்னடியாகிய முத்தியின்பத்தைப் பெறமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



With compliments from

CIC

who provide the
most comprehensive
technical service
to Industry & Agriculture
in Ceylon

**CHEMICAL INDUSTRIES (COLOMBO) LTD.,**
P. O. Box 352, Colombo

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# K. G. INDUSTRIES

**COLOMBO 12.**

*Manufacturers of:*

- ★ PLATINUM Fountain-pens
- ★ Corrugated and Boxboard Cartons
- ★ Corrugated Greaseproof Paper

AND

*Offset Printers of:*

- ★ POSTERS
- ★ CALENDARS
- ★ ADVERTISMENT - STICKERS



*With the Compliments*

*of*

# N. VAITILINGAM & Co., LTD.

**450, Old Moor Street,**

**Colombo 12.**

IMPORTERS OF
IRON & STEEL PRODUCTS

*Manufacturers of*
BARBED WIRE & WOODSCREWS.



249673

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுலகில் இது விண்ணுலகம்!
தங்கிச் செல்ல வேண்டுமா ?
தரமான உணவு வேண்டுமா ?

குறைந்த செலவில் திருப்தியைத் தரும்
ஒரே ஒரு இடம்

# ஆனந்த பவான்

தமிழ் மக்களின் நலன் கருதி தலைநகரில் பணியாற்றும் ஒரே ஸ்தாபனம்

## ஆனந்த பவான் பிராமணாள் ஹோட்டல்

( கோட்டை ஸ்டேஷனுக்கு முன் )

71-73, நொறிஸ் வீதி, கொழும்பு - 11.

அரிசியும் நவதானியமும்
மற்றும்
உள்ளூர் விலை பொருள் சாமான்களும்
உயர்ந்த ரகத்தில் குறைந்த விலையில்
எப்பொழும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

# கா. செல்வத்துரை அன் கோ.

65-67, 5ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

தொலைபேசி : 29074

தந்தி : "கற்பகம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை



தெல்லிப்பழை மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி

கேணிக்கரை

# வீரகத்தி விநாயகர்

## திருவூஞ்சல்

### காப்பு

சொல்லுமறை யந்தணர் வேளாள ராதிக்
  தொல்குடியும் பல்வளமும் துதைந்தேயோங்குந்
தெல்லிநகர் மாவை கொல்லங்கலட்டி கேணித்
  திருக்கரைவா ழொருந்தன்முகச் செவ்வாவுன்றன்
செல்லவழி யற்புதபுத் தமுதவின்பச்
  செழுந் தமிழா லூஞ்சலிசை தெளிந்துபாடக்
கல்விதரு மோங்கார வடிவாமுன்றன்
  கற்பகஞ்சேர் பொற்பதங்கள் காப்பதாமே.

### நூல்

ஒளிமருவு நாதவிந்து தூணாநாட்டி
  உரைமருவு மிரு மொழியும் விட்டம் பூட்டி
தெளிமருவு சிவகலைநூல் வடங்கள் மாட்டி
  சிவமருவு மோங்கார பீடங் கூட்டி
மொழிமருவு மந்திர தோரணங்கள் நீட்டி
  முதமருவ வியற்றிய பொன்னூஞ்சல் மீதே
வெளிமருவு பொழிற் கொல்லங்கலட்டி மேவும்
  வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

2

விண்பயிலும் ஒண்சுடர்கள் குடைகள்தாங்க
  வெளிபயிலும் வளிவேந்தர் கவரி வாங்க
தண்பயிலும் புனலரசன் பனி நீர்தூவ
  தார்பயிலுங் கொடி நிரைக ளமரர் காவ
எண்பயிலும் மலரயனூரா சிபேச
  இனம் பயிலும் விரைமலர்கள் முனிவர் வீச
மின்பயிலும் பொழிற் கொல்லங்கலட்டி மேவும்
  வீரகத்தி விநாயகரே யாடீருஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாளு மிசை முனிமாடகயாழ் மீட்ட
எழிலாளும் தொழின் முழவு நெடுமால் கூட்ட
தாளாளும் தமிழ் முனிவன் தாளம் போட
சதியாளும் பூதகண நாதராட
கோளாளும் பழவடியார் வினைகளோட
களியாளும் மொழிமடவார் வடந்தொட்டாட்ட
வேளாளர் பயில் கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

4

திங்களணி செஞ்சடையும் செம்பொற்கொம்பும்
செம்மையணி மணிமார்பும் திருமுன்னூலும்
கொங்கலரும் கொண்றையணி குவவுத்தோளும்
குடவயிறும் விகடநடங் கொண்டதாளும்
ஐங்கரமும் நால்வாயும் மூன்று கண்ணும்
அம்மையிடப் பாகமுமா யாகு வேறி
வெங்கலிதீர்க் குங்கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

5

மந்திர நீர் பாலிள நீர்மணிநீராட்டி
மான்மதஞ்சந்தனம் பனிதம்மலியக்கூட்டி
சுந்தரப் பூம் பட்டுடுத்திக் கலன்கள் பூட்டித்
தூயமணி மாலை தொடைமாலை சூட்டிக்
கந்தநறும் புகையெடுத்து விளக்கங் காட்டிக்
கழல் பரவு மடியரிடர் கழிய வோட்டி
வெந்துயரம் விட்டு கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

6

பருப்பு நறும் சருக்கரையும் பாலுந்தேனும்
பாசவலுந்தினையிடியும் பழமும் பாகும்
கருப்பு முறி முறுக்கு வடை கண்டும் சுண்டும்
கடலை பொரி மோதகமு மடையுங் காயும்
திருப் பொலி புத்தமுது மிளந்தெங்கின் காயும்
சீரடியர் தந்து மந்திரத்தாற் போற்ற
விருப் பொடருள் புரி கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்

7

சுந்தரப்பொன் முடியாடச் சுடிகையாட
தூய சடை மதியாட நதியுமாட
வந்து முறச் செவியாட மகிழ்வுமாட
மாணிக்க வடமாட மதாணியாட
முந்து குடவயிறுட முன் நூலாட
முழுதுலகுங் களியாட நடனமாடும்
வெந்துயரம் வீட்டு கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

ஓதவிந்து நாதமுற வுதித்தா யென்றும்
ஓங்கார மூலமறை விதித்தா யென்றும்
மோதகமுங் கோடுமணிக் கையாவென்றும்
மூவித மங்கல ஞான மெய்யா வென்றும்
வேத பரிபுர கமல பாதா வென்றும்
விக்கினங்கள் தீர்த்தருளுந் நாதாவென்றும்
மேதயர்கள் துதி கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்

9

கரிமுகனைக் கொன்றமரர் கணத்தைக் காத்தாய்
காகுத்தன் கொலைப்பழியைக் கணத்திற்றீர்த்தாய்
திரிபுரத்தை யெரிக்கவரு தேரைப் பேர்த்தாய்
தினைக்குறவர் மலர்க் கொடியைச் சேய்குச் சேர்த்தாய்
புரி நெகிழா விருவினையும் போகப் பார்த்தாய்
புனல் கவிழ்ந்துப் புரு கூதர்க்கருணை கூர்த்தாய்
விரி மலர்ப்பூம் பொழிற் கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

10

வரதகர வபயகுட வகட கும்ப
மதவறுகு முக சுமுக வரவேரம்ப
பரத நட கமல பத நி மல போத
பரம சுக வமுத நித மருளுநாத
புரதகன னரிய சுத விமல வேக
பூரண புண்ணிய புனித புராணயோக
விரததவ மலி கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

11

மதிய மலி செஞ்சடையீராடீரூஞ்சல்
வஞ்சமலி செஞ்சடையீராடீரூஞ்சல்
துந்தி மலி போதக முவந்தி ராடீரூஞ்சல்
சுவைமலி மோதகமுவந்தீராடீரூஞ்சல்
கதிமலியும் சலமுடித்தீ ராடீரூஞ்சல்
கறைமலி சஞ்சல முடித்தீராடீரூஞ்சல்
விதியடியர் துதி கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

## வாழி

ஆவாழி யருள் வாழி யறங்கள் வாழி
அருந்தமிழும் பழமறையா கமும் வாழி
பூவாழி பொன்னின் மழை பொழிந்து வாழி
பூதி கண்டிகை யைந் தெழுத்தும் பொலிந்துவாழி
தேவாழி மாவை நகர்ச் செய்வேள் வாழி
செந்தமிழி னூஞ்சலிசை சிறந்து வாழி
மேவார்க்கும்மருள் கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரும் வாழி வாழி.

நவாலியூர் திரு. க. சோமசுந்தரப் புலவர் பாடியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மாவைக் கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் பேரில் பாடியவை

(சைவத்திரு: பொ. அம்பலவாணக் குருக்கள்)

**1** 28-5-57

வெல்லங்கலந்திடு மெட்பொரி மோதகம் வெண்கரும்பும்
கல்லுங் கிழங்கவல் கற்கண்டு பலாப்பங் காய் கனியும்
வெல்லங் குசந்தந்த வெம்பாசம் மேற்கொள்வியன் கரத்துக்
கொல்லங்கலட்டி இறைவற் களித்தருள் கூடுதியே

**2** 25-2-58

சீரகத்தியன் கரத்துச் சிவனளித்த காவிரியை
பாரகத்தி லின்றளவும் பாய்ந்திடச் செய் பரம் பொருளை
நாரகத்தினடியார்கள் நாடு கொல்லங்கலட்டியமர்
வீரகத்தி விநாயகநின் விரை மலர்த்தாளிணை போற்றி

**3** 6-9-59

நேரியன் மகளாமந்த நேரிழை நினைந்து போற்ற
வேரியங் கொன்றை வன்னி வில்வமும் பாங்கர் சூழும்
நீரியல் கேணிக் கொல்லங்கலட்டியினிலையங்கொண்டு
காரியசித்தி காட்டுங் கணேசனின் கழல்கள் போற்றி

**4** 4-9-61

பண்ணேறு மென் மொழியாள் பரமனிடங் கொண்டதுபோல்
விண்ணேறு வெண்முருக்கின் விரிநாக வல்லி வளர்
மண்ணேறு மடியார்கள் மகிழ் கொல்லங்கலட்டியுறை
எண்ணேறு மோதகங் கொள் ஏரம்பகாத்தருளே.

**5** 18-5-63

தாழை நறுங் கூவினஞ் சார்தாம் பூவிக் கொடிநிரைகள்
வாழை பலா மாவன்னி வளர் கொல்லங்கலட்டியுறை
பேழை நிகர் பெருவயிற்றோய் பெருச்சாளிவாகனத்தில்
ஏழை மனங்களி கூர எழுந்தருளிக்காத்திடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 19-5-65

பொருள் பொலியுந் திருமகள் சேர்புகழ்க் கொல்லங்கலட்டியுறை
புழைக்கை யீசா
இருள் பொழியும் மலர்க் கூந்தல் எழிலாரும் வல்லபை நின் இடப்பால் ஆக
அருள் பொழியுந் திருவிழிகள் அழ கொழுகுந்திருமேனி அடியேன் காணத்
தெருள் மொழியெம் புகலிடமாஞ் செங்கமலத் திருவடியென் சிரத்திற்
சேர்ப்பாய்

7 28-4-67

சீர்திகழும் சித்திபுத்தித் தேன் மொழியா ளுடனமரும் தேவே நின்னைக்
கார்த்திகழும் பொழிற் கொல்லங்கலட்டியனே கணபதியே காப்பாய் என்று
நார்திகழ நல்லறுகு மந்தாரம் நறுவன்னி நயந்து சாத்தித்
தார்திகழும் திருமுடியாய் தமியேனுன் சரணடைந்தேன் சற்றே பாராய்

8 18-8-67

எக்கருமஞ் செய்தாலும் எத்தகையோராயினுமென் இடையூறின்றி
அக்கருமஞ் தொடங்குங்கால் அதுமுடிப்போன் நீ யென்றே அணைவார்
நின் தாள்
சக்கரமால் தன் மருகா தளிர்க்கொன்றை சார் கொல்லங்கலட்டி மேவும்
அக்கரமாம் மேனியனே அருள் வலவை மணவாளா அபயங்காணே.

9 31-1-68

தீராத வினைதீர்க்கும் சித்தி புத்தி பாகனெனத் தேடிவந்தே
ஆராத காதலுடன் அடிபணிவார்க் கருள் கொல்லங்கலட்டி ஐயா
வாராத செல்வமெலாம் வருவிக்கும் வரதனும் நீ வணங்கி வாழ்த்தும்
சீரான மெய்யன்பர் சிந்தனையை நிறைவேற்றும் தேவா போற்றி

மேற்படி வெண்பாக்களை தொகுத்து
இம்மலரில் கொல்லங்கலட்டி வீரகத்
திப் பிள்ளையார் கோவில் தெற்குவீதி
நொத்தாரிஸ் வழவு குடும்பத்தின
ரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எங்கள் பிள்ளையார்

சு. துரைசிங்கம், நொத்தாரிஸ் வளவு, கொல்லங்கலட்டி.

"எங்கள் பிள்ளையார்" என்று உரிமையுடன் கூறுவதற்குத் திருவருள் பாலித்திருக்கிறது. உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவி வழங்குவது "எங்கள் பிள்ளையார்" வழிபாடுதானே!

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது நமது முன்னோரது அருமையான திருவாக்கு. இதனுடைய பொருளையும் மாருதப்புரவீகவல்லியால் கொல்லங்கலட்டி வீரகத்திப்பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் பதியையும் அதனையடுத்துத் தெற்கு வீதியில் அவர் தம் திருவருள் நாடி அமைந்துள்ள எங்கள் இல்லத்தையும் உன்னுந் தொறும், மனத்திற்கு ஒரு மகிழ்ச்சியும், வாழ்க்கையில் பெற முடியாத பேரின்பத்தைப் பெற்றுவிட்ட ஒரு திருப்தியும் எங்களுக்கு ஏற்படுவது உண்டு.

நமது முன்னோர் செய்த அரிய தவத்தின் பயனாகவே, கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகருக்கு நாங்கள் மீளா அடிமைகளாகி இருந்து வருகின்றோம் ஓடி விளையாடும் பருவம் முதல் கிழக்கு வீதியில் அமைந்துள்ள வித்தியாசாலையிற் படித்த நாள் வரை நாங்கள், கோயில் உண்டு பள்ளி உண்டு, வீதியில் விளையாட்டு உண்டு என்று வேறு வினை புரியாது வினைகளை வேரறுக்கும் வேழ முகத்தானின் அருட்கடலில் மூழ்கியவாறு காலத்தைக்கழித்ததை நினைவுகொள்ளும்போது மீண்டும் அந்தப்பருவம் வராதா? என மனம் ஆசைப்படுகின்றது! அங்கலாய்க்கின்றது!

கோயில் மணி அடித்ததும், கண்ணை மூடி, விநாயகருக்கு ஒரு வணக்கம். அல்லது வேட்டியைக்கட்டிக்கொண்டு, எங்கள் வீட்டுவாசலுக் கெதிர்வாசலாக உள்ள கோயில் வாசல் வழியாக ஓடோடியும் சென்று பூசையிற் கலந்து கும்பிடுவோம். திருவிழாக்காலங்களில் எங்கள் வீட்டு வாசலையே ஒரு கோபுரமாக அமைத்து, நிறைகுடம், குத்து விளக்கு, தோரணம் வாழை முதலியவை வைத்து அலங்கார மேடை அமைத்து வெளி வீதியால் விக்கின விநாயகன் பவனிவரும்போது, தோப்புக்கரணம் போட்டு, வழிபட்டு அருச்சனை செய்து அடியார் கூட்டத்துக்கு முப்பழங்கள், சுண்டல், வடை முதலிய சிற்றுண்டிகள் கொடுத்து அகமகிழ்வோம்.

எங்கள் செல்வம் விநாயகர் தந்த செல்வம். எங்கள் குலப்பெருமை விநாயகர் அளித்தது எங்கள் கல்வி கணபதி தந்தது. எங்கள் வாழ்வும் வேழமுகத்தான் தந்ததுவே! எல்லாம் அவரே!

நித்திரையிலிருந்து எழுந்ததும் விநாயகருடைய எண்ணம் வீட்டைவிட்டு வெளியே வேலையாகச் செல்லும் போதும் விநாயகருடைய எண்ணம். வீட்டுக்கு வரும்போதும் அவருடைய தியானம்! விநாயகருடைய எண்ணத்திலிருந்து விலகுவது என்பது நடவாத ஒரு செயலாகும். என்னே எங்கள் பாக்கியம்.

ஆத்திசூடியமர்ந்த தேவனை-ஏத்தியேத்தித்
தொழுவோமியாமே! என்றும்

கொன்றைவேந்தன் செல்வனடியினை
என்று மேத்தித் தொழுவோமியாமே!
என்றும்

உலகநீதி புராணத்தை யுரைக்கவே
கலைகளாய் வருங் கரிமுகன்காப்பு-
என்றும்

பிரணவப் பொருளாம் பெருந்தகை
யைங்கரன்

சரணவற் புதமலர் தலைக் கணிவோமே!
என்றும் வணங்கி

விக்கின விநாயகனுடைய பாதாரவிந்தங்களை மனதில் பதித்து அவர் வீற்றிருக்கும் அரண்மனையையும் ஊர்ந்து பவனிவரும் ஊர்தியையும் உயிர் ஊட்டி, எம் வாழ்வைச் சிறக்கச் செய்வோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*of*

# MEENAMBIKA LTD.

174B, Messenger Street,

COLOMBO 12

*Telephone* : 5663 / 7416

*Telegrams*: KALIYANI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

From

KUNDANMALS LTD.

MAIN STREET.

COLOMBO.

With Best Compliments

From

RANJANA STORES

52, BANKSHALL STREET,

COLOMBO 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ANTON"

*Rigid P. V. C. Pipes and Fittings*

*are better than the*

*best known*

*Manufactured by*

## ST. ANTHONY'S THERMOPLASTIC INDUSTRIES

**752/1 BASELINE ROAD,**

**COLOMBO-9.**

*Telegrams:* **ANTONINDUS**

*Telephone:* **92161-62**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Compliments*

*from*

# A. S. S. SANGARALINGAMPILLAI & Co., Ltd.

136, PANCHIKAWATTA ROAD,

COLOMBO 10.

*With the Compliments of :*

# SELLAMUTTUS

CEYLON LEADING TEXTILE HOUSE

**2nd Cross Street, Colombo 11**

*Telephone* : 2 4 1 4 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் காப்பு

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

"திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகடசக்கரத் தாமரை நாயகன்
அகடசக்கர வின்மணி யாவுறை
விகடசக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்"

இதன் பொருள்: திகட சக்கரம் செம் முகம் ஐந்து உளான் - விளங்கா நின்ற பத்துத் திருக்கரங்களும் உள்ள சிவபெருமானது; சகட சக்கரம் தாமரை நாயகன் - (பூமியாகிய) தேரின் சக்கரமாகிய சூரியனுனவன்; அகடு அசக்கு அரவின் மணியா உறை - (தாம் விசுவரூபம் கொண்ட பொழுது) தமது வயிற்றினிடத்து உதர பந்தனம் என்ற அணியாகக் கட்டப்பட்ட (ஆதிசேடனுகிய) பாம்பினுடைய (உச்சியிலுள்ள) இரத்தினம் என்று கருதும்படி அவ்வுச்சியிற் பொருந்தி விளங்கப் பெற்ற, விகட சக்கரன் மெய்ப்பதம் - விகட சக்கர விநாயகப் பெருமானுடைய மெய்மையாகிய திருவடிகளை, போற்றுவாம் - (இந்நூல் இடையூறின்றி இனிது முடிதற் பொருட்டுத்) துதிப்பாம் என்றவாறு.

இதனுலே 'மும்மலகாரியமாகிய முப்புரங்களைத் தகனம் செய்யும்பொருட்டுத் தந்தையாகிய சிவபிரானுர் முகஞ்செய்தஞான்று, அவர் இவர்ந்தருளும் தேருக்குச் சக்கரமாயமைந்த பெருந்தவ விசேடத்திலே போலும் பலர் புகழ்ஞாயிறு ஆகிய சூரியன் ஆனவன், மைந்தராகிய விநாயகப்பெருமான் ஒருசமயம் தமது திருப்பெருவடிவத்தைக் கொண்டருளியபோது, அப்பெருமானின் திருப்பெருவயிற்றை உதரபந்தனமாய் அணிசெய்யும் பாக்கியம் படைத்த அரவத்தின் உச்சிக்கண்ணுய் அவ்வரவத்தின் உச்சி மணியேயாமென்று தன்னை எண்ணத்தக்க வகையில் ஒன்றி ஒழிசெய்து விளங்குவானுயினன்'' என்றிங்ஙனம் விநாயகப் பெருமானின் திருப்பெரு வடிவம் இருந்த படியை ஒருவாற்றுல் தியானஞ்செய்து, அவர் அன்னராயினும் அடியார்க்கெளிவந்து விகடஞ் செய்து வேண்டினனுக்கும் அருள்செய்த அவரது கருணை நிலையை நினைவுகூர்ந்து, அப்பெருமானின் மெய்ம்மையாகிய திருவடிகளைப் பேணி அவ்வாற்றுற் பொய்ம்மைத் தொடங்குகளைப் போக்கி உயதி தலைப்படுவோமாக, என்றதாம்.

இனி அகடு என்பதனை ஆகுபெயராகக் கொண்டு அகட்டின் கண்ணதாகிய உதர பந்தனம் எனப் பொருள் செய்து, அவ்வுதர பந்தனத்திற் பதித்த தொருநாகரத்தினம் போல உறைதலைப் பெற்ற என மூன்ருமடிக்குப் பொருளுரைப்பினும் அமையும் இப்பொருளில் கடை குறைந்து நின்ற ஆக என்பது உவம உருபு. முந்திய பொருளில் செயவென் வாய்பாட்டு வினையெச்சம். உரைஎன்பது காலங்கரந்த பெயரெச்சவினை. இது தாமரை நாயகன் வினை இதனை விகட சக்கரன் வினையாக்கிப் பொருள் கோடலுமொன்று.

## சிறப்புத் திருநாமங்கள்

"விகட சக்கர விநாயகர்" விகட சக்கர கணபதி" என்பன காஞ்சிபுரத்தில் ஏகாம்பர நாதராலயத்தில் எழுந்தருளியிருக்கும் கணேசமூர்த்தியின் சிறப்புத் திருநாமங்கள். தமது குலதெய்வமாகிய "காஞ்சிமாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி,' யைப் போற்றுதல் செய்து, அத்தெய்வத்துக்குப் புராணம் செய்யப்புகுந்த ஆசிரியர் புராணக்காப்புச் செய்யுள்களில் காஞ்சியாகிய அத்தலத்து விநாயகரை, அவருடைய சிறப்புத் திருநாமங்களாற் போற்றுவாராயினர். வீரபத்திரக் கடவுள் தக்கன் செய்த யாகத்தை அழித்தபொழுது அவர் மீது விட்டுணு விடுத்த சக்கராயுதத்தை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரபத்திரக் கடவுள் பூண்டிருந்த வெண் டலை ஒன்று கௌவியது. விட்டுணுவின் பொருட்டு அச்சக்கரத்தைப் பெறக்கருதி அவருடைய சேனுதிபதியாக விடுவசேனன் காஞ்சிபுரத்திற் சென்று சிவலிங்கம் தாபித் துப் பூசை செய்தான்'' வீரபத்திரக் கட வுள் அங்கு எழுந்தருளினர். அப்பொழுது விடுவசேனன் அச்சக்கரத்தைத் தரும்படி பிரார்த்திக்க, அவர் "சக்கரம் நமது கை யில் இல்லை - கபாலங் கவ்வியதாயின், எவ்விதத்தினலாயினும் அதுவே தரப் பெற்றுக்கொள்'' என்றார். விடுவசேனன் காலிரண்டையும் கையிரண்டையும் வளை த்து, வாயையும் நாசியையும் கண்களையும் அசைத்துப் பற்கள் தோன்ற விகடக் கூத் தாடினன். அதனைக் கண்டாரெல்லாரும் நகைக்க, வெண்டலையும் நகைத்தது நகைத்தலும், சக்கரம் அதன் வாயினின் றும் விழ, விநாயகக் கடவுள் அதனை விரை ந்து கவர்ந்து கொண்டு ஒன்று மறியாதார் போன்றிருந்தனர். விடுவசேனன் அது கண்டு அவர் திருமுன்னும் விகடக்கூத்தாடி வேண்ட அவர் அச்சக்கரத்தை அவன் கையிற் கொடுத்தருளினர். இக்காரணத் தால் அவ்விநாயகக் கடவுளுக்கு 'விகடசக் கர விநாயகர்'' என்னும் பெயருண்டா யிற்று. இக்காரணந்தானே "விகடசக்கர கணபதி'' என்னும் பெயருக்கும் பொருந் மாறு காண்க. இவை சிறப்புத் திருநாமங் கள்.

## தொல்காப்பியமும் வீரசோழியமும்

"விகடசக்கரன் மெய்ப்பதம் போற்று'' தலை முதற்கண் மேறகொண்ட ஆசிரியர், ''விகட சக்கர'' என்பதற்கியைய எதுகை நயம்பற்றித் ''திகடசக்கர'' எனத் தொடங்குவாராயினர். எதுகை நயம் பற் றிய இத்தொடக்கம் தமது குலதெய்வத் தானெய்திய தென்பது. திகழ்தசக்கரம் திகடசக்கரம் எனப் புணர்ந்ததற்கு விதி தொல்காப்பியத்து எழுத்ததிகாரப் புற நடைச் சூத்திரத்துக் ''கிளந்த வல்ல செய் யுளுட்டிரிநவும்'' என்பதனுற் கொள்ளப் படும். "இலக்கியங் கண்டு அதற்கிலக்கணம் இயம்புதல்'' மரபாமாதலின், அம்மரபு பற்றிப் பிற்றை ஞான்றெழுந்த வீரசோழி யமானது திகடசக்கரம் என்ற இலக் கியங் கண்டு, அதற்கிலக்கணம் இயம்புவான் புகுந்து, சந்திப்பட லத்துப் பதினைந்தாஞ் செய்யுளில் "நான் கொடு மூன்றென்பதா முயிரின் பின்பு நல் வருமேல் என்ற ஞகாரமதாகும் பதினைந் தொடெண்ணிரண்டாய்த் தான்றுடற் பின்னர்த் தகாரம் வரினிரண்டுந் தொடர்பால் ஆன்றனவைந் தாமுடல் ஆம் [ முன் பிலொற்றுக் கழிவுமுண்டே'' என்றிவ்வாறியம்பிற்றென்க.

''விகடசக்கரம்'' என்னும் இயல்பு புணர்ச்சி வடநூன் முடிபு, சகடசக்கரம் என்பதற்கும் இது பொருந்தும். அகட சக்கு என்பதில் ஒற்றிரட்டாமை எதுகை நயம் பற்றியதாலென்க.

''செம்முகமைந்துளான்''என்றது சதா சிவமூர்த்தியை. சிவவடிவங்களுள் சதா சிவ மூர்த்தம் ஒன்று. சதாசிவ மூர்த்தியின் ஐந்து திருமுகங்களாவன: ஈசானம், தற் புருடம். அகோரம், வாமதேவம், சத்தி யோசாதம் என்பனவாம்.

சகடம் - தேர். தன்னைக் கூடிய வழி மலர்தலும் பிரிந்த வழிக்கூம்புதலும் தாம ரைக் குணமையிற் சூரியன் ''தாமரை நாயகன்'' எனப்பட்டான். சக்கரமாகிய சூரியன் என்க. சக்கரம் - சில்.

பூமி - தேர். சந்திரசூரியர் தேர்ச்சிற் கள். மகாமேரு வில். ஆதிசேடன் விண்ணுண். மகாவிஷ்ணு பாணம் என்றிங்ஙனம் முப் புரதகன உபகரணங்களை வருணித்துப் பேசுவன புராணங்கள்.

## விநாயக பரத்துவம்

விநாயகப் பெருமானின் விசுவரூபத் தைச் சிந்திக்கும் வழிச் சூரிய மண்டலம். அப்பெருமானின் உபரபந்தனத்திற் பதித் ததொரு மணியாயமைதலைக் காட்டி விநா யக பரத்துவம் உணர்த்திய ஆசிரியர், இயைபு பற்றி அம்மண்டிலம் தேர்ச்சக்கர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயமைதல் காட்டிச் சிவபரத்துவம் உணர்த்தியருளினர்.

இவ்வாற்ருல் இந்த இருவரினதும் வேருகாத குமர பாததுவத்தைச் சிந்திக்கச் செய்தருளினருமாயினர்.

மெய்ம்மையாகிய உலகில் இறுகப் பற்றுதற்குரிய உறுதுணையாகிய புணை அவன் திருவடிகளேயா மாதலின் அவை மெய்ப்பதம் எனப்பட்டன.

''போற்றுவாம்'' என நாவின் தொழிலாகிய தோத்திரத்தையே கூறினரேனும் ஒரு மொழி யொழி தன்னினங் கொளற்குரித்தே'' என்பதனல், மனத்தால் தியானித்துக் காயத்தால் வணங்குவாம் என்பதுங் கொள்ளப்படும். பன்மையாற் கூறினர், கந்தவேள் புராணந்தன்னைக் காதலித்து ஓதுவோர் பொருள் விரிப்போர் கேட்போர் யாவரையும் உளப்படுத்தென்க. ''யாம்'' என்பது தோன்ரு எழுவாய்.

உச்சியின் மகுடமின்ன
ஒளிர்தர நுதலினேடை
வச்சிர மருப்பினெற்றை
மணிகொள்கிம் புரிவயங்க
மெய்ச்செவிக் கவரிதூங்க
வேழமா முகங்கொண்டுற்ற
கச்சியின் விகடசக்கரக்
கணபதிக் கன்புசெய்வாம்.

மேலைச் செய்யுளில் ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ் சோதியாகிய விநாயகப் பெருமானின் திருப்பெரு வடிவத்தைக் குறிப்பிட்டு, அப் பெருமானின் அடிமுடிகள் எண்ணுதற்கும் எட்டாதவைகளாகையினலே, மெய்ப்பதங்களாகிய திருவடிகளை ஒருவாறு நினைவு கூறச்செய்து, நடுவாகிய திருவயிற்றின் பருமை பெருமைகளை அதன் கண் அணியாகிய உதரபந்தனத்தில் ஆதித்திய மண்டலம் ஒரு சிறு மணியாயமையுமுகத்தால் உணரவைத்து அம்முறையானே அப் பெருமானின் திருமுடியையும் நினைவிலிருத்தப் புகுந்த ஆசிரியர் இச்செய்யுளால் 'உச்சியில் மகுடம்' 'நெற்றியில் ஓடை' ''மருப்பில் கி புரி'' என்றிவைகள் செய்யும் ஒளி விசேடங்களோடும் மெய்ம்மையாகிய செவிகளோடுங் கூடியதும் பிரணவ வடிவினதும் ஆகிய வேளமுகத்தை உள்ளமாகிய கிழியில் அன்பு ஒழுகஒழுக எழுதி'' அடியும் நடுவும் முடியும் இருந்தவாற்ருல், மற்றை அங்க உபாகங்களைத் தத்தமக்கியன்றவற்ருல், 'பாதச் சிலம்பு' 'பொன்னரைஞாண்' 'பூந்துகிலாடை' பேழை வயிறு' 'பெரும் பாரக்கோடு' 'சிந்துரத் திலகம்' 'அஞ்சு கரம்' 'அங்குச பாசம்' 'நீலமேனி' 'நான்றவாய்' 'மூன்று கண்' 'முப்புரி நூல' 'இரண்டு செவி' 'இலங்கு பொன்முடி' என்றிங்ஙனம் இயைபு செய்து, எப்படியன் எவ்வண்ணத்தன் என்று எண்ணுதற்கரியானை ஒருவாற்ருனெண்ணித் தியானிக்கச் செய்தருளினரென்க. 'திருத்திய அருந்தவம்' என்று தொடங்குகின்ற சங்கற்ப நிராகரணக்காப்பும் ஈண்டுச் சிந்தனை செய்தற்குரியது.

''மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி யன்னன்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி''

இச் செய்யுட் பொருளை ''முழு மதியன்ன ஆறுமுகங்களும்''; ''முண்டக மலர்ந்த தன்ன மூவிரு முகமுங் கண்ணும்'' ''ஆறிரு தடந்தோள் வாழ்க'' என்றற்ருெடக்கத் தோத்திரப் பொருள்களோடியைத்துச் சுப்பிரமணிய பெருமானைத் தியானஞ் செய்க.

தினகரன் கதிர்காம மலர் 1967



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOLDEN AGENCY

66, OLD MOOR STREET,
COLOMBO 12.

*Importers & Dealers in:*

★ METHYLATED SPIRITS
★ CORN FLOUR
★ ARROWROOT FLOUR
★ VIROL
★ BOVRIL
★ OVALTINE
★ TURPENTINE

*And Stockists of:*

EMPTY TINS, LOZENZER TINS & TOFFEE TINS
VARIOUS AND ASSORTED SIZES
AVAILABLE FROM STOCK.

*T'Grams*: ACIESAR     *T'Phone*: 78350

வருக!     வருக!!

அறுசுவை உணவிற்கு
அனைவரும் நாடுவது

ஸ்ரீ முருகன் கபே

291, கிருலே வீதி,
நாரம்பிட்டியா.

# SRI MURUGAN CAFE

291, Kirula Street,
NARAHENPITIYA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# விநாயகர் திருவுருவின் தத்துவம்

— ஆ. காசிநாதன், ஆசிரியர் —

''திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு — முருவாக்கும்
ஆதலால் வானோரு மானைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை'' (திருவிரட்டை மணிமாலை)

சிவபிரான் உமாதேவியாருடன் கைலை மலைச் சாரலில் உள்ள பூஞ்சோலையில் திருவோலக்கமாய் எழுந்தருளியிருந்தார் அதிலுள்ள ஓவியங்களுள் ஒன்று பிரணவ சொரூபமாகிய ஆண் யானையும் பெண் யானையும் வெவ்வேறென்று சொல்லமுடியாதபடி ஒன்றோடொன்று கூடியிருக்கும் பாவனையாகச் சித்திரிக்கப் பட்டிருந்தன. அதைச் சிவபெருமானும் உமாதேவியாரும் பார்த்தபோது அதிலிருந்து ஐந்து திருக்கரங்களும், மூன்று கண்களும், சந்திரனைத் தரித்த சடையும், யானை முகமும், மும்மதங்களையுமுடைய விநாயகக்கடவுள் திருவவதாரஞ் செய்தருளினார். அவரைச் சிவபிரானும் தேவியும் எடுத்து மடிமீதிருத்தி, சிவகணங்களுக் கெல்லாம் தலைவராக்கி அதனால் கணபதி எனத் திருநாமமிட்டு, யார் எந்தக் கருமத்தைச் செய்தாலும் அவரை முதலில் வணங்கித் தொடங்க வேண்டு மெனவும், அப்படித் தொடங்கிய கருமம் இடையூறின்று நிறைவேறுமெனவும், திருவாய் மலர்ந்தருளினார்.

ஆலயங்களில் உள்ள மூர்த்திகள் ஒவ்வொன்றும் இறைவனது அளவில்லாத குணங்களை வெளிப் படுத்தும் சின்னங்களாக உள்ளன. விநாயக உருவம் இறைவனது தன்மைக் குணங்கள் முழுவதையும் வெளிப்படுத்துகின்றது. விநாயகனென்றால் தனக்கு மேலாக ஒரு நாயகனை இல்லாமல் தானே அனைவருக்கும் நாயகன் என்பது பொருள். அனீசுவரன், அநாயக ஏகநாயகம் என்ற பெயர்களெல்லாம் இதே கருத்தை வெளிப்படுத்துவன.

விநாயகரது வதனம் மாத்திரம் யானை வடிவாயிருக்கின்றது. வலது பக்கம் அறக் கருணை மதமும் இடது பக்கம் மறக் கருணை மதமும் பொழிகின்றது. அவரது முகம் ஓங்கார எழுத்தின் வடிவமாக உள்ளது. உலகத்தில் மனைவி தனது புருஷனை நாயகன் என்பாள். வேலைக்காரன் தன் முதலாளியை நாயகன் என்பான். இவர்கள் உடல் சம்பந்தமான நாயகம் செலுத்துபவர்கள். உயிர்களைப்பற்றிய நாயகம் விநாயகர் ஒருவருக்கே உரிவது. சுப்பிரமணியர், வீரபத்திரர், என்போர் சிவகுமாரராக இருந்தாலும் பிள்ளையார் என்றபதம் விநாயகர் ஒருவரையே குறிக்கும்.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும் மலங்களையும் தாமே நீக்குபவரென்பதை உணர்த்த கஜமுக சங்காரத்திற்காக முரித்த கொம்பை வலதுபக்கக் கீழ்த் திருக்கரத்தில் தரித்திருக்கின்றார். கஜமுகாசுரனது மார்பைத் தமது கொம்பினாலே பிளந்த போது, அவன் மலவலி கெட்டுப் பெருச்சாளி ரூபங் கொண்டுவர, திருவடி ஞானத்தைக் கொடுத்துச் சுத்தனுக்கி எக்காலமும் தமக்கு வாகனமாயிருக்கும் பேற்றைக் கொடுத்து ஆட்கொண்டு, ஆன்மாக்களின் ஆணவத்தை நீக்கி அடிமை கொள்பவர் தாம் என்பதை விளக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்து நாத தத்துவங்களின் சொரூபம் அமைந்த துதிக்கரமானது, ஆன்மாக்களுக்குப் பேரானந்தப் பெருவாழ்வைக் கொடுப்பதாகிய அத்துவித முத்தியின் இயல்பை உணர்த்துகின்றது. மெய்யன்பர்கள் தமது சீவபோதத்தைக் கவனமாக்கி அர்ப்பணஞ் செய்ய, அதனைத் தாம் கொண்டு தமது திருவயிற்றுனுள்ளே யடக்கி, அதற்குப்பதிலாக அவர்களுக்குச் சிவஞானத்தைக் கொடுப்பவர் தாமே யென்பதை உணர்த்துவதற்குக் கவள உணவாகிய மோதகத்தை இடது கீழ்த் திருக்கரத்தில் ஏந்தியிருக்கின்ருர். எல்லா அண்டங்களினதும் உள்ளும் புறம்பும் கலந்து நிறைந்து அவைகளுக்கு அதீதப் பட்டு விளங்குபவர் தாமென்பதை உணர்த்தப் பேழைவயிருடையவராகவிருக்கின்ருர். ஈசானம் முதலிய ஐந்து திருமுகங்களினுலும் பஞ்சகிருத்தியஞ் செய்பவர் தாம் என்பதைச் சிவபிரான் உணர்த்துதல் போல இவரும் துதிக்கை முதலிய ஐந்து திருக்கரங்களாலும் உணர்த்துகின்ருர்.

சிவபிரான் ஞானேபதேசம் செய்தது போல விநாயகரும் மெய்கண்டார், நம்பியாண்டார் நம்பி, விஷ்ணுமூர்த்தி, புருசுண்டி முனிவர் முதலானவர்களுக்கு ஞானேபதேசம் செய்தார்.

பிரமதேவர் விநாயகரை வழிபடாமல் படைப்புத் தொழிலைச் செய்ய விகாரமான வடிவங்கள் தோன்றி அவரை மதிக்காமல் ஏசி இகழவும், உதைக்கவும், அடிக்கவும் சென்றன. தன் பிழையையுணர்ந்து விநாயகரைத் தியானிக்க அவர் ஞானசத்தி, கிரியாசக்தி என்னும் இருவரையும் வழிபடக் கொடுத்தார். அவர்கள் சித்தி, புத்தி என்னும் பெயருடன் வளர்ந்து தவஞ்செய்ய விநாயகர் வந்து அவர்களைத் திருக்கல்யாணம் செய்து கொண்டார்.

மெய்யன்பர்கள் கேட்ட வரங்களைத் தவருது கொடுக்கும் அருள் வள்ளல் ஆதலால் வரத கணபதி, கற்பக விநாயகர், ஆசா பூரகர் என்றும், சுப்பிரமணியருக்குத் தினைப்புனத்திலே வள்ளியைக் கூட்டி வைப்பதற்கு மதயானை வடிவங் கொண்டு உதவி செய்தமையால் ஆபத்சகாய விநாயகர் என்றும், முதலில் தம்மை வணங்கித் தொடங்குவோருடைய கருமங்களைச் சித்தியடையச் செய்தலினுலே சித்திவிநாயகர் என்றும், விக்கினங்களை நீக்கிவைத்தலால் விக்கினேஸ்வரன் என்றும் துதிக்கப்படுகின்ருர். எதை எழுதத் தொடங்கினுலும் முதலில் பிள்ளையார் சுழி இடுதல் விநாயக வணக்கமாகும்.

நாம் சிரசிலே விநாயகரை நினைத்துக் குட்டும்போது மத்தகத்திலிருக்கும் அமிர்தம் பெருகிச் சுழுமுன நாடிமார்க்கமாக மூலாதாரத்தில் ஒளி ரூபமாக இருக்கின்ற விநாயகரையடைந்து அபிஷேகமாக அவர் திருவுள்ளம் மகிழ்ந்து கிருபை செய்வாரென்பதே குட்டிக்கும்பிடுதலின் பாவனையாகும்.

---

திங்களங் குளவியென்னத் திகழொரு மருப்பிற் சோதி
தங்குகிம் புரிவயங்கத் தடமணி மகுடந் தாங்கித்
துங்கநல் வரங்க ணல்குந் தூயசீ ரிராம சேதுப்
புங்கவர் வணங்கும் யானை முகத்தனைப் போற்றல் செய்வாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes*
*from*

# V. MANICKAM & BRO.

IMPORTERS, EXPORTERS & COMMISSION AGENTS

34, 4th CROSS STREET,
COLOMBO-11.

T. P. No. 23408 Telegrams: "THAVAYOGA"

*With Best Wishes*
*from*

# S. ARUMUGAM & BROS.

IMPORTERS EXPORTERS & COMMISSION AGENTS

104, FOURTH CROSS STREET,
COLOMBO-11.

T. P. No. 29833.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| SINGARAMS | DIMAHCO | ZUBAIDAS |
|---|---|---|
| நாகரிக<br>ஜவுளி தினுசுகளுக்குப்<br>பேர்பெற்ற<br>ஸ்தாபனம் | சுத்த<br>தங்க நகைகளுக்கு<br>சிறந்த<br>ஸ்தாபனம் | எல்லாரையும்<br>திருப்திசெய்யும்<br>ஜவுளி தினுசுகள்<br>இங்கு கிடைக்கும் |
| 47, SEA STREET,<br>COLOMBO-11.<br>T. P. No. 20875 | 89, SEA STREET,<br>COLOMBO-11. | 139, SEA STREEET,<br>COLOMBO-11. |


விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினல்
கண்ணிற் பணிமின் கனிந்து.

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# விக்கினேசுவரப் பெருமான்

பண்டிதர், வே. சங்கரப்பிள்ளை

எல்லாம் வல்ல எம்பெருமான் மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் பிற உயிர்களுக்கும் தலைவராய் அவர்களைக் காத்துத் திருவருள் பாலித்தருளும் பேரருள் நிறைந்தவர். தேவரும் மனிதரைப் போலவே இன்ப துன்பங்களை அனுபவிப்பவர். அவர் சூக்கும உடம்போடு வாழ்பவராதலின் நமது கண்ணுக்குத் தோற்ற மாட்டார். பொதுவாகத் தேவர் எல்லா உயிர்களுக்கும் நன்மையே செய்கின்றவர், நன்மைக்கு அடையாளமாக வாழ்பவர். ஆயினும், அவர்கள் ஆணவமென்னும் அறியாமை வயப்பட்டுத் தக்க யாகத்திற் கலந்தது போல, சிலநேரம் தீமைகளும் செய்வதுண்டு அசுரர் பொதுவாகத் தீமை செய்கின்றவர்; தீமைக்கு அடையாளமாக விளங்குகின்றவர். அவர்களிலும் நன்மையை நாடிக் கடவுளை வழிபடுகிறவர்களும் உண்டு. எப்போதும், நன்மைக்கும் தீமைக்குமிடையே, பெரிய போராட்டங்கள் நடந்துகொண்டேயிருக்கும். நன்மை தீமை கலவாத வாழ்க்கையில் என்றும் இன்பம் காணமுடியாது·

நன்மைக்கு அடையாளமாக விளங்கும் தேவர்களுக்கும் தீமைக்கு அடையாளமாக விளங்கும் அசுரர்களுக்கும் என்றும் இயல்பாகவே பகைமையும் போராட்டங்களும் இருந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. இமைப் பொழுதும் எம் நெஞ்சில் நீங்காதிருக்கின்ற சர்வலோக நாயகராகிய எம்பெருமான் திருவருள் உடையவர் மனிதராயினும், தேவராயினும், அசுரராயினும், துன்பம் அடையார்.

கயமுகாசுரன் வரலாறு யாவரும் அறிந்ததே. கயமுகாசுரன் தேவர்களுக்குத் துன்பஞ் செய்தான். தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவன் விக்கினேசுவரப் பெருமான் மூலம் தேவர்களின் இடையூற்றைத் தீர்த்தருளினர். விக்கினம் ஈசுவரன் விக்கினேசுவரன் விக்கினம் - இடையூறு. ஈசுவரன் – தலைவன். விக்னேசுவரப் பெருமான் மெய்யன்போடு தன்னை வழிபட்டுச் செய்பவர்களின் கருமங்களை இடையூறின்றி இனிது நிறைவேறச் செய்வர். தன்னை வழிபடாது மறந்து செய்யுங் கருமங்களுக்கு இடையூறு செய்தருளுவர். இக்கருத்து கந்தபுராணம் கயமுகனுற்பத்திப் படலத்திலே சிவபிரான் கூற்றாக,

"என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்
முன்னரே உனதுதாள் முடியுறப் பணிவரேல்
அன்னர்தஞ் சிந்தைபோல் ஆக்குதி; அலதுனே
உன்னலார் செய்கையை ஊறுசெய் திடுதி"

'மிகு கொடை வடிவினர் பயில்(கின்ற) வலிவலம் (என்னுந் தலத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறை (கின்ற) இறை, (யாகிய எம்பெருமான்) உமை பிடியதன் உரு கொள மிகு கரியது வடி (ஆண்யானை வடிவத்தைத் தான் கொ(ண்)டு தனது அடி வழிபடும் அவர் இடர் (களை) கடி (கின்ற) கணபதி வர அருளினன்' என விக்கினேசுவரர் வரலாற்றைத் திருஞானசம்பந்த சுவாமிகள் தேவார மூலம் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள்.

மாவிட்டபுரத்தின் சிகரம் போல் விளங்குவது கொல்லங்கலட்டி. இவ்வூரில் எக்கருமத்தினை எவர் செய்யத் தொடங்கும் போதும், அக்கருமம் இடையூறின்றி இனிது முடியும் பொருட்டு வீரசக்தி விநாயகப் பெருமானை வாழ்த்தி வணங்கி வழிபாடாற்றியே அக்கருமத்தைச் செய்யத் தொடங்கி வெற்றியடைவதுண்டு.

அங்ஙனம் யாம் போற்றி வழிபட்டு வரும் தெய்வம் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலினை வேண்டிய வேண்டிய திருப்பணிகளைச் செய்து, நித்திய பூசையும் பிற உற்சவங்களையும் தடையின்றி நடைபெறுவதற்கான தொண்டுகளைப் புரிந்து வருவது எங்கள் மேற் பொறுத்த கடனாகும்.

நல்ல சொற்பொருளுஞ நடாத்தவு
மெல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லும் யானை முகத்தினை மேவிவாழ்
வல்ல பைக்குரி யானை வழுத்துவாம்.

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரின் தத்துவார்த்தம்

**கணேச பக்தன்**

கொல்லங்கலட்டி விநாயகராலயம் சைவாகம முறைப்படி நித்திய நைமித்தியங்கள் நடைபெறும் ஆலயமாகும். ஆதி சைவ பரம்பரையில் வழிவந்த ஆசாரியர்களே அங்கு பூஜை செய்கின்றனர். வழிபாட்டிற்கும் ஆதிசைவப் பெருமக்களைக் கொண்டதாய் அவ்வாலயம் அமைந்திருக்கின்றது. அங்கு ஆண்டுக் கொருமுறை மகோத்ஸவம் நடைபெறுகின்றது. மஹோத்ஸவம் என்பதைப் பிரித்துப் பார்க்கும்போது மஹ—பெரிய, உத் - உயர்வான, ஸவ –சிருஷ்டி முதலிய காரியங்கள் என்று பொருள்படும் ஆகவே மஹோத்ஸவம் இறைவனது உயர்ந்த சிருஷ்டி முதலிய ஐந்தொழில்களைக் குறிக்கும் பெரிய குறியாவது என்று கூறலாம். கொல்லங்கலட்டி விநாயகராலயத்தில் பத்து நாட்கள் மஹோத்ஸவம் நடைபெறும்.

ஐந்தொழில்களையும் [பஞ்சகிருத்தியங்கள்) ஆன்மாக்களின் பொருட்டு இறைவன் நடத்துகின்றுனென்று சைவ சமயம் கூறும். அவை சிருஷ்டி (படைத்தல்) திதி (காத்தல்) சங்காரம் (அழித்தல்) திரோபவம் (மறைத்தல்) அநுக்கிரகம் (அருளல்) என்பனவாம். ஐந்தொழில்களையும் பத்து நாள் திருவிழாவில் உள் அர்த்தமாக வைத்திருக்கின்றுர்கள் பெரியோர்கள். பொதுவாக மண்வெடுத்தல், முளை தெளித்தல், கொடியேற்றம் முதலியவைகளைச் சிருஷ்டி கிருத்திய மாகவும், வாகன உற்சவம், யாகம், பலியிடுதல் முதலியவைகளைத்திதி கிருத்தியமாகவும், தேர் உற்சவம் சங்கார கிருத்தியமாகவும், சப்தமில்லாமல் மௌனமாக நடக்கும் உற்சவம் திரோபவகிருத்தியமாகவும், தீர்த்தோற்சவம் அநுக்கிரக கிருத்தியமாகவும் கொள்ளப்படும்.

சங்கராகிருத்தியம் எனக் கொள்ளப்படும் தேர் உற்சவம் கொல்லங்கலட்டி விநாயகராலயத்தில் தீர்த்தோற்சவத்துக்கு முதல் நாள் நடைபெறுகின்றது. அத் தேர் உற்சவத்தில் இழுக்கப்படுந் தேரை சைவாகம முறைப்படி தத்துவார்த்தம் நிறைந்த தேராக அமைத்தல் வேண்டும்.

தேர்த்திருவிழாவில் தேரின் மீது கடவுள் வருகின்றுர். முப்புர தகனஞ் செய்த காலத்து எல்லாத் தேவர்களும் தேரின் பல பகுதிகளாக நின்று சிவபெருமானுக்குத் தொண்டு புரிந்தனர் என்பதைப் பல புராணங்களிற் பரக்கக் காணலாம். அண்ட கோடிகளெல்லாம் திரிபுராதிகளால் இம்சிக்கப்பட்டுப் பொறுக்க முடியாமல், காப்பாற்ற வேண்டும் என்று கதறிச் சிவபெருமானை வேண்ட அவர் எல்லாத் தேவர்களும் உறுப்புக்களாக அமர்ந்துள்ள தேர், வில், பாணம் முதலியவற்றேடு சென்று, எந்தத் தேவருடைய உதவியுமின்றி. எந்த ஆயுதத்தையும் உபயோகப்படுத்தாமல் சிரித்து எரித்தார் திரிபுரங்களை என்பது புராணம். இவ்வாறு எரிந்தது சங்காரமாயினும் உலக கோடிகளைக் காப்பாற்றுவதற்கே. இங்கே முப்புரமென்பது மும்மல காரியமென்று திருமூலர் கூறியதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். மும்மலச் சேட்டைகளினின்றும் விடுவித்து ஆன்மாக்களை இளையக்கிரமத்தில் காப்பாற்றுவதற்கும் இத்தேர் உற்சவம் அறிகுறியாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Compliments of*

# ASBESTOS CEMENT INDUSTRIES LTD.

*Manufacturers of*

## "ELEPHANT"

ASBESTOS CEMENT PRODUCTS

---

*With Best Compliments*

*From*

# NATHAN & COMPANY

REGISTERED CEYLONESE FIRM

MERCHANTS, AGENTS, IMPORTERS & EXPORTERS.

NO. 71 FOURTH CROSS STREET,
COLOMBO 11.

*Telephone:* 29241 *Cable:* NATHAN CO·

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes*

*From*


# N. K. MYLVAGANAM & CO.

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

**68, FOURTH CROSS STREET,**

**COLOMBO 11.**

*T'Grams:* "VAGANAM" *Dial:* 22250




## ST. PETERS
## SURELY
## THE BEST TILES

Approved by the P.W.D. Department

AVAILABLE EVERYWHERE

ALSO AT

# KATHIR HARDWARES

**11/1, Stanley Road,**

**JAFFNA.**

*Dial:* 7130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டாளி வர்க்கமும் பணம் படைத்தோரும்

பாவித்துப் பயனடைவது

ஈழத்தில் தயாராகும்

தலைசிறந்ததும் தன்னிகரற்றதுமான

# 786 கல்கி பீடிகள்

தயாரிப்பாளரும் விநியோகத்தரும்:

**சின்னத்துரை அன் பிறதர்**

79 & 79/1, மெசன்சர் வீதி,

கொழும்பு-12.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# THE CHEAPSIDE TEXTILE PEOPLE

**90, Second Cross Street,**

**COLOMBO 11.**

*T' phone*: 20163

# A. M. P. S. SELLASAMY NADAR & CO.

ESTATE SUPPLIERS

**139, 4th. Cross Street,**

**COLOMBO 11.**

*Head Office*:
BADULLA

*T. phone No:*
26447

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயமும் திருப்பணியும்

செ. இலங்கைநாயகம்

தமிழ்ச் சைவ மக்கள் வாழுகின்ற இடங்களிலெல்லாம் "மாவிட்டபுரம்" என்னும் திருநாமம் மாருதப் புரவீக வல்லியின் நினைவுக்கு ஒரு இலக்கியமாய் வழங்கிவருகின்றது. அவ்வரசிளங் குமரியுடன் தொடர்புபட்டதாய் எழுந்ததே வீரகத்திப் பிள்ளையார் திருக்கோயில் ஆகும். அத்திருக்கோயில் பழமை கடந்து, புதுமையில் இப்போது உருப்பெற்று விளங்குகின்றது.

புதுமையில் மேலும் மெருகூட்டி, எமது பண்டை வேதாகம நெறிகளுக்கு அமைந்து பொலிவு பெற விளங்குவதற்கு ஏற்ற வகையில், சைவ நன் மக்கள் ஒருங்கே திரண்டு பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களுடைய தெய்வத் தொண்டுக்குப் பக்கபலம் அளித்து, திருப் பணிகள் செவ்வனே நிறைவேறுவதற்கு யாம் எல்லோரும் பணிபுரிய வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

இப்பொழுது, கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் திருப்பணிக் குழுவின் கொழும்புக் கிளையினர் எடுத்துவரும் பெரு முயற்சிகளால், திருப்பணிகள் சீருடன் நடைபெற்று வரும் என்னும் நம்பிக்கை எம்மகத்தே தோன்றுகின்றது. நின்றும் இருந்தும், கிடந்தும் நடந்தும், என்றும் யாம் மனத்திலிருத்தி வணங்குகின்றதும்பிக்யான், நாங்கள் செய்யும் பணிகளையெல்லாம் சிறிதும் குறை ஏற்படாவண்ணம் நிறைவேற்றத் திருவருள் பாலிப்பார் என நம்புகின்றோம்.

முந்திய திருப்பணி வேலைகளுக்கு இலங்கையிலிருந்து மட்டுமன்றி, மலாயாவிலிருந்தும் பலர் நிதி திரட்டி உதவியளித்தார்கள். அதைப்போலவே இவ்வேளையிலும் இனிமேலும் வேண்டிய வேளைகளிலெல்லாம் உதவிகளை யாம் எதிர்பார்க்கலாம். இறைவனின் திருப்பணிகளுக்குத் தாராளமாக உதவுவதற்குப் பின்நிற்பவர் யார்? ஒருவருமே இருக்கமாட்டார்கள்.

திருப்பணி செய்ய வேண்டும் என்று நினைத்தவர்கள், முயற்சி செய்தவர்கள், தூண்டுதலளித்தவர்கள், துணைநின்றவர்கள், பொருள் வழங்கியவர்கள் எல்லோருக்கும் கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகப் பெருமானின் பூரண கிருபை கிடைக்குக்; கிடைத்தல் வேண்டுமென அவரையே வந்தித்து, வழுத்தி, வணங்குகின்றேம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SOUTHLAND TRADERS

IMPORTERS AND DEALERS IN MOTOR SPARES AND HARDWARE ALL KINDS OF FLAIN & READY MADE SPRING BLADES AVAILABLE.

**426, SRI SANGHARAJA MAWATHA, COLOMBO 10.**

TELE Phone : 27143
Grams "Southlands"

என்றும் பிரகாசத்துடன் விளங்கும்

வெள்ளிப் பாத்திரங்கட்கும்

நீலச் சுடர்விட்டெரியும்

அடுப்புகட்கும்,

சகலவிதமான எனமல், அலுமினியம் பாத்திரங்கட்கும்
பெயர் பெற்ற இடம்:

# சிவஞானம் பிறதேஸ்

71, குமார வீதி,

கொழும்பு-11.

தொலைபேசி எண் : 22946

249673

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களைப்பா?

# தாகமா?

# பசியா?

★ அறுசுவைமிகு சிறந்த சைவ உணவிற்கு பெயர் பெற்ற இடம்.

★ கல்யாணம், விருந்துபசரணைகள், விசேட வைபவங்களுக்கான ஓடர்கள் ஏற்று, திருப்தியளிக்கும் வகையில் தயாரித்து வழங்கப்படும்.

ஒருமுறை விஜயம்,
தொடர்ந்து பலமுறை
உங்களைத் தூண்டும்!

## ஸ்ரீ முருகன் லொட்ஜ்,

92, காலி வீதி,
வெள்ளவத்தை.

தொலைபேசி எண்: 81979


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Horse Brand Galvanised Buckets, made of fine quality mild steel sheets and galvanised by our exclusive 'GALVEX' hot-dip process, are available in all popular sizes.

குதிரை மார்க் · HORSE BRAND

# HORSE BRAND

## GALVANISED BUCKETS

*Manufactured by*— ELBEHEM HOUSE, Colombo. 11

*Distributed by*— THANALAKSHMY STORES, Tellippallai.

(for Northern Province only)

*Printed by* ... Sebastian Hill, Colombo 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna
249678
Library

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aayanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org